BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 05 Issue - 97 11 Friday July 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052






RETAIL SOLUTIONS HOSPITALITY SOLUTIONS

**Visual Business Retail Ltd.**
020 8540 8886
Sales@VisualBusinessRetail.com
40 COLWOOD GARDENS, LONDON SW19 2DT

HARDWARE: Chip & Pin Terminal, Weighing Scale, Hand-held Terminal
VBR Retail EPOS, VBR Retail Back Office, VBR Paper Round, VBR Hospitality EPOS
SOFTWARE: VBR Hospitality Back Office, VBR Warehouse & Distribution
உங்கள் வியாபாரம் பெருக இன்றே அழையுங்கள்

**JK Accountants**
CHARTERED CERTIFIED ACCOUNTANTS
- ☑ Self employment registration
- ☑ Tax credits / Self Assessment
- ☑ Tax Returns for HSMP/IGS visa holders
- ☑ Tax Returns for Buy-to-Let Properties
- ☑ Company formation / Business Plan
- ☑ Capital Gains Tax / VAT/ Payroll
- ☑ Solicitors Accounts / Bank Reconciliation

230 High Street North, East Ham, E12 6SA
www.jkaccountants.com
Tel: 0208 471 2200 ACCA

**ABBEY TRAINING.NET**
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
Call: 020 8640 9900 / 07960 669 575

**NESS & Co.**
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
> Criminal Cases
> Civil Litigation
> Family
> Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family


அப்பங்கள் பலவிதம்
ஒவ்வொன்றும் ஒருவிதம்
சுடச் சுட அப்பம்
உங்கள் கண் எதிரே
Western Hut
FULLY LICENCED & AIR CONDITIONED
Tel: 020 8664 8568 Mob: 07983 612 491
844 London Road, Thornton Heath, CR7 7PA

**Luxmi Food Stores**
Birmingham (In front of Balaji Temple)

Off-Licence, News Agent, Grocery
For all your Daily Needs.
இது ஒரு தமிழ் களஞ்சியம்
Tel: 0121 552 3016
134 – 136 Dudley Road East, Oldbury, Birmingham West Midlands, B69 3EB


உங்கள் பொன்னான வாழ்வை என்றென்றும் உயர்த்திக் காட்டும் பொன் நகைகளின் மதிப்பை அபி தரும் கவர்ச்சியான நகைகளில் மட்டுமல்ல
**ABI DIAMOND**
சிறந்த தரத்திலும் விலையிலும் நீங்கள் பெற்றுக் கொள்ள எப்போதும் மறவாதீர்கள்!
Tel: 020 8423 0055
305 Northolt Road, South Harrow, HA2 8JA

Authentic and effective Kerala ayurvedic treatments
- ☑ Highest Quality Treatment
- ☑ Affordable prices
- ☑ Friendly & quite environment


ஒரு தடவை மட்டும் தொலைபேசியில் அழையுங்கள். பல மன உளைச்சல்களும் கவலைகளும் தீரும்.
Treatment rooms provided with Steam Sauna & Shower
Kerala AYURVEDA Male & Female therapists avaliable
1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford / Sudbury Town, UB6 0NA
Tel: 020 8902 1104 / 020 8902 1707
www.kahc.co.uk [Free Parking Available]

July2008 முதல் வேலைவாய்ப்பிற்கும், மேற்கல்விக்குமான,
**FREE ESOL & ICT @ TRTEC**
**AAT- Weekend Classes**
July2008 முதல் Towards Dec 2008 exam @ TRTEC
Alperton, Gants Hill & Tooting
பல்கலைக்கழக அனுமதிக்கும் வேலைவாய்ப்பிற்கும்
aat AAT-Assodation of Accounting Technidan
Foundation / Intermediate / Technician Levels
அத்துடன் Citizenshipற்கான ஆங்கில வகுப்புகள்
PLEASE REGISTER AS SOON AS POSSIBLE
வகுப்புகளில் குறிப்பிட்டளவு இடங்களே இருப்பதால் அனுமதிக்கு முந்திக்கொள்ளவும்.
TRTEC - 020 8554 2963 (Head Office Mon-Fri 9:30 – 3:30) e-mail: admin@trtec.org

# SMART CLOSETS
**BEDROOM SPECIALISTS**

உறுதியான அழகான
தரமான மலிவான
தளபாடங்கள்





## FOR A FREE, No obligation quote
## CALL NOW!!!
## 020 8573 2452 / 07944 554 724




**PROFESSIONAL DESIGN SERVICE**
**QUALITY BESPOKE CRAFTMANSHIP**
**AFFORABLE PRICES**





Term s & condition s: prices varies on project size and choice of accessories

# ADORA
**ADORA FINANCIAL SERVICES LTD**
MORTGAGES, LOANS & INSURANCE

வீடு வாங்குவதற்கான மற்றும் வியாபார கடன் வசதிகள்.

எமது நிறுவனம் உங்கள் மோட்கேஜ் ஒழுங்குகள் **(Mortgages)**, கடன் ஒழுங்குகள் **(Personal Loans/Secured Loans/ Business Loans)**, மற்றும் காப்புறுதி **(Home Insurance & Life Insurance)** போன்ற சேவைகளை ஒழுங்கு அமைத்து தர காத்திருக்கிறது.
உங்கள் மோட்கேஜ் நிர்ணயிக்கப்பட்ட காலம் நெருங்குகிறதா? உடன் எம்முடன் தொடர்பு கொண்டு அதனை நேரத்துடன் புதுப்பியுங்கள்.

வியாபார நிறுவனத்தை சொந்தமாக்க முடியவில்லை என்ற ஏக்கமா?
கவலை வேண்டாம். வியாபார நிறுவன கடன் **(Business Mortgages)** ஒழுங்குகள் செய்து தர காத்திருக்கிறோம்.
காப்புறுதி வழியாக உங்கள் *மற்றும்* குடும்ப பாதுகாப்பை உறுதிப்படுத்தி உள்ளீர்களா? வருமுன்னே காப்போம்!!

அத்துடன் உங்கள் வியாபார நிறுவனங்களின் கணக்கியல், வரி **(Accountancy, Taxation & Business Consultancy)**, தொடர்பான வியாபார ஒழுங்கு முறைகளை ஒரே கூரையின்கீழ் *(AA Accountancy Services மூலம்)* ஒழுங்கமைத்து வழங்குவோம்.
**(VAT, Payroll, Business Plans, Book-Keeping, Business Start Up, Self Assessment Tax Returns, Company Formation, Management/Year End Accounts, CIS Refunds, Secretarial Services and Bank Accounts.** ***All for a very competitive Fee.***

**Mortgages, Remortgages, Buy-to-Let, Business Mortgages, Personal Loans, Secured Loans, Insurance & Protection.**

**All under one roof......**

**இலவசமாக உடன் அழையுங்கள்: 0800 085 2908**

**W: www.adorafs.co.uk E: info@adorafs.co.uk**
**Adora House, 4 Scarsdale Road, Harrow, Middlesex, HA2 8LW**
**F: 020 8423 3900 M: 07916 177 513**

Adora Fanancial Services Ltd is an Appointed Representative of The Vision Network, Corinthian House, 279 Tottenham Court Road, London, W1T 7RJ, which is authorised and regulated by the Financial Services Authority No. 300007. * Registered in England No. 5918431, Consumer Credit Licence No.591987

# TILMAX®
*Quality Comes First*

## BEST PACKAGE FOR RETAILERS




## STRESS FREE EASY PAYMENT SCHEME




# 0208 55 55 055 / 07939 99 22 33
328 HIGH ROAD LEYTONSTONE, LONDON E11 3HS
**WWW.TILMAX.CO.UK**




### உற்சாகப் படுத்துங்கள்

ஒரு பேப்பரிலை திரு. கே. எஸ் பாலச்சந்திரனின் கட்டுரைகள் சில நாட்கள் இடைவெளியின் பின் மீண்டும் வெளிவருவதையிட்டு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

அவருடைய கட்டுரைகளை வாசிக்கும் போது எமது இளமை நாட்களுக்கே எம்மை அழைத்துச் சென்று விடுகிறார். அவர் தொடர்ந்து எழுத வேண்டுமென்பதே எமது அவா.

— சந்திரன்

### எப்பப் பார்த்தாலும் அக்காமாரைப் பற்றி..

ஆரப்பா இந்த ராஜேஸ் அக்கா. எப்ப பார்த்தாலும் அவவைப்பற்றி எழுதுறியள். கட்டினவரையே பொரியல் சட்டியாலை போட்டுத்தாக்கின ஆள் எண்டு வேறை பயப்படுத்திறியள்.

விட்டால்ரோசக்கா, சோடாமூடியக்கா எண்டு அவையளைப் பற்றியும் எழுதத் தொடங்கியிடுவியள்.

— பத்மநாதன்

### கடவுள்

கடவுள் இருக்கிறார். இல்லை. இவையெல்லாம் அவைக்கு உதவும் வார்த்தைகளா? ஆனால் இது காலம் காலமாக வாதத்தில் உள்ளதுதான் வேதனைக்கு உரிய விடயம்.

ஒரு முறை கடவுள் இல்லை என்று ஒருவன் கூற உண்டு என்று மற்றவன் கூற வாதம் விரிந்தது.

மூன்றாமவன் வந்து உங்கள் இருவரினதும் நடைமுறை வாழ்கையில் என்னால் வித்தியாசம் காண முடியவில்லையே. பின் ஏன் வாதிடுகிறீர்கள் என்றார். பதிலும் இல்லை வாதமும் முற்றுப் பெற்றது.

நடைமுறைக்கு வாருங்கள். கடவுளைத் தேடத் தேவையில்லை.

— அபயன்

### ஏசியா ஏரோப்பிளேனாய்...

காய்கறி கள்ளன் ஒருவனை இயக்க மொண்டின்ரை வாசலிலை கிறேனேட்டோடை கண்ட சிறியின்ரை ஏசியா சைக்கிள் ஏரோப்பிளேனாய் பறந்த மாதிரி எனக்கும் நடந்தது.

சீனாவிலை செய்த என்ர பிளையிங் பிஜன் பறந்ததும் உண்மை தான். ஆனால் நான் சொன்ன கள்ளன் இஞ்சையும் வந்திட்டான். இப்ப மார்க்சிசம், பின் நவீனத்துவம் எண்டு கதை அளக்கிறான். என்னத்தைச் சொல்ல ..

— மேர்வின்

### இதயச் சந்திரன் எங்கே

ஊடகங்களில் அரசியல் அலசல் என்று அலட்டுபவர்கள் மத்தியில் இதயச்சந்திரனின் அரசியல் அலசல் ஆக்கபூர்வமானது.

நடுநிலமையாளர் என்று பம்மாத்துக் காட்டுகின்ற ஊடகர்கள் மத்தியில் இதயச்சந்திரன் தமிழ்த் தேசியத்தின் தளத்தில் நின்று இயங்கும் ஊடகர்.

அவரது அரசியல் ஆய்வை வாசிப்பதற்காகவே ஒரு பேப்பரை விரும்பி எடுப்பேன். ஆனால் இறுதியாக வந்த ஒரு பேப்பரில் இதயச்சந்திரனின் அரசியல் ஆய்வைக் காண முடியவில்லை. என்ன காரணம்? தயவு செய்து இதயச் சந்திரனின் அரசியல் ஆய்வைத் தொடர்ந்து பிரசுரியுங்கள்

— பிரதீபன்

### பொங்கி எழுவோம்

புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் பொங்கு தமிழ் மூலம் எமது உணர்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இம்மாதம் லண்டனில் நடைபெறுகின்ற பொங்கு தமிழ் விழாவிற்கு இங்கிலாந்து வாழ் தமிழ் மக்கள் எல்லோரும் ஆதரவு கொடுத்து அதை வெற்றி பெற வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

— சுதாகரன்

### முழுப்பெயரையும் எழுதுங்கோ

பேய் எண்டாலும் அது அதுகளுக்கு குடுக்கிற மரியாதையை குடுக்கோணும் பாருங்கோ.

கிழக்கு மா.சபை.மு.அமைச்சர் அவர்களை புள்ளையான் என்று எழுதாமல். மாண்பு மிகு கௌரவ எண்டு போட்டு அவற்றை முழுப்பெயரை ?.. எண்டு எழுதுங்கோ. (பெயர் மறந்து போயிடுச்சு. கீறிட்ட இடத்திலை அவற்றை பெயரை போடுங்கோ). அதுதான் அவருக்கு மரியாதையாய் இருக்கும்.

— பாலகணேசன்

### புதிய ஆட்கள் வேண்டும்

ஒரு பேப்பர் நல்ல விசயங்களைத் தருகிறது தான் ஆனால் ஒரே ஆக்கள் தான் திரும்பத் திரும்ப எழுதுகினம். வாசகர்கள் எழுதி அனுப்புகிற விசயங்களை நீங்கள் பிரசுரிக்க மாட்டியளோ? அல்லது ஒருத்தரும் விசயங்களை அனுப்புவதில்லையோ? உங்கள் ஒரு விழா வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்

— பகீரதன்

### பொங்கு தமிழ்

மற்றைய நாடுகளில் உள்ள தமிழர்களின் வழிகாட்டலுக்கு அமைய பிரித்தானியாவிலும் ஆயிரக் கணக்கில் திரள்வோம். தமிழ் இன விடிவிற்காய் நாம் காட்டும் அக்கறையை உலகிற்கு பறை சாற்றுவோம். வேண்டுமென்றே உறங்கும் உலகம் என்ன நடைபெறுகின்றது என்றாவது சற்று அவதானிக்கட்டும்.

— தமிழன்பன்

### நிறுத்த மாட்டீர்களா?

உங்கள் அறுவை தாங்க முடியவில்லை. சிவ தியாகராஜா எழுதும் தமிழரும் அவர்கள் மதங்களும் என்ற தொடரை வாசிக்க இயலாமல் இருக்கிறது. அவர் சொல்வது நல்ல விசயங்கள் தான். ஆனால் விளங்க முடியவில்லையே?

விளக்கமாகவும் இரண்டொரு பேப்பர்களில் முடிகிற மாதிரியும் எழுதினால் நல்லது. இன்னுமொன்று கம்பன் அபயபிரமன் அல்ல. கம்பன் அபரபிரமன். கருத்தைப் புரிந்து கொண்டு கட்டுரையாசிரியர் தலையங்கம் போடுவது நல்லது.

கம்பன் அபயம் அளிக்கிற பிரமனா? அல்லது கம்பன் இவ்வுலகத்துப் பிரமனா? அதாவது படைப்பாளியா? பரம் - மேல்லோகம். அபரம் - இவ்வுலகம். பிரமன் படைத்தல் தொழில் செய்வதால் படைப்பாளியை பிரமன் என்பர். அதனால் தான் படைப்பதனால் என் பெயர் இறைவன் என்று கண்ணதாசன் பாடினார்.

— சரவணன்

### பாமரனுக்கு வாழத்துக்கள்

எனக்கு நன்கு பிடித்த எழுத்தாளர் பாமரன் அவர்கள் ஒரு பேப்பரில் எழுதுவதனையிட்டு மிக்க மகிழ்ச்சி.

எங்களுக்காக ஒரு கட்டுரை தொடரை எழுத முன்வந்துள்ள அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரசுரிக்கும் உங்களுக்கும் நன்றி.

- ஈழத்துப் பாமரன்

## கொழும்புக் கடிதம்

எல்லாரும் எப்படி இருக்கிறியள். நாங்கள் இஞ்சை நலமா இருக்கிறம் எண்டு சொல்ல முடியாத நிலமையிலை இருக்கிறம்

வாழ்க்கைச் செலவு ஒரு புறம் கழுத்தை நெரிக்குது. சிங்கள அரசாங்கத்தின்ரையும் அவை ஏவி விடுற காவல் துறைக் காறறின்ரையும் சட்டங்கள் ஒரு பக்கம் திக்கு முக்காட வைக்குது. என்ன செய்ய இந்த நிலமையும் ஒரு நாளும் மாறும் எண்ட நம்பிக்கையோடை காலத்தைத் தள்ளிக் கொண்டு இருக்கிறம்.

மற்றும்படி சிங்கள நாட்டு நடப்புகள் எல்லாம் வழமை போலவே கோமாளித் தனமாத்தான் இருக்குது.

முந்தி ஊர்க் கடையளிலை நாளையிலை இருந்து கடன் தரப்படும் எண்டு ஒரு போர்ட் வைச்சிருப்பினம். ஒரு நாளும் கடன் இல்லை எண்டதை நாசுக்காச் சொல்லி இருப்பினம்.

சிங்கள இராணுவத் தளபதியும் அந்தத் தந்திரத்தைத் தான்? கையாளுறார் போலை கிடக்கு. அண்டைக்கு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலை இன்னும் ஒரு வருசத்துக்குள்ளை புலிகளை முழுக்க அழிச்சிடுவம் எண்டு சொல்லியிருக்கிறார். ஒரு வருசத்தக்கு முந்தியும் உவர் உப்படித்தான் சொன்னவர். அப்படியெண்டால் உந்த ஒரு வருச காலக்கெடு இன்னும் எத்தனை வருசத்துக்கு இருக்கப் போகுதெண்டு தெரியேல்லை.

இநதப் பத்திரிகையாளர் மாநாடு நடந்து ரெண்டு மூண்டு நாளுக்குள்ளை தன்ரை பதவிக் காலத்தை இன்னுமொரு வருசத்துக்கு நீடிக்கிறதுக்கு அப்பிளிக்கேசன் போட்டிருக்கிறாராம். அப்ப உதைச் சாட்டி மனிசன் இன்னும் கன காலத்தக்குப் பதவியிலை இருக்கப் போறார் எண்டு நல்லா விளங்குது.

நாய்க்கு எங்கை அடி பட்டாலும் காலைத் தூக்கிற மாதிரி சிங்கள நாட்டிலை என்ன பிரச்சினை வந்தாலும் உடனை புலிப் பெயர் அடிபடத் தொடங்கிடும்.

இப்படித்தான் எதிர்க்கட்சிக் காறறின்ரை ஆசீர்வாதத்தோடை சம்பளத்தைக் கூட்டித் தாங்கோ எண்டு அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய வெளிக்கிட உது புலிகள் சொல்லித் தான் எதிர்க்கட்சிக் காறர் ஆர்ப்பாட்டத்தைத் தூண்டி விடுகினம் எண்டு ஒரு அமைச்சர் அறிக்கை விடுறார்.

இன்னுமொரு அமைச்சர் புலிகள் அடுத்த நாப்பத்தெட்டு மணித்தியாலத்துக்குள்ளை பெரிய குண்டுத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருக்கினம். அவையளின்ரை வேலையை லேசாக்கத் தான் வேலை நிறுத்தம் நடக்குது எண்டு புலுடா விடுறார்.

உப்பிடி புலிப் பேரைச் சொல்லிச் சொல்லியே மஹிந்தவும் அவற்றை கூட்டாளிகளும் தங்கடை கஜானாவை நிரப்பிக் கொண்டிருக்கினம். உவையளின்ரை சூத்துத் தெரியாமல் சிங்களச் சனமும் ஆமாம் போட்டுக கொண்டிருக்குது.

சரி நான் அடுத்த கடிதத்திலை மிச்சத்தை எழுதுறன்

- கொழும்பான்

JACOBS SOLICITORS

Solicitors, Notaries Public and Commissioners of Oaths

Work Undertaken:

Crime all areas

Private and Criminal Defence Service (Legal Aid)

723A Romford Road, Manor Park, London E12 5AW

Tel: 020 8911 9171 Fax: 020 8911 9151

e-mail: jacobssolicitors@btconnect.com



- Conveyancing
- Housing
- Landlord & Tenant
- Immigration
- Civil Litigation
- Family & Children
- Public Law including Judicial Review

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JULY 11, 2008, ISSUE 97

## அத்துமீறும் சிறிலங்காவிற்காக பரப்புரை

சிறிலங்கா அரச தலைவர்கள் என்னதான் உள்நாட்டில் வீரம் பேசினாலும், சர்வதேச அளவில் வெறுக்கப்படும் நிலையை எதிர்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். ஒரு சில ஆசிய நாடுகளுடன் அவர்களது உலகம் சுருங்கி விடமுடியாது. ஆதலால் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் மனிதவுரிமை மீறல்கள் பற்றிய செய்திகள் சர்வதேச அரங்கிற்கு எட்டுவதனை தம்மாலான வழிகளைப் பாவித்து தடுக்க முற்பட்டு வருகின்றனர்.

முதலில் சர்வதேச ஊடகங்களுக்கு செய்தி வழங்கி வந்த உள்ளூர் ஊடகவியலாளர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டார்கள். பின்னர் உள்நாட்டில் நியாயமாகச் செயற்படக் கூடிய ஊடகவியலாளர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. சிலர் கொல்லப்பட்டார்கள், இன்னும் சிலர் கடத்தப்பட்டு தாக்கி அச்சுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். திசாநாயகம், ஜசிகரன் போன்ற ஊடகவியலாளர்கள் இன்னமும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இச்செயற்பாடுகளின் தொடர்ச்சியாக, புலம்பெயர்ந்த நாடுகளில் இயங்கும் தமிழ் ஊடகங்களையும் முடக்கிவிட பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 'தரிசனம்' தொலைக்காட்சியின் ஐரோப்பிய சேவையை இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் துணையுடன் நிறுத்தியமையை இங்கு குறிப்பிடலாம்.

உண்மை நிலவரங்களை பொய்ப்பிரச்சாரங்களாக காட்ட முனையும் சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளின் பிரச்சாரத்துக்கு தம்மால் தாக்கு பிடிக்க முடியாமல் உள்ளதாக நீலிக்கண்ணீர் வடிக்கிறது. மறுபுறம் சிங்கள இனவாதிகளான சில ஊடகவியலாளர்களை தமது வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமித்து, வெளிநாடுகளிலும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. விளம்பரநிறுவனங்களின் மூலமாக வலதுசாரி நிலைப்பாடுடைய ஊடகங்களினை இவர்களால் இலகுவில் அணுக முடிவதால், அவற்றின் மூலமும் பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

இப்பிரச்சாரத்தின் வெளிப்பாடாக, கனடாவிலிருந்து வெளிவரும் 'National Post' பத்திரிகை புலம் பெயர் தமிழ் மக்களால் நடாத்தப்படும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளை பயங்கரவாதத்துடன் தொடர்பு படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது. வெள்ளையின மேலாண்மையை பாதுகாப்பதை நோக்காகக்கொண்டு செயற்பட்டு வரும் இந்த ஊடகங்கள், குடியேறிகளுக்கு எதிரான தமது வழமையான செயற்பாடுகளை பயங்கரவாத அச்சுறுத்தலுடன் தொடர்புபடுத்தி நியாயப்படுத்த முற்படுகின்றன.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வது என்ற போர்வையில், இங்கும் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதனை மனிதவுரிமை ஆர்வலர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*நேற்றுப் போலை இருக்கு பேப்பர் வந்து, அதுக்கிடையிலை இரண்டு கிழமை ஓடிப்போயிட்டுது. நீண்ட பகற் பொழுதுகள் அமைகின்றபோதும் ஏதோ சோலி வந்து நேரத்தை தின்றுவிடுகிறது.*

*பிரான்ஸ், சுவிஸ், ஜெர்மனி, ரொறன்ரோ எண்டு ஒவ்வொரு இடத்திலையும் பொங்கு தமிழ் நடந்தபோது **ஒரு பேப்பர்** காரன்கள் காரிகளையும் சந்தித்திருப்பீர்கள். கடைசியாய் லண்டனிலை நடக்கிறது. அதிலையும் லண்டனிலிருக்கிற எங்கடை ஆக்கள் கலந்து கொள்ளுவினம்.*

*போன பேப்பரிலை எங்கடை தோழன் பாமரனை அறிமுகம் செய்யக்கிள்ளை ஒரு பிழை விட்டுட்டம். அவரை ஒரு விரிவுரையாளர் என எழுதிவிட்டோம். உண்மையில் அவர் ஒரு பல்கலைக்கழகத்திலை வேலை செய்யிறது மட்டும்தான் எங்களுக்குத் தெரியும். மற்றபடி என்ன வேலையெண்டு எங்களுக்கு தெரியாது. இத்தனை விவரமான ஆள் அங்கை வேறை என்னத்தை செய்யப் போறார் எண்டிட்டு விரிவுரையாளர் என எழுதிப் போட்டம். அவர் அங்கை ஒரு பேராசிரியர் ஆக இருந்தால் ஒழிய அப்பிடி எழுதினதுக்காக எங்களோடை பிரச்சனைக்கு வரமாட்டார் எண்டு நினைச்சம். ஆனால் பேப்பர் அவற்றை கைக்கு போய் சேருவதற்கிடையிலை நண்பன் கருணா (அந்தக் கருணா இல்லைங்கோ) போட்டுக் கொடுக்க, தோழர் கடுப்பாயிட்டார். தவறுக்கு மன்னிப்பு கோருகிறோம். இன்ரநெற்றிலை முன்னூறு டொலருக்கு வாங்கின டொக்டர் பட்டத்தை தங்கடை பெயருக்கு முன்னாலை போட்டு விலாசம் காட்டுகிற காலத்தில் இப்படியொருவர் இருப்பதையிட்டு பெருமிதம் கொள்கிறோம்.*

*பேப்பரை காசுக்கு விற்காட்டி இனி நாங்கள் வாசிக்கிறதை நிப்பாட்டப் போறம் எண்டு பல நண்பர்கள் பயமுறுத்துகிறார்கள். இவையிளின்ரை வெருட்டலுக்காகவே காசுக்கு விற்க வேண்டி வரப்போகுது என்ற அபாய எச்சரிக்கையை விடுகிறோம். பிறகு ஏனடியப்பா காசாக்கினியள் எண்டு நீங்கள் புலம்பக் கூடாது.*

*இதுக்கிடையிலை பேப்பர் நிருவாகம் கைமாறி விட்டது எண்டொரு வதந்தி அடிபடுகிறது. உண்மை பொய் தெரியேல்லை. ஆளாளுக்கு நான்தான் முதலாளி நீதான் முதலாளி எண்டு எங்கடை பிராணனை வாங்காட்டிச் சரி. ஆனானப்பட்ட ரூப்பேர்ட் மேடொக், கொன்றாட் பிளாக் றேஞ்சிலை ஆராவது வருவாங்கள், அவை தாற சம்பளத்திலை கரிபியன் தீவுகளுக்கு கொலிடே போகலாம் எண்ட கனவு வேறை வருது.*

*ஒரு விழாவை எப்ப நடாத்தப் போறியள் எண்டு பலரும் கேட்கிறார்கள். கோடைகாலம் முடியட்டும் பார்ப்போம். அதுக்கிடையிலை போட்டிகளுக்கான உங்களது ஆக்கங்களை அனுப்பி வையுங்கோ.*

*கனடாவிலை இருக்கிற எங்கடை இள்சுகளுக்கு பேப்பர் வாசிக்கிற பழக்கம் இல்லையோ? நாங்களும் கேட்டுக் களைச்சுப் போனம் ஆரும் எழுதிறதாய் தெரியேல்லை. ஐரோப்பாவிலை உங்கடை சொந்தக்காரர் உங்களைப் பற்றி ஒரு மாதிரி நினைக்கினம். அவ்வளவுதான்.*

*மீண்டும் சந்திப்போம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Empires Don't Come Cheap

According to independent reports, Sri Lankan economy is at cross roads. The economic growth slowed for the first time in a year in the first quarter of 2008. While official statistics indicate a 28.2 percent inflation in June 2008, independent economists say that the yearly inflation is more than forty percent.

The Government of Sri Lanka (GOSL) has allocated around twenty percent of its budget, that is almost two billion US Dollars, this year to it's anti-Tamil war.

Lot of Sinhalese people who live in the South of Sri Lanka, especially the ones who could voice their anger without getting arrested or assaulted are up in arms against these hard economic times.

Most Tamils who are living in the South, through the same economic conditions or worse, feel angry but keep their mouths shut. This is because if they protest against the same harsh economic conditions they would be labelled as "terror-friendly Tamils on parade" (as the editors of the National Post of liberal and democratic Canada have put it) and we all know that this label in democratic Sri Lanka is a sure death sentence.

In the mean time Sri Lanka is said to have scored 20th in the Failed States Index (FSI), compiled by the Washington based think-tank, Fund for Peace (FfP) and Foreign Policy magazine.

Last month Fitch Ratings Agency downgraded Sri Lanka's already below investment grade sovereign credit worthiness, saying escalating violence and soaring inflation prompted the move. Another agency Standard & Poor's, downgraded its below investment grade Sri Lanka credit outlook to 'negative' in February 2008.

Thus most people in the Sinhala South are worried sick about their economy. They are complaining and crying about the high food prices and, well, the rising prices of most everything else.

But there is a problem with this crying and complaining. The problem is that hardly any Sinhalese wants to admit that it is all part of the cost of their government's mini-empire and pseudo-imperial adventurism in the Tamil Northeast.

In 2006 when the GOSL marched into Tamil homeland on a murderous scorched earth military adventure, weren't many Sinhalese exuberantly supported their heroic soldiers? Is it not this military adventurism in the Tamil Northeast that has caused the GOSL's spending to soar through the roof? Well, what do the Sinhalese think — that empires come cheap?

It looks like that is exactly what they want.

"People say they'll suffer the hardships as long as the government can finish the war," said Iqbal Athas, a Colombo-based journalist, this week. "We are not against the war. We are ready to sacrifice everything for the war" said a Sinhalese Trade Union leader Mr Sumathipala Manawadu, last week.

Does anyone among the Sinhalese recall what the world used to say when the Soviet Empire came crashing down? The Americans bragged that Ronald Reagan had caused the Soviet Empire to spend the nation into bankruptcy. Of course, there is nothing new about that, as people who lived under the Roman Empire and British Empire learned.

If out-of-control government spending on war was bad for the Soviet Union, why isn't it equally bad for Sri Lanka?

Of course, one big problem is that Sinhalese are convinced that Tamil Northeast is going to be under their control and their military and other institutions would take control (again) of the fertile Tamil lands and the resource rich sea. And also they will be able to use the Tamils as cheap labour and a lucrative market for their Colombo based companies and entrepreneurs. A self-funding imperial operation!

Or they convinced themselves that the Dollar, Sterling & Euro rich expatriate Tamils alone would provide the costs of GOSL's imperialism within ten years by visiting their Sinhalese controlled homeland in thousands and spending their hard currencies there.

Alas, it is not going to be. Year after year, Tamil Northeast has become a veritable black hole of GOSL's war budget; much of it goes up in smoke in the battlefields of the Tamil Northeast.

The future years are not going to be different either.

Thus supporters of GOSL can not pretend that they were not warned. From the inception of the Eelam Wars, most sane people in Sri Lanka and out side kept warning that the costs of these anti Tamil wars would inevitably be reflected in a crashing Rupee and rising commodity prices in Sri Lanka. They pleaded for a peaceful and just political solution according to the principles of internal self determination.

Today, unfortunately all too many GOSL supporters are doing their best to avoid accepting responsibility for rising prices. That is why they are coming up with all sorts of interesting rationales for rising prices and the crashing currency: foreign demand, speculators, oil companies, OPEC, capitalism etc.

Consider Zimbabwe, where prices for food double every hour.

Now, what's the cause of those rising prices in Zimbabwe? The average Zimbabwean might take the same position that the average GOSL supporter takes: "Mysterious, unseen forces in the universe that periodically attack countries, foreign demand, speculators or the business cycle?"

Of course, all those rationales would be nothing more than an attempt to avoid placing responsibility for the rising prices squarely where it belongs — on the out-of-control government spending at the hands of the Robert Mugabe administration in Zimbabwe.

Heck, let's face it: the only people who have a moral right to complain about rising prices of food and most everything else in Sri Lanka are the Tamils, given that they are the ones who have been opposing both the racist state and the imperialist war and the massive government spending needed to fund them.

Unfortunately Tamils can not go demonstrating in the streets of Colombo as their action would be labelled as "terror-friendly Tamils on parade" and "ethnic voters rallying for a parochial, unsavoury cause" and most of them would have ended up in prison camps or six feet under: just like what happened to the Jews who protested against the Third Reich in the ghettos of Europe.

# வெள்ளைவான் கடத்தல் கொடூரம்: தேசத்தின் மாற்ற முடியாத தலைவிதி!

**உதயன்**

**ஆசிரியர் தலையங்கம்**

கொழும்பில் தாராளமாக நடைபெறும் வெள்ளைவான் கடத்தல்களைத் தடுக்கத் துப்பில்லாத இந்த அரசு, விடுதலைப் புலிகளைத் துடைத்தழிக்கப் போவதாக மார்தட்டுவது அபத்தத்திலும் அபத்தம் என்று இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஆளும் தரப்பின் ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த அராஜகத்துக்கு அடிப்படை மனித உரிமை மீறலுக்கு முடிவு எப்போது என்று எண்ணிப் பொதுமக்கள், குறிப்பாகத் தமிழர்கள், பெரும் விசனப்படுகின்றார்கள்.

இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது, அதனை அடியோடு தடுத்து நிறுத்த வேண்டும் என்ற பற்றுறுதி திடசங்கற்பம் கருத்து நிலைப்பாடு அரசியல் தீர்க்கம் அரசுத் தலைமைக்கு வராதவரை இத்தகைய கொடூரங்கள் தொடரவே செய்யும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் இத்தகைய பல்வேறு கொடூரங்களுக்கும், அராஜகங்களுக்கும், அட்டகாசங்களுக்கும் யார் காரணம், யார் பின்னணி, யார் சூத்திரதாரி என்பவையெல்லாம் பொதுமக்களுக்குத் தெரியாதவை அல்ல.

அதனால்தான் 'திருடனாகப் பார்த்துத் திருந்தினால் ஒழிய திருட்டைத் தடுக்க முடியாது' என்பது போல 'வெள்ளை வான் கடத்தல் சூத்திரதாரிகளும் தாங்களாகத் திருந்தினால்தான் இவ்விடயம் நேர்சீராகும்' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாறான, மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டிய அதிகாரத் தரப்புகளே, 'பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கை' என்ற பெயரில் இத்தகைய கொடூரங்களுக்கு அனுமதி தந்து, ஒத்தாசை வழங்கி, ஆசீர்வாதம் அளித்து வருகையில் இவற்றைத் தடுத்து நிறுத்திவிட முடியப் போவதில்லை என்பது தெட்டத் தெளிவு.

இப்போது இந்த வெள்ளைவான் கொடூரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. நாடாளுமன்றத்தில் பச்சையாகவே போட்டுடைத்து அம்பலப்படுத்தியிருக்கின்றது.

நாட்டில் இடம்பெறும் வெள்ளைவான்களில் ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகளுக்கு அரசும் இராணுவத்தினருமே பின்னணி என்று குற்றம் சுமத்தியுள்ள அக்கட்சி, இந்த வெள்ளைவான் கடத்தல்கள் தொடர்பான முழு விவரங்களையும் ஆதாரங்களுடன் தமது கட்சி விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் சூளுரைத்திருக்கின்றது.

இப்படித்தான் யாழ். குடாநாட்டில் இடம்பெறும் கொடூரங்களின் சூத்திரதாரிகளை முழு விவரங்களுடன் விரைவில் நாடாளுமன்றில் அம்பலப்படுத்துவேன் என்று அறிவித்த கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான மகேஸ்வரன், அப்படி அறிவித்து இரண்டு நாட்களில் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னர் அப்படி அறிவித்த குற்றத்துக்காகக் கொலையாளிகளின் துப்பாக்கிக்கு இரையானார்.

அத்தகைய பின்புலத்திலேயே அவரது கட்சியினர் மீண்டும் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். இன்று முழு இலங்கை தொடர்பாகவுமே சர்வதேசத்தின் பார்வையைத் திருப்ப வைத்துள்ள வெள்ளைவான் கொடூரம் பற்றிய மர்மங்களைப் பகிரங்கப்படுத்தப் போவதற்கான முன்னறிவிப்பு இது.

இந்த அறிவித்தலின் விளைவு என்னென்ன விபரீதங்களைக் கொண்டுவரப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேபோல அரசுப் பாதுகாப்புத் தரப்பின் உள்வீட்டு மாய்மாலங்களையும், பாதுகாப்புத் துறையில் இடம்பெறும் ஊழல்கள், மோசடிகள், ஒழுங்கு முறைகளுக்கு மாறான செயற்பாடுகள், குத்து வெட்டுகள், குளறுபடிகள் போன்றன குறித்தும் தென்னிலங்கையில் உண்மைகளை அம்பலப்படுத்த முயன்ற 'குற்றத்துக்காக' ஊடகவியலாளர்கள் பலரும் ஊடகங்கள் பலவும் 'வாங்கிக் கட்டிக் கொண்டு' வாயை மூடி அடங்கியிருக்கும் கேவலம் ஒருபுறம் நீடிக்கின்றது.

புலிப் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கரவாதத்தால் வெற்றி கொள்வது' என்ற விபரீதமான கொள்கைப் போக்கைக் கொழும்பு அரசு தனக்குள் நியாயப்படுத்திக் கடைப்பிடிப்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருப்பது வெளிப்படை.

தன்னை சட்ட ரீதியான இறைமையுள்ள அரசு என்று கூறிக்கொண்டே இப்படி ஒளிவு, மறைவான 'அரச பயங்கரவாதத்திற்கு' ஆளும் தலைமை இடம்கொடுக்குமானால்,

இத்தகைய வெள்ளைவான் கொடூரம் போன்றவை இலங்கையில் தொடர்வது நாட்டின் தவிர்க்கவே முடியாத தலைவிதியாகவே இருக்கும். அதை எதிர்கொண்டு அனுபவிப்பதும் நாட்டு மக்களுக்குக் கட்டாயமானதாகவும் அமையும்.

'அரச பயங்கரவாதம்' சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு விவகாரமாக மாறியுள்ள தேசத்தில் இதுதான் யதார்த்தம். 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரம்' என்று தவறாகவா சொன்னான் பாரதி?

# Sri Lankans May Turn Against War Strategy, Defense Analysts Say

**By: Shani Raja**
**BLOOMBERG**

Sri Lanka's government needs to deliver on its vow to cripple the rebel Tamil Tigers this year or lose support for a conflict that is slowing economic growth, defense analysts said as labor unions plan a general strike tomorrow.

``People say they'll suffer the hardships as long as the government can finish the war," said Iqbal Athas, a Colombo-based correspondent for Jane's Defence Weekly. The Liberation Tigers of Tamil Eelam's ``military machine has yet to be badly dented" and the group may have at least 10,000 fighters.

President Mahinda Rajapaksa's government pledged to defeat the LTTE in the northern Wanni region this year after evicting them from the east a year ago. The Tamil Tigers operate from jungle bases in the north, where they repulsed a major army offensive in the late 1990s.

Pressure on the government to negotiate with the rebels may build if military operations stall. Workers in ports, transport and agriculture are among those planning to strike tomorrow over cost of living increases after consumer prices in the capital, Colombo, rose the most in at least four years and at the fastest pace in Asia.

The war is weighing on the economy, Sri Lanka's Central Bank Governor Nivard Cabraal said last week at a business forum. The International Monetary Fund has said the nation's economic outlook ``depends critically" on an end to the civil war.

## Spending Slump

Economic growth slowed for the first time in a year in the first quarter as the escalating violence, including bomb attacks in Colombo, curbed spending, while consumer prices in Colombo rose 28.2 percent in June from a year earlier, the statistics department said at the end of last month.

``People are expecting the war to be over sooner rather than later," said Pramod De Silva, editor-in-chief of the state-run Daily News. ``They will welcome either a military or a political solution as soon as possible."

The military's efforts to control terrorism in the north have allowed people in the south to consider strike action, Rajapaksa said in comments yesterday, the newspaper reported. Some groups are using the stoppage to ``gain political mileage," he said.

Losing control of Eastern Province was the worst defeat suffered by the LTTE in its 25-year struggle for a Tamil homeland in the north and east of the island nation. The Tigers will have a hard time regaining the region, Athas said. Sri Lanka has a 100,000-strong army.

## Northern Bases

The Tamil Tigers are confined to just two northern districts in Wanni, Sri Lanka's Defense Affairs Spokesman Keheliya Rambukwella said in a telephone interview from Colombo. The government is on course to delivering a major blow to the ``terrorists" this year, he said. ``Everything is going according to our strategies and plans."

The Tamil Tigers have lost the ability to fight as a conventional army after being weakened by recent government offensives, Army Chief Sarath Fonseka said earlier this month. The military is making progress toward eliminating the Tigers by mid-2009, he told reporters.

The war may have reached a stalemate, said Athas. Attacks are on the rise in all three ``cleared" eastern districts, Batticaloa, Trincomalee and Amparai, and the Tamil Tigers have been ``periodically" targeting the northern Jaffna peninsula, mostly under the government's control.

## Attacks in South

The rebels have also launched attacks on civilians in the Sinhalese-dominated south of the island, demonstrating that they can operate deep within government territory.

Last year, the rebels showed they had developed an air capability, using light aircraft to bomb a military base near Sri Lanka's main international airport. The air wing consists of five propeller-driven aircraft, the military says.

The military has targeted Tamil Tiger leaders since taking over the Eastern Province, killing the group's political chief, its military intelligence leader and the head of the naval unit, known as the Sea Tigers. The LTTE accuses the air force of bombing civilian areas and says the land and air attacks amount to genocide.

The LTTE said last September that any peace process must be based on a homeland for the Tamil people, in the same way the ethnic-Albanian majority in the former Serbian province of Kosovo gained independence. Tamils make up 11.9 percent of Sri Lanka's 20 million people, according to the 2001 census.

## War Reporting

Sri Lankan journalists are facing increasing attacks over their reporting of the conflict, according to Amnesty International. Hundreds of local reporters and cameramen protested outside Rajapaksa's home last week demanding an end to a spate of killings and assaults on journalists, Agence France- Presse reported.

Some journalists fear a crackdown if the victory promised by the government doesn't materialize.

``The media has come under very staunch criticism for expressing views which are not of the government," said Athas. ``Anybody who doesn't tow the line is called a traitor. You can draw the inference on what's going to come."

A journalist and member of the British High Commission staff were assaulted in Colombo last week. The U.S. embassy condemned the attack and other recent violence against journalists.

Alleged human rights violations against journalists by the government are being ``blown totally out of proportion," Rambukwella said. The sources of such allegations are largely non-governmental agencies with LTTE sympathies, he added.

அண்டங்கள் அதிர்ந்து எழ

கண்டங்கள் கடந்து வர

விண்ணதிர முழக்கமெழ

விரைந்து வரும் பொங்கு தமிழ்

ஒரு பேப்பர்
ORU PAPER

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்

கனடா
தயா - பொன்.விவேகானந்தன்

பாரிஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன் - சாந்தி

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா

விளம்பரம்
கௌரி - சிந்து

அச்சு
குமார் (ஜெர்மனி)

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)

| | |
|---|---|
| லண்டன் | 020 7043 4310 |
| பாரீஸ் | 01 7289 8165 |
| சுவிஸ் | 043 500 0277 |

தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


## வெல்வோமாயின் வாழ்வோம்

ஆடிப்பிறப்பு வாழ்த்துக்களை முதலில் தந்து இப்பத்தியை தொடர்கிறேன்.

உலகெங்கும் பொங்குதமிழ் விழா நிகழ்கிறதென்றால் அதற்கு மிக முக்கிய காரணம் இருக்க வேண்டும் அது பற்றிப் பறைவதே இப்பத்தியின் நோக்கம்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 'பிளேக்' அவர்கள் தமிழீழம் தொடர்பாக ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார். 'தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களைச் சாரந்தோருமாக சுமார் ஐந்து வீதமானோரே தமிழீழத்தை விரும்புகின்றார்கள். மீதியானோர் அது பற்றிய அக்கறை இல்லாதோர்' இவ்வாறு அவர் கருத்து இருந்தது.

உண்மைதானா அது? அல்ல என்று உலகிற்கு உரத்து ஓங்கிச் சொல்வதுதான் பொங்குதமிழ் விழாவின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறுகிறதா என்றால் அதற்கும் ஓம் என்றே சொல்ல வேண்டும். கனடாவில் ஒரு இலட்சம பேர் பொங்குதமிழுக்காய் திரண்டனர். இது கனடாவில் ஒரு போதும் நிகழாத திரட்சி. இவ்வாறுதான் ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, சுவிஸ், சுவீடன், ஒஸ்ரேலியா எங்கும் வரலாறு காணாத அளவு ஈழத்தமிழ் மக்கள் திரண்டனர். ஏன் இவ்வாறு திரண்டனர்?

தமிழீழம் என்கின்ற அந்த மந்திரச் சொல், தலைவன் என்கின்ற ஓர்மம் இவைதானே மக்களை திரட்சி கொள்ள வைத்தன. உணர்வெழுச்சியுடன்தானே அவ்வளவு பேரும் வந்தார்கள் ஓர்மத்துடன்தானே தமிழீழம் என்று முழங்கினார்கள்? தலைவனின் நாமத்தை உச்சரித்துத்தானே உடல் சிலிர்த்தார்கள்? இதற்கும் மிஞ்சி என்ன பதிலை நாம் 'பிளேக்' போன்றவர்களுக்குச் சொல்லிவிட முடியும்.

ஒன்றை நாம் உறுதியாகச் சொல்ல வேண்டும். ஈழத் தமிழர்களின் 98 வீதமானோர் தமிழீழத்தை ஆதரிக்கிறார்கள். அப்படி ஆதரிப்போரில் தாரதம்மியம் இருக்கலாம். தமிழீழத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடுபவர்கள் இருப்பார்கள். அதற்காக முழுநேர ஊழியர்கள் இருப்பார்கள். பகுதி நேர வேலை செய்பவர்கள் இருப்பார்கள். ஆதரவு மட்டத்திலும் இருப்பார்கள். எப்படியோ தமிழீழம் கிடைத்தால் சரி என்போரும் உளர். தமிழீழம் கிடைத்தால் சந்தோசம் என்று தம் அலுவல் பார்ப்போரும் இருக்கின்றனர். எல்லோரும் வேண்டுவது ஒன்றே. தமிழீழம்! ஆனால் வேலைப்பாணியில் வேறுபாடுகள் உள்ளன.

### சற்று மாறுதலுக்காக

எழுதுவது: சேயோன்

இவ்வளவு இருப்பினும் பொங்கு தமிழில் ஈழத்தமிழர் யாவரும் திரள வேண்டும். அது மிக மிக முக்கியம்.

'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தனர்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஓம் அது உண்மை. அது சரி. எம் திரட்சி கண்டு எதிரி ஓட வேண்டும். நாம் திரளுவது ஒரு உயரிய நோக்கத்துக்காக. நாம் விடுதலை அடைய வேண்டும். நம் தலைவர் காலத்தில் அது நிகழ்ந்திட வேண்டும். எம் தலைவரும் எம் மக்களை மலைபோல் நம்பி இருக்கிறார்.

'எனக்கென்ன' என்று எதுவும் செய்யாதிருந்தோம் என்றால் நாம் அழிந்தோம். எமது சமூகம் அழிந்து விடும். 'ஈழத்தமிழர்' என்று எமது அடையாளம் அற்றுப் போய்விடும். எமது நிலம் சிதைந்து விடும். எமது மொழி அழிந்து போகும். ஓர் அற்புதமான சந்தர்ப்பத்தை கைவிட்டு விட்டோம் என்று வரலாறு எம்மைத் தூற்றும்.

நண்பன் ஒருவன் எனக்குச் சொன்னான் "தமிழீழம் எண்டு நைக்கவே எனக்கு ஆசையாக இருக்கு, சுகமா இருக்கு" ஓம் அவன் சொல்வது மகா உண்மை. தமிழீழம் என்று நினைத்தாலே என் உடல் சிலிர்க்கிறது.

'தந்தையர் நாடென்ற பேச்சினிலே -- ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்றான் பாரதி.

இதுதான் காலம். இதைத் தவறவிட்டோம் என்றால் இனி ஒருபோதும் இல்லைக் காலம். தமிழ் நாட்டில் இனி முடியாது. சிங்கப்பூர், மலேசியா என்று எதையும் நினைத்துப் பார்க்க இயலாது. மொரிசியஸ், தென்னாபிரிக்கா என்ற நாடுகளில் அடையாளமே அழிந்து போயிற்று. ஈழம் ஒன்றே தமிழர்களுக்கென்று இருக்கக்கூடிய ஒரே ஒரு வாசல். ஒரே ஒரு தேசம்.

விடுதலையின் வாசல் வரை எம் தலைவன் எம்மைச் சுமந்து வந்துள்ளான். இது இலேசான காரியமல்ல. வரலாற்றில் எப்போதெனினும் அபூர்வமாக நிகழும் தருணம் அது. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அப்படி நிகழ்ந்த தருணங்கள் மிக அரிது. பின்னணியில் எந்தப் பலமும் இல்லை. கைதூக்கி விட எவருமில்லை. அடமுதுகு தடவிவிடக் கூட ஆருமில்லை. எம்மை நாமே தடவி, எம்மை நாமே தேற்றி, எம்மை நாமே தூக்கி, எம்மை நாமே உயர்த்தி, இந்தளவு உயரத்துக்கு வந்துள்ளோம் என்றால், என்ன காரணம்? கிடைத்தற்கரிய ஓர் அற்புதமான தலைவன் எமக்குக் கிடைத்துள்ளான்.

புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களாகிய எம்முன் இடப்பட்டுள்ள பெரிய பணி யாது? போராட்டத்தை நாம் உறுதியாகப் பற்றுவது. தலைவர், தளபதிகள், போராளிகள் இவர்களுக்கு உறுதுணையாக நிற்பது. மேலாக தமிழீழமே எங்களது அறுதியான, உறுதியான, இறுதியான, ஆசை, அவா, என்பதை உலகிற்கு ஓங்கிச் சொல்வது. அதற்கு ஒரு சந்தர்ப்பம் தான் பொங்கு தமிழ் விழா. தமிழர் பொங்கி எழ வேண்டிய விழா.

'நாம் ஈழத்துத்தமிழர்' என்ற பெருமையைக் கொண்டாடுகின்ற ஒரு நாள்தான் பொங்குதமிழ் நாள். நாம் ஆசைப்படுகின்ற எமது தேசம் சுதந்திரமடைய வேண்டும் என்று, நாம் சுகப்படுகின்ற எமது தேசம் சுதந்திரமடைய வேண்டும் என்று, ஈழத்தமிழர் நாம் ஒன்று கூடி, ஆடிப் பாடிக் கொண்டாடுகின்ற ஒரு நாள்தான் பொங்குதமிழ் நாள். பொங்கு தமிழ் நாளில் எவ்வளவுக்கு எவ்வளவு திரள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தமிழீழம் எம்மை நோக்கி வெகுவிரைவாக நகரும்.

பொங்கு தமிழுக்கு ஒருவர் மிச்சம் இல்லாமல் எல்லோரும் திரள்வோம். தமிழீழமே எங்கள் விருப்பு என்று உரக்கச் சொல்வோம். தலைவரே எங்கள் வழிகாட்டி என்று ஓங்கிச் சொல்வோம். எங்கள் ஒற்றுமையை உலகிற்கு அறைவோம்.

வெல்வோமாயின் வாழ்வோம்

## சூதாட்டம்

### வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: இராம. கே. நாதன்

சாதாரணமாக மக்களிடையே இன்று காணப்படும் தீய பழக்கங்கள் இன்றைய நாகரிகச் சூழலினாலோ அன்றி சமுதாயச் சீரழிவின் காரணமாகவோ எற்பட்டவையல்ல. இத்தீய பழக்கங்கள் காலம் காலமாகவே மனித குலத்தைப் பிடித்து வந்திருக்கின்றன.

இத்தீய பழக்கங்கள் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்தே மக்களை அடிமைப் படுத்தியிருக்கின்றன என்பதை திருக்குறள் கூறும் அறிவுரைகளிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. காலம் காலமாக ஞானிகள், சமயாசிரியர்கள், அறிஞர்கள் எத்தனை தரம் எடுத்துக் கூறினாலும் அவற்றிலிருந்து மனிதர்களால் விடுபட முடியவில்லையே! வள்ளுவர் இத்தீய குணங்களில் ஒன்றாகிய சூதாட்டத்தைப் பற்றி கூறும் அறிவுரைகளைப் பார்ப்போம்.

ஒருவன் சூதாட்டத்தில் எப்பொழுதாவது வெற்றி பெற்றாலும் அவ் வெற்றி மீனைப்பிடிப்பதற்காக தூண்டினில் வைக்கும் தீனியைப் போன்றதே. அத்தீனியைக் கௌவும் மீன் தூண்டில் கொக்கியில் அகப்பட்டுத் திணறப்போவது நிச்சயம். எனவே சூதாட்டத்தில் கிடைக்கும் வெற்றியினால் சூதாட்டம் என்னும் தூண்டினில் அகப்பட்டுத் திணறப்போவது நிச்சயம். (குறள் 931).

சூதாட்டத்தில் பெறும் வெற்றி நூறில் ஒரு முறைதான் நிகழமுடியும். அப்படி நூறுதரம் தோற்று ஒரு முறை மாத்திரம் வெற்றிகொள்ளக்கூடிய சூதாட்டத்தில் எப்படி வளமான வாழ்வு கிடைக்க முடியும். வளமான வாழ்வு பெற சூதாட்டத்தைத் தவிர்த்தல் அவசியமாகும். (குறள் 932)

ஒருவன் பிறப்பினால் எவ்வளவுதான் பொருள் வளம் கொண்டிருப்பினும் அல்லது செல்வத்தைத் தானாகவே சேர்த்திருந்தாலும் அவன் சூதாட்டத்தில் தன் நாட்களைக் கழிப்பானேயாகில் தன் சொத்துக்களையெல்லாம் இழந்து வறிய நிலையை அடைவான் (குறள் 933)

இதற்கு நமது இதிகாசங்கள் நல்ல உதாரணங்களைத் தருகின்றன. சிறந்த கல்விமானும் பண்பாளனுமாகிய தர்மராஜன் சூதாட்டத்தினால் தனது நாட்டை இழந்து, சகோதரரை இழந்து மனைவியை இழந்து நாட்டைவிட்டே துரத்தப்பட்ட நிகழ்வை மகாபாரதம் கூறி நிற்கிறது.

ஒருவனது வாழ்வைச் சீர்குலைத்து அவனுக்குப் பல்வேறு சிறுமைகளை அளிப்பதில் சூதாட்டத்தைவிடக் கொடியது வேறொன்றுமில்லை. சூதாடவேண்டும் எனும் வெறி தோன்றிவிட்டால் அவன் தனது குடும்பத்தைப் பற்றிக் கவலைப் படமாட்டான். தனது தகமையைப் பற்றி கவலைப் படமாட்டான். தனது சமூக நிலைபற்றிக் கவலைப் படமாட்டான். எப்படியாவது சூது ஆடவேண்டும் என்ற வெறி அவனைச் சூழ்ந்துகொள்ளும். (குறள் 934)

சூதாடும் கருவிகள். சூதாடும் களம், சூதாடும் திறன் இவை எல்லாவற்றிலும் ஒருவன் எவ்வளவுதான் ஆளுமை பெற்றிருப்பினும். கடைசியில் எல்லாவற்றையும் இழந்து துன்பப் படுவான். (குறள் 935)

கவறும் கழகமும் கையும் தருக்கி,
இவறியார் இல்லா கியார்

என்பது இக்குறள். இக்குறளிலே 'கழகம்' என ஒரு பதம் வருகிறது. இது சூதாட்டக்காரர்கள் கூடும் இடத்தைக் குறிக்கிறது. ஒரு வேளை இதுவே நாம் இன்று காணும் 'கிளப்'களின் முன்னோடியாக இருந்திருக்குமோ?)

சூதாட்டத்திற்கு அடிமையானவர்கள் கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக பசிபட்டினி என்பவற்றை மறந்து சூதாட்டத்திலேயே தம் முழுக்கவனத்தையும் செலுத்துவர். அது இவர்கள் வாழ்வில் துன்பத்தையே தரும். இவர்கள் உடல் நலம் கெட்டு, மனநலம் கெட்டு அல்லல்படுவர். (குறள் 936)

ஒரு வீட்டுத்தலைவனுக்கு மூன்று கடமைகள் உள்ளன. அவை, செல்வம் தேடுதல், அறவழி நிற்றல், தன் மனையாளிடமும், குழந்தைகளிடமும் அன்பு செலுத்தல் ஆகும். ஆனால் அவன் சூதாட்டக் கழகத்தினுள் நுழைவானேயானால், அவனது செல்வம் கரைந்துவிடும். சமூகத்தில் உள்ள நல்ல பெயர் கெட்டுவிடும். அத்துடன் அவனது குடும்பத்தினர் அவனது சீர்கேட்டினால் துன்பப்படுவர். (இக்குறளிலும் திருவள்ளுவர் 'கழகம்' என்ற பதத்தை உபயோகிக்கின்றார். சூதாட்டத்தில் ஈடுபடுவதை 'கழகத்துக்' காலைபுகின் என்று கூறுகிறார். (குறள் 937)

சூதாட்டத்திற்கு அடிமைப்பட்டவன் தனது செல்வத்தைமட்டும் இழந்தவன் ஆகமாட்டான். அவன் தன்னிடமிருந்த நல்ல குணங்களைக் கூட இழுத்துவிடுவான். நேர்மை, நியாயம், கருணை ஆகிய நற்குணங்களையெல்லாம் இழந்துவிடுவான். ஏனெனில் எவர் துன்பப்பட்ட போதும் அதைப்பற்றி அவன் கவலைப்படமாட்டான். சூதாடுவதிலேயே அவா கொண்டிருப்பான். (குறள் 938)

சூதாட்டத்திற்கு அடிமையானவன் தனது தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டான். உணவைப் பற்றிக் கவலைப்படமாட்டான். தனது மதிப்பைப் பற்றிக் கவலைப் படமாட்டான். கல்வியைப் பற்றியோ, தனது செல்வம் கரைகிறது என்பது பற்றியோ கவலைப்படமாட்டான். சூது ஆடுவதிலேயே கண்ணாக இருப்பான். (லாஸ் வேகாஸ் போன்ற சூதாட்டக் கூடங்களுக்குச் சென்று பார்த்தால் இந்தக் குறளின் கூற்று விளங்கும்) (குறள் 939)

எவ்வளவு நோய்வாய்ப்பட்ட போதும் துன்பம் அனுபவித்தாலும் தொடர்ந்து உயிர்வாழ ஆசைப் படும் மனிதனைப் போன்றதே, சூதாட்டத்திற்கு அடிமையாகிவிட்ட மனிதனும் சூதாட்டத்திற்கு அடிமையானவன் எவ்வளவு துன்பம் வந்த போதும் தொடர்ந்தும் சூதாடவேண்டும் என ஆசைப்படுவான் (குறள் 940)

எனவே சூதாட்டத்திற்கு அடிமையானால் மனிதன் அல்லல்பட்டு சீரழிந்து போய்விடுவான். ஆதலால் சூதாட்டத்தில் இறங்காதீர் என்பதே வள்ளுவர் கூறும் அறிவு மொழியாகும்.

# தக்க வைக்கப்படும் போராட்டமே இறுதியில் வெற்றி பெறும்

வன்னி மீதான சிறிலங்காப் படைகளின் நடவடிக்கைகள் பல முனைகளின் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன. முகமாலையில் கடைசியாக வாங்கிய அடியோடு குறிப்பிடக் கூடிய படை நகர்வுகள் எதனையும் சிறிலங்காப் படையினர் மேற்கொள்ளவில்லை. ஆனால் மன்னார், வவுனியா, மணலாறு போன்ற பகுதிகளில் தொடர்ந்து சண்டைகள் நடைபெற்று வருகின்றன.

மன்னாரில் இருந்து நகர்ந்து விடத்தல் தீவைக் கைப்பற்றி, அதன் பிறகு பூநகரி வரை முன்னேறி யாழ் குடா்வுடன் பாதை அமைக்கும் நோக்கில் சிறிலங்காப் படையினர் மன்னார் மாவட்டத்தில் ஒரு பாரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்

வவுனியாவில் இருந்து பல முனைகளில் முன்னேறிய படையினர் பெரியமடு, மூன்றுமுறிப்பு போன்ற இடங்கள் வரை முன்னேறி சிறாட்டிக்குளம் வரை வந்துள்ளனர். மன்னாரில் சண்டை செய்யும் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடி கொடுக்கும் விதமாக இந்த நகர்வுகள் உள்ளன.

மறுபுறம் மணலாற்றிலும் முல்லைத்தீவை நோக்கிநகரும் நோக்கோடு இன்னும் ஒரு படை நடவடிக்கை இடம் பெறுகிறது. விடுதலைப் புலிகளை திசைதிருப்பும் வகையில் இந்த நடவடிக்கையை படையினர் மேற்கொண்டாலும் முடிந்தவரை முன்னேறி முல்லைத்தீவில் உள்ள விடுதலைப் புலிகளின் தளங்களுக்கு அச்சுறுத்தலைக் கொடுப்பது படையினரின் நோக்கமாக இருக்கின்றது.

கடந்த வாரங்களில் மன்னார் வவுனியாப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் நகர்வுகள் சற்று வேகம் எடுத்திருந்தன. பல சிறிய கிராமங்கள் படையினரிடம் வீழ்ந்தன. ஆனால் அதற்கு முன்பு மடு, அடம்பன் போன்ற இடங்களைக் கைப்பற்றுவதற்கு பல மாதங்களாக சிறிலங்காப் படையினர் சண்டை செய்ய வேண்டி வந்தது.

குறிப்பாக மடுவைக் கைப்பற்ற படையினர் ஓராண்டு காலமாக சண்டை செய்தனர். மடுவில் இருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவு வரை முன்னேறியும் பல மாதங்கள் அப் பகுதியில் சிறிலங்காப் படையினர் முடங்கிப் போய் கிடந்தனர். அடம்பனை மிக அண்மித்த பின்பும் அடம்பனை கைப்பற்ற படையினருக்கு சில மாதங்கள் தேவைப்பட்டது.

**ஜெயசிக்குறு நடந்த 1997, 1998ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தினமும் சராசரி ஏழு விடுதலைப் புலிகள் வீரச் சாவடைந்தபடி இருந்தனர்.**

இப்படி சிறிலங்காப் படையினர் முடங்கிப் போய் இருந்ததானது, சிறிலங்காவின் தென்பகுதியில் சிறிலங்கா அரசு மீதான விமர்சனங்களை உருவாக்கி விட்டிருந்தது. ஆனால் மடுவைக் கைப்பற்றிய பின்பு சிறிலங்காப் படையினர் குறுகிய காலத்தில் பல கிராமங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

மடுவைக் கைப்பற்றிய கையோடு பல முனைகளில் முன்னகர்ந்த படையினர் பெரியமடுவையும், பெரியமடுவிற்கு கிழக்காக உள்ள மூன்று முறிப்பையும் கைப்பற்றியதோடு வடக்கு நோக்கி சிறாட்டிக்குளம் வரை நகர்ந்து ஒரு குறிப்பிட்ட பரப்பளவு உள்ள ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். மன்னாரில் அடம்பனைக் கைப்பற்றிய பின்பு மாந்தை, பாப்பாமோட்டை போன்ற பகுதிகளைக் கைப்பற்றியபடி முன்னகர்ந்த படையினர் விடத்தல்தீவில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் தற்பொழுது நிலை கொண்டுள்ளனர்.

அத்துடன் வவுனியாவில் இருந்து முன்னேறிய படையினரும் மன்னாரில் இருந்து முன்னேறிய படையினரும் இந்த மாதத்தின் தொடக்கத்தில் இணைந்து கொண்டனர். ஜெயசிக்குறு நடவடிக்கைக்குப் பின்பு ரணகோச என்ற நடவடிக்கையின் மூலம் சில இடங்களைப் படையினர் கைப்பற்றியிருந்தனர் அந்த இடங்களில் பெரும்பாலானவற்றை படையினர் தற்பொழுது கைப்பற்றியுள்ளனர்.

கடந்த மாதத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட வேகமான முன்னகர்வுகள் தென்னிலங்கையில் மகிந்த அரசு மீதான விமர்சனங்களை குறைக்கச் செய்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகளுக்கு மத்தியிலும் பெரும்பாலான சிங்களவர்கள் மகிந்த அரசை ஆதரிக்கும் நிலையை உருவாக்கி உள்ளது. படையினரின் வெற்றி பற்றிய மிகைப்படுத்தப்பட்ட பரப்புரைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு, தன்னை உறுதிப்படுத்தி வருவதோடு, தமிழ் மக்களின் மனோபலத்தையும் உடைக்க மகிந்த அரசு முனைகின்றது.

## அரசியல் அலசல்

**வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)**

ஆனால் மகிந்த அரசின் பல திட்டங்கள் ஏற்கனவே தோல்வி அடைந்து விட்டன என்பதுதான் உண்மை.

**இந்தியப் படையினரின் காலத்தில் மணலாற்றின் காடுகளைத் தவிர விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் நிலப் பகுதி எதுவும் இருக்கவில்லை. நிலம் தக்க வைக்கப்படவில்லையே தவிர போராட்டம் தக்க வைக்கப் பட்டிருந்தது. அந்தப் போராட்டம்தான் இந்தியப் படையை ஈழத்தில் இருந்து வெளியேற்றியது.**

இடங்களைக் கைப்பற்றுவதோடு, அதிகளவிலான விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கோடுதான் வன்னி மீதான நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு ஆரம்பித்தது. பல முனைகளில் விடுதலைப் புலிகளை சண்டைக்கு இழுத்து ஒவ்வொரு முனையிலும் பல விடுதலைப் புலிகளைக் கொன்று, விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி இல்லாது ஒழிப்பது சிறிலங்கா அரசின் முக்கியமான திட்டமாக இருக்கிறது.

பத்திற்கும் மேற்பட்ட களமுனைகளில் தினமும் சண்டை செய்வதன் மூலம் மாதத்திற்கு ஆயிரம் விடுதலைப் புலிகளையாவது அழித்து விடலாம் என்று கணக்கிட்டு படை நடவடிக்கையை ஆரம்பித்த சிறிலங்கா அரசு உத்தியோகபூர்வ தகவலின் படியே ஒவ்வொரு மாதமும் ஆயிரம் படையினரை களத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டிய நிலையில் நிற்கின்றது.

புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்கும், படையை விட்டு ஓடியவர்களை மீண்டும் படையில் இணைப்பதற்கும் சிறிலங்கா அரசு படாதபாடு பட்டு வருகிறது.

அதே வேளை விடுதலைப் புலிகள் தரப்பிலும் குறிப்பிடத்தக்க அளவிலான இழப்புக்கள் ஏற்படத்தான் செய்கின்றன. கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகள் தரப்பில் தினமும் ஆறு, ஏழு பேர் என்று வீரச்சாவடைந்து வருகின்றனர். ஆனால் இதே அளவு இழப்புக்களை விடுதலைப் புலிகள் ஏற்கனவே பலமுறை சந்தித்தும் தமது பலத்தை இழக்காது பேரெழுச்சியோடு அலையாய் எழுந்து வந்தார்கள் என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம்.

1997ஆம் ஆண்டில் இருந்து 2000ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுக் காலப் பகுதியில் ஏறக்குறைய ஏழாயிரத்து ஐந்நூறு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்திருந்தார்கள். ஜெயசிக்குறு நடந்த 1997, 1998ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தினமும் சராசரி ஏழு விடுதலைப் புலிகள் வீரச் சாவடைந்தபடி இருந்தனர். அதுவும் ஒரேயொரு களமுனை திறக்கப்பட்டிருந்த அன்றைய காலகட்டத்தில் இந்த இழப்பை விடுதலைப் புலிகள் சந்தித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் கடைசியில் போரில் களைத்துப் போய் சமாதானம் பேசுவதற்கு சிறிலங்கா அரசு இறங்கி வந்தது என்பதுதான் வரலாறு. தற்பொழுது சிறிலங்கா அரசு தன்னுடைய இழப்புக்களை மறைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகளின் இழப்புக்களை மிகைப்படுத்திக் கூறி வருகிறது. ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் சிறிலங்கா அரசினால் தாக்குப்பிடிக்க முடியாது நிலை வரும்.

சிறிலங்கா அரசின் வன்னி மீதான நடவடிக்கையை விடுதலைப் புலிகள் தமது பாணியில் எதிர்கொண்டு வருகின்றார்கள். சில இடங்களில் காத்திரமான எதிர்ப்பைக் காட்டுகின்ற விடுதலைப் புலிகள் தமக்கு சாதகம் இல்லாத பகுதிகளில் சிறிய எதிர்ப்புக்களோடு விலகி விடுகின்றனர். தற்பொழுது விடத்தல்தீவையும் சிறிலங்காப் படையினர் 'ட' வடிவத்தில் சுற்றி வளைத்து நிற்கின்றனர். அந்த வகையில் அப்பகுதியில் இருந்தும் விடுதலைப் புலிகள் விலக வேண்டி வரலாம். விடத்தல்தீவைக் கைப்பற்றி சிறிலங்கா அரசு வெற்றி விழா கொண்டாடவும் கூடும்.

ஆனால் நிலங்களைக் கைப்பற்றுவதன் மூலம் போராட்டத்தை இல்லாது செய்ய முடியாது. நிலங்களை இழந்தாலும் போராட்டத்தை தக்க வைப்பதில் விடுதலைப் புலிகள் என்றும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த வெற்றி பின்பு நிலங்களை மீட்கின்ற வெற்றியாக மாறியிருக்கிறது.

இந்தியப் படையினரின் காலத்தில் மணலாற்றின் காடுகளைத் தவிர விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் நிலப் பகுதி எதுவும் இருக்கவில்லை. நிலம் தக்க வைக்கப்படவில்லையே தவிர போராட்டம் தக்க வைக்கப்பட்டிருந்தது. அந்தப் போராட்டம்தான் இந்தியப் படையை ஈழத்தில் இருந்து வெளியேற்றியது.

இன்றைக்கும் தமிழீழத் தாயகத்தில் நிலப் பகுதிகள் சிலவற்றை சிறிலங்காப் படையினர் ஆக்கிரமித்துள்ள போதும், தமிழீழப் போராட்டம் எழுச்சியோடு நிற்கின்றது. போராட்டம் இருக்கின்ற வரை, சிறிலங்காப் படையினர் எத்தனை முறை நில ஆக்கிரமிப்பை செய்தாலும், அந்த நிலங்கள் மீண்டும் தமிழர்களால் மீட்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

கிழக்கை ஆக்கிரமித்த சிறிலங்கா அரசின் நிலை இன்றைக்கு பரிதாபகரமானதாக இருக்கின்றது. அங்கு சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்புக்குச் சென்ற உலங்குவானூர்தி தாக்குதலுக்கு உள்ளாகின்றது. படையினரின் முகாம்கள் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகின்றன. அம்பாறையில் பல இடங்களில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அம்பாறையின் பக்கத்து மாவட்டங்களுக்கும் போர் விரிவடைகின்றது. போராட்டம் தக்க வைக்கப்பட்டிருப்பதால் கிழக்கில் சிறிலங்கா அரசு இத்தனை நெருக்கடிகளையும் சந்திக்கின்றது.

தமிழர்களின் போராட்டம் வன்னியில் மையம் கொண்டிருப்பதாக நம்பி சிறிலங்கா அரசு வன்னி மீது பாரிய படை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. வன்னியில் சில பகுதிகளை சிறிலங்காப் படையினர் தற்பொழுது ஆக்கிரமித்துள்ள போதும், வரவிருக்கின்ற சண்டைக் களங்கள் மிகவும் இறுபட்டுச் செல்லப் போகின்றன. சில மாதங்களில் முடிப்பதாக சொல்லிக் கொண்டு மகிந்தவின் அரசு தொடங்கிய வன்னி மீதான நடவடிக்கை தற்பொழுது ஒன்றரை வருடங்கள் ஆகிய பின்பும் நீள்கிறது. சிறிலங்காப் படைத் தளபதி வெற்றி பெறுவதற்கு அடுத்த ஆண்டு வரை செல்லும் என்று புதிய காலக் கெடு ஒன்றைச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் அதற்குள் கிழக்கில் பல பகுதிகள் விடுதலைப் புலிகளால் மீட்கப்படுவதோடு வடக்கிலும் அலையென எழுந்து சிங்களத்திற்கு சரியான பதிலடி ஒன்றை விடுதலைப் புலிகள் கொடுப்பார்கள் என்பது திண்ணம்.

வெற்றியைக் கண்டு
துள்ளுவதுமில்லை
தோல்வியைக்
கண்டு
துவள்வதுமில்லை
இலக்கை விட்டு
அகல்வதுமில்லை

ஒரு பேப்பர்
ORU PAPER

# கிழக்கின் கிராமியக் கவி

பாகம் 53

கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களின் மத்தியில் வழங்கப்படும் பாடலொன்றைச் சென்ற முறை குறிப்பிட்டிருந்தேன். அதைக் கவியென்று குறிப்பிட்டிருந்தாலும் உண்மையில் கிராமியக் கவிகள் இரண்டுவரிக்குள் நறுக்குத் தெறித்தாற் போன்று பாடப்படும் நகைச்சுவையும் பொருட்சுவையும் சிலவேளை நக்கலும் நிறைந்த சொற்றொடர்களாகும்.

ஒரு இஸ்லாமியச் சிறுமி வயதுக்கு வந்துவிட்டாள். தாய்க்கு அந்த விடயத்தைத் தன் கணவனிடம் அதாவது சிறுமியின் தந்தையிடம் தெரிவித்துவிடவேண்டுமென்னும் அவசரமாயிருக்கிறது. கணவனோ வெளியே எங்கோ போய்விட்டான். வீட்டு வாசலில் நின்ற படி தெருவில் யாராவது வருவார்களா என்று பார்க்கிறாள். முதியவர் ஆதம் காக்காதான் வருகிறார். அவரிடம் எப்படி இந்த விடயத்தைச் சொல்லிக் கணவனை வரவழைப்பது? எப்படியோ அவள் விடயத்தைச் சொல்லி விடுகிறாள். அதுவோர் கவியாக மலர்கிறது.

'ஆதங்காக்கா ஆதங்காக்கா
அவரைக்கண்டால் சொல்லிடுங்கோ ?..

மாதாளங்கன்னி மடலவிழ்ந்து
நிற்குதென்று ?'

இதனைப் 'பூவரசங்கன்னி பூமலர்ந்து போச்சுதென்று?' என்றும் பாடுவர். இங்கு மாதாளங் கன்னியென்பது மாதுளைக் கன்னியைக் குறிக்கின்றது.

மிகவும் சங்கேதமாக இந்தச் செய்தி ஆதங்காக்காமூலம் தந்தைக்கு அனுப்பப்படுகின்றது. ஆதங்காக்காவுக்குப் புரிந்ததோ இல்லையோ அவர் போய் தெருவில் அவளது கணவனைக் கண்டால் சொல்லிவிடுவார். கணவனுக்கு விளங்கிவிடும்.

வடபகுதியைப் போல கிழக்கில் இஸ்லாமியர்களிடையே தாய்தந்தையர்களால் நிச்சயிக்கப்படும் திருமணங்களே அதிகம். ஆனால் அதற்கு அங்குபோல் இங்கே சீதனம் ஒரு காரணமில்லை. பெண்களுக்குத் தாமே தமது துணையைத் தேடிக்கொள்ளக்கூடிய வகையில் சுதந்திரமில்லாததால் காதல் திருமணங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாயுள்ளன.

**அலசுவாரம்**

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

அந்த வகையில் ஒரு பெண்ணுக்கு ஒருவனைக் கட்டி வைத்துவிட்டார்கள். இளைஞனுக்கோ இளமையிலேயே மூலவியாதி. மூலம் பொல்லாதது. வியாதிக்காரர் நன்றாகத் தான் இருப்பார் ஆனால் சின்ன விடயங்களுக்கெல்லாம் எரிந்து விழுவார். அதனால் இப்படி சாதாரண விடயங்களுக்கெல்லாம் எரிந்து விழுபவர்களை மூலக் கொதி பிடித்தவர் என்று சொல்வது நம்மிடையே வழக்மாகிவிட்டது.

அந்தப் பெண்ணோ ஒரு இளவயதுப் பேதை. அவள் என்ன செய்வாள் பாவம். இவனது சீறல்களையும் சினப்புகளையும் தாங்கிக்கொண்டு ஒருவாறு குடும்பம் நடத்துகிறாள்.

ஒரு நாள் அவளது தோழியர்கள் அவளிடம் 'எப்படியடி உனது அத்தான்? உன்னை நன்றாகப் பார்க்கிறாரா?' என்று கேட்கிறார்கள். அவளுக்கோ என்னத்தைச் சொல் வதென்றே தெரியவில்லை. அவளிடமிருந்த விரக்தி ஒரு கவியாக வெளிப்படுகிறது.

'ஆலம் பழம் போல அழகான
அத்தானுக்கு ??

மூலம் விழுந்து முன்னிழுவை
பின்னிழுவை ?'

என்று தனது கஸ்டநிலையை நகைச்சுவையோடு கூறுகிறாள்.

ஆலம் பழம் அழகானது. சிவப்பாய் குண்டு குண்டாய் குலை குலையாய் பழுத்திருக்கும் அதனைக் குலையாக ஆலிலைகளையும் சேர்த்துப் பறித்துவந்து பூச்சாடிகளில் பூக்களின் நடுவில் வைத்து வீடுகளில் அழகு பார்ப்பார்கள்.

இயற்கையில் மிகவும் இலகுவாகக் கிடைக்கும் இத்தகைய தாவரப் பொருட்களைக் கொண்டு அலங்காரம் செய்யும் கலையை ஜப்பானிய மொழியில் 'இக்கபானா' என்று கூறுவர். நமது நாட்டிலும் இக்கலையை விருத்தி செய்வதற்கேற்ற அழகான பழங்களும் காட்டுப் பூக்களும் நிறைய உள்ளன.

ஆலம் பழம் அழகானதாயிருந்தாலும். அதனை பிளந்து பார்த்தால் உள்ளே புழுவாக இருக்கும். அதனால் வெளியே அழகாகவும் உள்ளே குணநலன்கள் வெறுப்பூட்டுவனவாகவும் உள்ள மனிதர்களை 'ஆலம்பழம்போல' என்று உவமை கூறும் பழக்கம் எம்மிடையேயுள்ளது.

அதனால்தான் தன் கணவனை அவன் எவ்வளவு அழகானவனாக இருந்தாலும் எடுத்ததற்கெல்லாம் சீறிப்பாயும் மூலக்கொதி பிடித்தவன் என்பதைக்குறிக்க: 'ஆலம் பழம்போல அழகான அத்தான்' என்ற சொற்றொடரை அந்தப் பேதைப் பெண் பாவிக்கிறாள்.

ஆலம் பழத்தைப் பற்றி எழுதும்போது சிறுவயதில் படித்தவோர் கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு வழிப் போக்கன் நடந்துவந்த பிரயாணக் களைப்பில் ஓர் ஆலமரத்தடியில் இளைப்பாற அமர்கிறான். அண்ணாந்து பார்க்கிறான். உயரத்தில் மிகச்சிறிய சிவப்பான குண்டுகளாய் ஆலம்பழக் குலைகளைக் காண்கிறான்.

அந்தப் பெரிய அகலப்படர்ந்த மரத்தில் மிகச்சிறிய பழங்களைப் படைத்த இறைவனின் முட்டாளத்தனத்தை எண்ணிச் சிரித்தவாறே உறங்கிப் போகிறான்.

அயர்ந்து தூங்கிய அவனது முகத்தில் நன்கு பழுத்தவோர் ஆலம்பழம் விழுகின்றது. திடுக்கிட்டு விழித்த அவனுக்குத் தன் முகத்தில் விழுந்த ஆலம்பழம் சிறியதாயில்லாமல் தான் நினைத்தது போல் பெரியதாய்ப் படைக்கப்பட்டிருந்தால் தன் கதி என்னவாகியிருக்கும் என்ற எண்ணம் வருகின்றது. அப்போது அவனுக்கு இறைவனின் புத்திசாலித்தனமான படைப்பையெண்ணிப் பிரமிப்பு ஏற்படுகின்றது. இறைவனின் படைப்பில் எப்போதும் பிழையிருக்காது என்பதைக் கூறும் கதை இது.

சிறு வயதில் எனக்கு ஏனோ அக்கதை உடன்பாடாய் இருக்கவில்லை. கதை ஏதோ அந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாயிருந்தாலும், நமக்கோ வழிப்போக்கன் ஒரு பலா மரத்தின் கீழோ அல்லது முள்ளு முள்ளாய்க் காய்க்கும் டூரியன் மரத்தின் கீழோ படுத்துத் தூங்கியிருந்தால் என்ன கதியாகியிருக்கும் என்ற எண்ணமும் கூடவே தோன்றுகின்றது அல்லவா?

அவனது அதிஸ்டம் ஆலமரத்தின் கீழ்ப் படுத்துத் தூங்கவேண்டி ஏற்பட்டது. கடவுள் காப்பாற்றி விட்டார் என்று எண்ணிக்கொள்ள வேண்டியதுதான். அதிஸ்டமில்லாதவனைக் கடவுள் கூடக் காப்பாற்றமாட்டார். இறைவன் ஏற்றத் தாழ்வின்றி எதுவித தவறுமின்றி இந்த உலகைப் படைத்திருந்தால் ஈழத் தமிழினம் ஏன் இவ்வாறு இடர்ப்படவேண்டும்.

*- தொடருவம்.*


*வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.*
*ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.*
*ஒரு பேப்பர்*



## "Weakness Gone.. Energy On.."
இது உறுதி - இன்றைய இரவ இனிமையானது - இனிவரும் இரவுகளும்



மூலிகையில் தயாரிக்கப்பட்ட மாத்திரை ஆண்மை விருத்திக்கான தைலம் இது.

"Recharge Your Life" ஆண்களின் நண்பன்

Mascula Massage Oil for Men
மஸ்குலா மசாஜ் ஒயில்
எண்ணெய் Massage மூலம் ரத்த ஓட்டத்தை அதிகரித்து புத்துயிரூட்டி மீண்டும் சக்தி கொடுத்து ஆண்மையைப் பெருக்கி இளமையாக்கும் அரிய மருந்து.
£ 20
*To Tone Up The Under-developed Penile Muscles & Nerves of Male Sex Organ For Improved Performance*



Performance Enhancer for Men
Herbal 1-Top Capsules
கேர்பல் வன் டொப் கப்சியூல்ஸ்
உலகத்தின் அனைத்து ஆண்களாலும் விரும்பப்பட்ட ஆண்மை அதிகரிக்கும் ஒரே நிவாரணி. £ 30
• ஆண்மைக் குறைவு • உடலுறவு பலவீனம் • அனைத்தும் ஒரே மருந்தில்
*Herbal 1-Top Capsules for Male Problems & Impotence Management*



HEART CARE
£ 10 கார்ட் கெயார் கப்சியூல்ஸ்
அனைத்து இதய சுவாச நோய்களை கட்டுப்படுத்த
• இதயத்தை பலப்படுத்த
• இதய அழுத்தத்தை சீராக்க
• இரத்த ஓட்டத்தை சீராக்க உடன் அணுகுங்கள்

AVAILABLE FROM YOUR LOCAL CHEMIST NATIONWIDE

Bristol 60 Almavale Road, Clifton, 011 7973144
Birmingham
1. Spark Hill, 491 Startford Road, Tel: 0121-4720174
2. 115 Soho Road, Handsworth, Tel: 01215512444
Bradford 127, Great Horton Road, Tel: 0845 257 0181
Coventry 5 Station St. West, Tel: 0871 310 6443
Derby299 Normanton Road, Tel: 01332 366644
Gravesend2 Living Stone Rd, Tel: 01474 365140
Glasgow 405 Great Western Rd, Tel: 0141 3395979
London
1. 82A Baker Street, Marylebone, 020 7935 9667
2. 231 Finchley Road, Finchley, 020 7794 5486
Leyton Meraj Pharmacy, 694 High Road, 020 8558 5416
Hayes 788 Uxbridge Road, Tel: 020 8848 4612
Hounslow 322 Great West Road, Tel: 020 8577 7436
ILLFORD:
1.Munro Pharmacy, 303 Green Street, Tel: 020 8471 2575
2.Eden Pharmacy, 79-85 Goodmayes Rd. Tel: 020 8597 3477
Kingsbury511 Kingsbury Road, 020 8204 8731 (T)
Wembley
1. 282 Ealing Road, Tel: 020 8902 5047
2. 182 Ealing Road, Tel: 020 8902 0173
3. 210 Ealing Road, Tel : 020 8902 4698
SouthHall
1. Gill Chemist, 31-33 King Street, Tel: 020 8571 1555
2. Dokal Cash & Carry, 133-135, Southall Broadway, Tel: 020 8574 1647
Tooting
246 Upper Tooting Rd, Tel: 020 8672 5417
Leeds
255257 Roundhay Road, Tel: 0113 2490557
Leicester
68 Hartington Road, Tel: 0116 253 7985
Luton
453 Dunstable Road, Tel: 01582 572523
NORBURY - 301 Northborough Road 020 8764 1629
NorthHampton
4 Kingsley Park Terrace, Tel: 0160 471 3297
Reading
104a Oxford Road, 0118 9572687
Slough400 Farnham Road, 01753 517263
WolverHampton311 Dudley Road, Tel: 01902342 000

டயாநில் பென்டா கப்சியூல்ஸ்
Dianil Penta Capsules
இனிப்பு சிற்றுண்டிகளை ஏன் தவிர்க்க வேண்டும்?



சர்க்கரை வியாதிக்கோர் அரிய இயற்கை மூலிகை மருந்து
கணையச் சுரப்பிகளை தூண்டி இன்சுலின் ஓமோனை சுரக்க வைப்பதன் மூலம் சர்க்கரை நோயினால் வரும் அனைத்துப் பாதிப்புகளிலிருந்தும் விடுபட ஒரு புதிய நிவாரணி. £ 10



LIVER CARE
£ 10
லிவோ எஸ்மைலின் கப்சியூல்ஸ்
• ஈரல் வீக்கம்
• hepatitis (A & B) virus இன் தாக்கத்தால் ஈரல் பெரிதாகல்
• அதிக குடிப்பழக்கம்
• மலக் கடுப்பு
• ஜீரண சக்தியில் குழப்பம்
• ஈரல் தொழிற்பாட்டில் பிரச்சனை இதற்கெல்லாம் சிறந்த நிவாரணி



BRAIN CARE
£ 10 செரபிக்ஸ் கப்சியூல்ஸ் (பிரெய்ன் கெயார்)
• ஞாபக சக்தியைக் கூட்டவும்
• மன அழுத்தத்தைக் குறைக்கவும்
• மனப் பயத்தைத் (anxiety) தவிர்க்கவும்
• இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும்

கிமாலயன் வொண்டர் கார்லிக்
Himalayan Wonder Garlic



உங்கள் உடம்பில் கொழுப்பைக் குறைத்து கலங்களுக்கு புத்துயிர் அளிக்கும். இமய மலையின் இயற்கை சூழ்நிலையில் விளைந்த மாசடையாத பூண்டு. £ 10
இதயநோய், கொழுப்பு நோய் நிவாரணி.
Supports anti-clotting mechanism in arteria and veins.

Pentax Hair Tonic
பென்ரக்ஸ் கெயர் டொனிக்
வழுக்கைத் தலையர்களுக்கு ஒரு வழி
• தலை வழுக்கை
• தலை முடி உதிர்தல்
• தலைமுடி சன்னமாதல்
• அலோபேசியா (aloepacia) நோய்
அனைத்தும் குணமாக்கலாம் £ 10



PURE SHILAJEET
£ 10
பியோர் சிலாயீட் கப்சியூல்ஸ்

Contact: Mr. J.B. Singh 0781 541 9103 * Dr. R.N. Sharma (B.A.M.S. M.D. (Ayurvedic)
Pentavox (UK) Ltd, P.O. Box 409, Northolt UB5 9AJ Middx. Tel: 020 8423 8800, 07815 419 103
e-mail: info@pentavoxuk.com * Online Shopping: www.pentavoxuk.com
Postage & Packaging Free over order worth £30
"Distributors/Stockist required all over UK & Europe"

# விடத்தல் தீவு, வவுனிக்குளம் பகுதிகளைக் குறி வைக்கும் சிறிலங்காப் படையினர்




**வன்னியன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வன்னியில் படைகளை அகலக்கால் வைக்க வைத்து மற்றுமொரு ஜயசிக்குறுய் படை நடவடிக்கையை அரசு நடத்திக் கொண்டிருக்கிறது.

வட பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் கடந்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பெயரிடப்படாத நடவடிக்கை தொடர்கிறது. விடு தலைப் புலிகளுக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியவாறு அவர்கள் வசமுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதே படைகளது நோக்கம்.

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறுய் படை நடவடிக்கையின் நோக்கம் வேறு தற்போது நடைபெற்றுவரும் படை நடவடிக்கையின் நோக்கம் வேறு.

ஜயசிக்குறுய் நடவடிக்கை வவுனியாவுக்கும் யாழ்க்குடா நாட்டுக்குமிடையேயான தரை வழிப்பாதையை திறப்பதையே நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. இதன் மூலம் 'ஏ9' வீதியைக் கைப்பற்றி வன்னியை இரண்டாகப் பிளவுபடுத்தி, வன்னிக்குள் தொடர்பற்ற இரு பகுதிகளுக்குள் புலிகளைப் பலமிழக்கச் செய்து பின் பிரிக்கப்பட்ட ஒவ் வொரு பகுதிகளுக்குள்ளும் புகுந்து அவர் களை அழித்து நிலத்தினைக் கைப்பற்றுவதே ஜயசிக்குறுவின் நோக்கமாயிருந்தது.

இதன் மூலம் ஆனையிறவிலிருந்தும் பூநகரியிலிருந்தும் புறப்பட்ட படைகள் பரந்தன் ஊடாக கிளிநொச்சி வரை நகர்ந்திருந்தன.

அதேபோல் வவுனியாவிலிருந்து நகர்ந்த படைகள் இருவருடங்களின் பின் மாங்குளம் வரையும் நெடுங்கேணியூடாக இரகசியமாக நகர்ந்த படைகள் (சிறாட்டிகுளம் வரை இரா ணுவம் நகர்ந்தது போல்.) வாவெட்டிமலை ஊடாக ஒட்டுசுட்டான், ஒலுமடு, ஏன் அம்ப காமம் வரை நகர்ந்திருந்தன. அதற்குமேல் அவர்களால் ஒரு அடி கூட நகர முடியவில்லை.

**இதுவரை அரசபடைகளின் நட்சத்திர நாயகனாகத் திகழும் லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவிக்காலம் முடிந்து வீடு செல்லும் போது இலங்கை வரலாற்றிலேயே மிகவும் தோல்வியைத் தழுவிய இராணுவத் தளபதி என்கின்ற நிலையில் கூட செல்லலாம்.**

அதேபோல் தான் மன்னார்க் கள முனையிலும் ரணகோச, ஜயசிக்குறுய், ஆகிய நடவடிக்கைகளினால் பள்ளமடுவுக்கு தெற்காக ஒருமைல் தூரம் வரை நகர்ந்திருந்தனர்.

அத்துடன் வவுனியாக் களமுனையான மூன்று முறிப்பிலிருந்து நகர்ந்த படைகள் பனங் காமம் வரையும் நகர்ந்திருந்தன. அன்றைய ஜயசிக்குறுய் ஏ9ஐ மையமாக வைத்து அதனை அண்டிய இருபகுதிகளையும் கைப்பற்றி யவாறு நகர்ந்தனர். இது ஜயசிக்குறுவின் களநிலமை

ஆனால் தற்போது இடம்பெறும் நடவடிக் கைகள் ஏ9 வீதியை மையப்படுத்தியதாக இருக்கவில்லை.

வன்னியின் இரு கரையோரங்களையும் மைய மாகக் கொண்டதுடன் ஏ9 வீதிக்குச் சமாந் தரமாக ஏ32 வீதி மற்றும் முல்லைத்தீவு செல்லும் வீதி ஆகியவற்றை மையமாகக் கொண்டது.

**திருக்கேதீஸ்வரத்திலிருந்து பள்ள மடு நோக்கி நகர்ந்தாலும் பெரிய மடுவிலிருந்து பள்ளமடு நோக்கி நகர்ந்தாலும் வரும் களமுனை வெட்டவெளிகளைக் கொண்டது. ஒரு வெட்டவெளி யுத்தத்தை படைத்தரப்பும் அரசும் விரும்பப் போவதில்லை. அப்படி விரும்பினாலும் வெற்றியடையப் போவதில்லை.**

இது வன்னியை மீளக் கைப்பற்றுவதுடன் விடுதலைப் புலிகளின் கடல்வழி விநியோ கங்களை மூடி கடற்புலிகளைப் பலமிழக்கச் செய்யும் நோக்குடன் கடந்த ஒன்றரை வருடங்களாக இடம்பெறுகிறது.

ஏ32 வீதியைக் கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப்புலிகளின் தமிழகத்துக்கான தொடர்பைத் துண்டித்து விடுவதுடன் யாழ்க்குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் படைகளுக்கான தரைவழி வழங்கல்களையும் மேற்கொள்ள முடியும்.

அதேபோல் தான் முல்லைத்தீவினைக் கைப்பற்றுவதன் மூலம் புலிகளின் சர்வ தேசத்தின் தொடர்புகளை துண்டிக்கலாம் என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இனி விடத்தல் தீவு பற்றி நோக்குவேமானால் பத்திரிகைகளும் இராணுவ ஆய்வாளர்களும் கூறுவதுபோல் விடத்தல்தீவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியா என்று நோக்கினால். உண்மையில் இல்லை என்றே சொல்லலாம்.

விடத்தல் தீவினுடைய அமைவிடத்தை நோக்குவோமானால் பள்ளமடுச் சந்தியி லிருந்து 2மைல் தொலைவில் உள்ள விடத்தல்தீவுக் கடற்பரப்பு மிக ஆழம் குறைந் ததாகவே உள்ளது. அவை சேற்றுக் கடலாகவே விளங்குகின்றது. பெரிய படகுகள் விடத்தல்தீவின் இறங்கு துறைக்குள் நுழைய முடியாது. ஏனெனில் அது ஓர் வற்றுப் பெருக்குக் கடல் இறங்கு துறையிலிருந்து கடலைப் பார்க்க முடியாது. இதற்குக் காரணம் கடலி னுள் கண்டல் மரங்களும் ஏனைய கடல் தாவரங்களும் உயர்ந்து வளர்ந்திருப்பதே.

அதிகாலையில் கடல் நீரில் மிதக்கின்ற படகு கள் மாலையில் அதேயிடத்தில் மணற்றிடலில் சரிந்து கிடப்பதனை காணமுடியும். இக்கடல் வற்றுப் பெருக்குக் கடல் என்பதால்தான் இது நிகழ்கிறது. அத்துடன் மன்னார்க்கடலில் இருந்து விடத்தல்தீவு இறங்கு துறைக்கு வருவதானால் அருனோல்டா கால்வாய் ஊடா கவே வரமுடியும். ஏனைய கடற்பகுதிகளால் வரமுடியாது. (1940களில் அருனோல்டா என்கிற மன்னார் அரசாங்க அதிபரின் அனுசர ணையுடன் இங்கு படகுகள் சென்றுவரும் பொருட்டு இக்கால்வாய் வெட்டப்பட்டது.)

ஆகவே மேற்குறிப்பிடப்பட்ட தன்மை யுடைய கடற்பகுதியில் கடற்புலிகள் பெரிய ளவிலான விநியோக நடவடிக்கைகளை மேற் கொள்வதென்பது கடினம்.

விடத்தல்தீவு இறங்கு துறையைக்காட்டிலும் பல சாதகத்தன்மையுடைய இறங்கு துறைகள் மன்னார் - பூநகரி கடற்பகுதியில் நிறையவே உள்ளன. (பாதுகாப்புக் காரணங்களினால் அவ்விடங்களைக் குறிப்பிடுவதைத் தவிர்க் கிறேன்) மேலும் விடத்தல் தீவு மூன்று பக்கமும் சதுப்பு நிலமும் மற்றைய பக்கம் வற்றுப்பெருக்குக் கடலையும் உடைய தன்மையைக் கொண்டது.

விடத்தல் தீவுக்கான ஒரேயொரு விநியோகப் பாதையாக பள்ளமடுச் சந்தியிலிருந்து செல்லும் ஒரு மைல் நீளமான பாதையே உள்ளது. இது சதுப்பு நிலங்களை ஊடறுத்தே செல்கின்றது. அத்துடன் விடத்தல்தீவு அதிமுக்கியமான பகுதியாக இருந்திருந்தால் 1987இல் அரசபடைகள் இவ் விடத்தல் தீவிலேயே முகாமை அமைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. பள்ளமடுச் சந்தியிலேயே இராணுவ முகாமை அமைத்தனர். ஏனெனில் பள்ளமடுச்சந்தியில் முகாம் அமைத்தால் விடத்தல் தீவைக் கட்டுப்படுத்த முடியும் என்பதனை கருத்தில் கொண்டே அங்கு முகாம் அமைத்தனர்.

ரணகோச நடவடிக்கை மூலம் நகர்ந்த படைகள் பள்ளமடுச்சந்திக்குத் தெற்கே இர ண்டு மைல் தொலைவில் நிலை கொண்ட துடன் அதற்குமேல் முன்னேற முடியாமல் தவித்தன. தற்போதும் கூட ரணகோச நடவடிக்கைப் படைகள் நின்ற இடத்திலேயே படைகள் நிற்கின்றன.

இனி மன்னாரில் இராணுவ நகர்வென்பதும் பள்ளமடு யுத்தம் என்பதும் பாலைவனத்திற்கு ஒப்பானது. திருக்கேதீஸ்வரத்திலிருந்து பள்ள மடு நோக்கி நகர்ந்தாலும் பெரிய மடுவிலிருந்து பள்ளமடு நோக்கி நகர்ந்தாலும் வரும் கள முனை வெட்டவெளிகளைக் கொண்டது. ஒரு வெட்டவெளி யுத்தத்தை படைத்தரப்பும் அரசும் விரும்பப் போவதில்லை. அப்படி விரும்பி னாலும் வெற்றியடையப் போவதில்லை.

அதனால்தான் பாலம்பிட்டியிலிருந்து காடுக ளினூடாக சிறாட்டிகுளம் சென்ற படைகள் மேற்கு நோக்கி திரும்பி கூராய் கள்ளியடி வீதியில் கூராய்வரை சென்றிருக்கின்றன. கூராயிலிருந்து மேற்கு நோக்கி நகர்வதன் மூலம் படைகள் கூராய், கள்ளியடி என்பவற் றைக் கைப்பற்றி விடத்தல் தீவை முற்றுகையிட முற்படுகிறது.

(தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)

**SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE**

World Famous Special Astrologist!
Face Reading & Palm Reading



1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON,
E6 1SH
(NEAR PRIMARK STORE)

Call: **S.P. SRIRAM GURJI**
AADIVASI MUKKIYA



இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனை களைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்மை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப் படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங் களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.



திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: 07918 808 855
07506 933 790

**S.P. SRIRAM GURJI**
AADIVASI MUKKIYA
Spoken languages: Tamil, Telugu, Hindi, Kannada & English.

# விடத்தல் தீவு, வவுனிக்குளம் .....

(9ம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோல்தான் ரணகோசப் படைகளும் ஆத்திமோட்டை ஊடாகக் கள்ளியடி நோக்கி நகர முற்பட்டபோது மிகப்பெரிய இழப்பைச் சந்தித்திருந்தன.

அப்போது ஆத்திமோட்டை கூராய் சதுப்பு நிலப்பகுதியில் நடந்த சண்டைதான் ரண கோசப் படை நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவரும் நிலைக்குத் தள்ளியது.

இனிவரும் வாரங்களில் இராணுவம் விடத்தல்தீவை கைப்பற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அவ்வாறு மேற்கொள்ளும் போதுதான் அதன் பலாபலன்களை அரச படைகள் உணரமுடியும். அடுத்த இருவாரங் களில் இதை எதிர் பார்க்கலாம்.

அவ்வாறுதான் சிறாட்டிகுளம் மற்றும் நட்டாங் கண்டல் வரை நகர்ந்த படையினர் பாண்டியன் குளம் ஊடாக வவுனிக்குளம் வரை நகர முற்படு கின்றனர். ஏனெனில் வன்னியில் மையப் பகுதியில் அவ்விடம் ஓர் கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த பகுதியாகும்.

இந்த வவுனிக்குளம் பகுதியைக் கைப்பற்றி விட்டால் மாங்குளம் பகுதி நோக்கி நகர்வது இலகு அத்துடன் வவுனிக்குளம் படைகளின் வசம் வந்துவிட்டால் மல்லாவி, மற்றும் துணுக்காய் ஆகியன இலகுவாகவே படைகள் வசமாகும்.

எப்பாடுபட்டாவது வவுனிக்குளம் வரை நகர்ந்து விட்டால் வவுனிக்குளத்தின் நீரேந்துப் பகுதியூடாக பாலைப்பாணி வரை சென்று விடுதலைப் புலிகளின் மூன்று முறிப்பு - வன்னிவிளாங்குளம் பாதையை பாலைப் பாணியில் ஊடறுப்பதன் மூலம் புலிகளின் மூன்று முறிப்புக்கான வழங்கல்களைக் கட்டுப்படுத்தி அவர்களைப் பின்னகர்த் தினால். மூன்றுமுறிப்பினூடாக பனங் காமம் நட்டாங்கண்டல், சிறாட்டிக்குளம், வவுனிக்குளம் என்பவற்றுக்கான இராணுவ வழங்கல்களை செப்பனிட முடியும். எனவே வவுனிக்குளம் வரை படைகள் நகர எத்தனிக்கின்றன.

ஜயசிக்குறுாய் படைகள் வவுனிக்குளத்தின் வால்கட்டுப் பகுதியான (மேலதிக நீர் வெளியேற்றப்படும் பகுதி) கிடாய்ப் பிடித்த குளம் வரை நகர்ந்து மேற்கொண்டு நகர முடியாது தவித்தன. இதற்குவவுனிக்குளத்தின் புவியியல் அமைப்பே காரணம்.

இன்னும் மூன்று மாதங்கள் கடந்து விட்டால் மழைகாலம் வந்துவிடும் மழைகாலம் வந்தால் பனங்காமம் - வவுனிக்குளம் ஆகிய பகுதிகளை ஊடறுத்து ஓடும் பறங்கிஆறு, பாலியாறு, மற்றும் உப்பன்ஆறு, ஆகியன நீர் நிரம்பி ஓடும். பெரும்பாலும் இவ்வாறுகள் நிரம்பி அவ்வாற்றின் இருமருங்கிலுமுள்ள சில பிரதேசங்களை தன்னுள் அடக்கி ஓடும் அதன் போது பிரதேசங்களுக்கிடையிலான தொடர் புகள் துண்டிக்கப்படும் உதாரணமாக பாலியாறு பாய்ந்தோடுகின்ற போது பாண்டி யன் குளத்திற்கும், வவுனிக்குளத்திற்குமான தொடர்பு சில வாரங்களுக்கு துண்டிக்கப் பட்டிருக்கும்.

படைகள் நகர்ந்திருக்கும் போது அவ் வாறு துண்டிக்கப்பட்டால் அது விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும். அத்துடன் வவுனிக்குளம் நோக்கிய இராணுவ நகர் வென்பது இலகுவில் சாத்தியப்படாத ஒன்று. இதுபற்றி பிறிதோர் சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராய்வோம். இருந்த போதும் இப்பிரதேச ங்களை நோக்கி படைகள் அடுத்தடுத்த வாரத்தில் நகர்வுகளை மேற்கொள்ளலாம்.

இவையனைத்தும் விடுதலைப்புலிகள் வழி மறிப்புத் தாக்குதலிலிருந்து தாக்குநிலைக்கு மாறும்வரை படைகள் தமது நகர்வுகளை வேகப்படுத்தவே முயலும்

வன்னியில் படைகள் அகலக்கால் விரித்ததன் பலாபலன்களை வெகுவிரைவில் உணர்வார்கள் என நம்புகிறேன்.

இதுவரை அரசபடைகளின் நட்சத்திர நாயக னாகத் திகழும் லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவிக்காலம் முடிந்து வீடு செல்லும் போது இலங்கை வரலாற்றிலேயே மிகவும் தோல்வியைத் தழுவிய இராணுவத் தளபதி என்கின்ற நிலையில் கூட செல்லலாம்.

இவையனைத்தும் அடுத்து விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவிருக்கும் நகர்வுகளி லேயே தங்கியுள்ளது. எனவே புலம்பெயர்ந்த நாம் விரைவில் வெற்றிச் செய்தி நம் செவிகளில் விழும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

## கால மாற்றம்

தமிழரின் வாழ்வு பெரியதென்றே
தரணியில் அறிஞர் போற்றிடுவார்.
தமிழரின் வாழ்வில் சீர்கேடாம் - அதை
திருத்திட நாமும் முன்வருவோம்.

கோவில் தெய்வம் என நடுங்கி
குளித்து முழுகி ஓடுகின்றார்
வானை எட்டத் தேவாரம்
வருந்திஇ அழுதே பாடுகின்றார்

பூணூல் போட்ட ஐயர் அவர்
புனிதர் என்றே போற்றுகின்றார் - ஏனோ?
இவர்கள் மோட்சமதை பூமியில்
இன்னும் பெறவில்லை

புத்தன், யேசு, நபியின் பின்னால்
புதிய தூாதுவன் வந்தானா?

கொத்தும் வெட்டும் கொலைகளுடன்
குண்டுமழைகளும் பொழிவது மேன்?

சொத்தும் சுகமும் வெறுத்தல்லவோ
சொறிந்தார் குருதியை நமக்காக
செத்தும் வாழும் மனிதர்களே - நம்
சித்தம் வணங்கும் தெய்வங்களாம்

சித்தம் வாழும் பூக்களுக்காய்
சிரங்கள் தாழ்த்தி வணங்கிடுவோம்.

மாப்பிள்ளை பெண்ணுக்கு மங்திரமாம்
மேடையில் தமிழர்கள் மந்தைகளாம்
பார்ப்பனர் தந்துநாம் மாங்கல்யம்
பாவிகள் கேட்பது நம்மவராம்

கூப்பிய கையொடு தோதையுமாம்
குங்கும மஞ்சனின் விளக்கமதாம்
சாப்பிட அழைப்பது தாய்மொழியாம் - நாம்
சாகிலும் அழுவதும் தமிழ் மொழியாம்

*- த. கணேசராசா*


**Do you run a business?**

**Do you employ staff?**

**Do members of public have access to your business premises?**

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

**Covers for shops and businesses can be arranged with excesses as low as**

**£50** for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

**Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop**

**ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!**

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா?
உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில் எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

**Need Van Insurance?**

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

**Have 3 or more vehicles?**

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver (17+ without any higher excesses) and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now...

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

***Your business insurance can also be extended to include the contents in the flat above if required***

வாசகர் கடிதம்

# பக்தியும் கடவுள் நம்பிக்கையும்

சில வாரங்களுக்கு முன்பு வெளியான ஒரு பேப்பரில் ஒரு சாயிபாபா மாயா வித்தை காட்டுவதாக விமர்சித்திருந்தார். உலகில் பல பாகத்திலும் சாயிபாபா பக்தர்கள் ஆயிரக்கணக்கில் வாழ்கின்றனர். தமிழர்கள் அல்லாத பிறமொழி பேசும் இந்தியர்களும் இதில் அடங்கும். வியாழக்கிழமை தோறும் இலண்டனில் பல இடங்களில் பஜனை நடக்கிறது. உண்மையான பக்தி ஒருவனைத் தவறான வழியில் கொண்டு செல்லாது. மனதில் உண்மையான பக்தி இருந்தால் அதற்கான பலன் உண்டு. கிருபானந்தவாரியார் பிரசங்கம் செய்யும்போது சென்ன கதை ஒன்றை உதாரணமாகக் கூறலாம்.

ஒரு நாள் ஒரு குருவும் சீடனும் ஆற்றைக் கடக்க முற்பட்டனர். அப்போது ஆற்றில் வெள்ளம் அதிகமாக இருந்தது. சீடன் குருபாதம் துணை, குருபாதம் துணை என்று மனதில் தியானித்தபடி ஆற்றில் கால் வைக்க ஆறு நீர் குறைந்து அவனுக்குப் போக வழிவிட்டது. இதனைப்பார்த்த குரு எனது பாதத்தைத் துதித்தபடி சீடன் ஆற்றைக் கடந்து விட்டான். அப்போ நான் என் பாதம்துணை என்று தியானித்தால் போதும் என்று எண்ணிக் கண்ணை மூடி என்பாதம் துணை, என்பாதம் துணை என்று ஆற்றில் காலை வைத்தார். ஆற்று வெள்ளம் அவரை அடித்துச் சென்று விட்டது. குருவின் மனதில் தான் பெரிது என்ற ஆணவம் வந்துவிட்டது. தனக்கு மேல் ஒருவன் இருப்பதை மறந்துவிட்டார்.

இதன் பொருள் ஒவ்வொருவர் மனதில் உள்ள கடவுள் நம்பிக்கை, பக்தி ஒருபோதும் வீண்போகாது. நூறு வீதம் கடவுளை நம்பு அப்போது நீ நிச்சயமாகக் கடவுளைக் காண்பாய். என்று தனது சீடர்களுக்கு இராமகிருஸ்ணர் கூறினார். எனவே சாயிபாபா எப்படியிருந்தாலும் அவர்களை நம்பும் பக்தர்கள் அதற்கான பயனை அடைவார்கள். பல பக்தர்கள் தமது அனுபவத்தை எழுதிவருவதை மாதசஞ்சிகைகள் பலவற்றில் நான் படித்திருக்கிறேன்.

கலியுகத்தில் மக்களுக்கு கடவுள் நம்பிக்கை குறைந்து வருவதால் நான் பல அற்புதங்களைச் செய்கிறேன். அவர்கள் மனதில் கடவுள் நம்பிக்கை வளர்ப்பதற்காகவே அப்படிச் செய்வதாக சாயிபாபா தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சாயிபாபா பக்தர் அல்லாதவர்கள் சிலர் புட்டப்பத்தி போய் வந்தார்கள். அந்தச் சூழ்நிலை தங்களுக்கு இனம் புரியாத அமைதியையும் சந்தோசத்தையும் அளித்ததாக கூறினார்கள்.

இந்துமதம் எல்லோருக்கும் விரும்பியபடி வழிபடச் சுதந்திரம் அளித்துள்ளது. எவரும் தமக்கு நம்பிக்கையானவற்றைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் அதிக சுதந்திரமும் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்ல வழிகோலுகிறது. (இங்கிலாந்து அரசியல் சட்டங்கள்போல மக்களுக்கு இருக்கும் சலுகைகள் யாவும் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது) எதையும் மனச்சாட்சிப்படி பகுத்துணர்ந்து நடந்தால் பலன் பெறலாம்.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பிற்பின்

என் குற்றமாகும் இறைக்கு - என்பது குறள்.

தனிப்பட்ட ஒவ்வொருவர் தமது மனத்திலுள்ள குற்றங் குறைகளை நீக்கி தமது மனத்தைப் பண்படுத்தி வாழ்வதுதான் சிறந்தது, பயனுள்ளது. அதனை விடுத்து மற்றவர்களில் குறைபிடிப்பதில் யாவருக்கும் எதுவிதப் பயனுமேற்படப் போவதில்லை.

*- தவம்*

# ஊரைக் கெடுக்காதீர்

உங்கள் பத்திரிகையில் ஆசிரியராக கடமை புரிபவர்கள் சைவ சமயத்தை சாராத வேற்று மதத்தை சார்ந்தவர்களாக இருக்கவேணும். ஏனெனில் சைவ சமயத்தையும் வேத ஆகமங்களையும் கோவில்களையும் தவறாக எழுதுபவர்கள் ஏன் கிறீஸ்தவ மதத்தையும் இஸ்லாமிய மதத்தையும் எழுதலாம்தானே

உங்களின் அம்மா, அப்பா, பேரன், பாட்டன், பாட்டிமார்கள் படிக்கவில்லையோ? நீங்கள் எழுதுவதை அவர்கள் செய்யவில்லையா? இப்பதான் அதனை கண்டு பிடித்து விட்டீர்களா?

உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் தயது செய்து மற்றவர்களை குழப்ப வேண்டாம். இந்தப் பிறவியில் உங்களுக்கு நல்லதை எழுத, பேச நல்ல நாக்கு, பழுது படாத உடம்பு இருக்கின்றது. உங்களின் சந்ததிக்கோ பேரன், பூட்ட பிள்ளைகளுக்கு இப்படி அமையும் என்று ஒரு உத்தரவாமும் இல்லை. ஏன் உங்களுக்கு இந்த கடிதம் கிடைக்கும் பொழுதோ! அதற்கு பின்னாலேயோ நடக்க மாட்டாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. சைவசமய எந்தவொரு புத்தகமாவது மற்ற மதங்களின் குறைபாடுகளை எப்போதாவது எழுதி இருக்கின்றாதா?

தயவு செய்து மதப் பிரச்சினைகளை இங்கு தொடங்கி யாழ்ப்பாணத்தில் முடிக்க வேண்டாம். எப்படி நடந்ததோ அப்படியேநடக்கட்டும். உங்களுக்கு எப்படி ஆண்டவனை வழிபட முடியுமோ அப்படியே வணங்கவும்.

முன்பு எப்படி தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழையும் சமயத்தையும் வளர்த்தார்கள் என்று பார்க்கவும் நீங்கள் அப்படி உருப்படியாக என்ன செய்திருக்கிறீர்கள்

நீங்கள் செய்வது தமிழ் பத்திரிகையில் ஆங்கிலப் பக்கத்தை நிரப்பி அரைகுறை தமிழ் ஆங்கிலம் படித்து எழுதி உங்கள் பணம் உங்கள் வங்கிகளில் நிரப்புவதுதான் உங்கள் விருப்பம்.

நீங்கள் செய்ய வேண்டியது ஆங்கிலத்தில் மட்டும் எழுதி தமிழ் மக்களின் பிரச்சனையை ஆங்கில மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். தமிழ் மக்கள் என்றும் தலை வணங்குவார்கள்.

உங்களுக்கு உங்களின் தாய் தந்தையர் நல்ல பெயர் வைத்திருக்கினம் (சமயப் பெயர்கள்) உங்களின் பத்திரிகையில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. இங்குள்ள தமிழர் எத்தனை பேர் தமிழ்ப் பெயர் வைத்திருக்கினம். தங்களுடைய பிள்ளைகளுக்கு? எத்தனை பிள்ளைகள் தமிழ் கதைக்கினம் என்று எழுதவும்.

இவ்வளவும் உங்களின் கண்முன்னால் நடக்கும் (எவ்வளவோ குடும்பத்தைப் பார்த்திருக்கிறேன்) நீங்களும் குருடு, கைகால் இழந்து நிற்க மாட்டீர்கள் என்பதற்கு ஒரு உத்தரவாதமும் இல்லை. வினை விதைத்தவன் வினையை அறுவடை செய்தே ஆகவேண்டும். இதுதான் எல்லா மதங்களும் கூறுகின்றன.

நீங்களும் இஸ்லாம் மதத்தைப் பற்றி எழுதவும், கிறிஸ்த்தவ மதத்தைப் பற்றி எழுதவும். இதன் பிரதி எல்லோருக்கும் கொடுக்கப்படும். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கவும். நீங்கள் மருந்து பெட்டியுடன் திரியும் காலம் விரைவில் வரும்.

*- ஜோன் அல்பேட்*

# உடல்நல மேம்பாட்டு ஆய்வு

தமிழ் மக்களிடையே உடல் நலத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று எண்ணிய தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு (TRAG) 7.6.08 அன்று சனிக்கிழமை கிழக்கு லண்டனில் மனோர் பார்க் எனும் பகுதியிலமைந்த புறோட் சனசமூக நிலைய மண்டபத்தில் (Froud community centre) ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடாத்தியது. தலைவர் சட்டத்தரணி சிதம்பரப்பிள்ளை அவர்களின் வரவேற்புரையுடன் கூட்டம் ஆரம்பமானது. வைத்தியக் கலாநிதி மைக் கில் சிறப்புரை வழங்கினார்.

வைத்தியக் கலாநிதி குலசேகரம் ரஞ்ச தயாளன் (இருதய வைத்திய நிபுணர் நியூகாம் போதான வைத்தியசாலை) இருதய நோய்களும், தடுப்பு முறைகளும் பரிகாரங்களும் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசினார். தனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பை மிகக் கச்சிதமாகப் பேசினார். பார்வையாளர்கள் கேள்வி கேட்கவும் சிறிது நேரம் ஒதுக்கியிருந்தார். பலர் தமது சந்தேகங்களை (மாத்திரைகள் எடுக்கும் விதம்) கேட்டனர். அமைதியாக சிரித்துக் கொண்டே பதிலளித்தார். படியேறும்போது நடு நெஞ்சில் இறுக்கமாகி கஷ்டப்பட்டால் அது அஞ்சைனா என்னும் இருதய வியாதி என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

அடுத்து எம்மவரை அதிகம் பாதித்திருக்கும் நீரழிவு என்னும் வியாதி பற்றி வைத்தியக் கலாநிதி நவநீதராஜா விரிவாக விளக்கமளித்தார். நோயின் அறிகுறி, எவ்வாறு வராது தடுக்கலாம், வந்தபின் சாப்பாடு, உடற்பயிற்சி சிகிச்சை முறை என்பவற்றால் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று கூறினார். பரம்பரையில் இருந்தால் 25 வயதிலிருந்தே அடிக்கடி இரத்தப் பரிசோதனைக்குப் போய்ப் பார்ப்பது நல்லது என்றார்.

கலாநிதி ஆனந்தவரதன் புலம்பெயர் நாடுகளில் மக்கள் எதிர்நோக்கும் பொதுவான உடல் நலப் பிரச்சனைகள், புகைத்தல், போதைவஸ்த்து, மதுபானம் எடுத்தல் என்பவற்றைப் பற்றிப் பேசினார். போல் சத்தியநேசன் (கவுன்சிலர்) மக்களின் பொதுவான பிரச்சனைகள எடுத்துரைத்தார்.

உளநல மேம்பாடு பற்றி வைத்திய கலாநிதி ஸ்ரீதரன் என்பவரும் பெண்கள் உடல்நல, மனநலப் பிரச்சனை சம்பந்தமாக சசி நந்த குமாரும் உரையாற்றினர். யோகி ராம்சுந்தர் எவ்வாறு மனத்தையும் உடலையும் உறுதிப்படுத்தும் என்பதை விளக்கினார். திருமதி வே. மகேஸ்வரன் நன்றியுரை வழங்க, இராப்போசனத்துடன் நிகழ்வு நிறைவுற்றது.

நடுத்தர வயதினரும், வயதானவர்களுமே பார்வையாளராக அமர்ந்திருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மிகவும் பயனுள்ளதாக இந்த ஆய்வுக் கூட்டம் அமைந்தது என்பது மனதிற்கு நிறைவளித்தது. இத்தகைய கூட்டங்கள் பல இடங்களிலும் நடைபெறுவது நல்லது.

*-அனு*




## அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

**உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?**

**நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?**

***"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"***

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

**020 8444 6655.**

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

**"யாமிருக்கப் பயம் ஏன்?"**

அழையுங்கள்:

**தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்**

**0208 444 6655**

*தமிழர் அறங்காவற் கட்டளை*
(இலக்கம்: 1117267)

**tamil community**
"building a better community"
CA House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org

# The Need to Fight Back



By: Sivas Sivaskanthan
TAMILCANADIAN

THE Tamils have, since the degradation of the last series of negotiations, demonstrated an extraordinary amount of patience waiting for a peaceful solution, or at least a prospect of it, to present itself. After much dilly-dallying, a somewhat notable outcome emerged from the All Party Representative Committee (APRC), appointed by President Mahinda Rajapakse. Its publicised brief was to seek out a possible consensual solution to the conflict. It was notable in the sense that the deliberations included members of many, not all, political parties across the Sri Lankan political spectrum. And somewhat, in the sense that it proposed little more than the *full implementation of the current* flawed constitution.

But the UNP and the JVP stayed away, while the primary Tamil voice in parliament, the TNA, was kept away from it. Besides, it didn't even include a reference to merging the Northern and Eastern provinces as a single entity - a consensual cardinal principle for the Tamils as espoused at the Thimphu talks of 1985.

All of which, from a Tamil standpoint, were far short of what is required or can be expected as a workable Sinhala proposal for co-existence. Under such Sinhala guidance, the Tamils will have to wait for centuries in expecting an acceptable alternative to independence. An increasingly strengthening view among influential Tamils.

Forget the several past overtures to minimise conflict; all of which, I might add, fell by the wayside due to the fault of successive Sri Lankan governments.

The only serious initiative at a peaceful resolution, in the history of the war for Tamil independence, was the last negotiations initiative and framework, carefully constructed and painstakingly pushed through by the Norwegians in 2002. That had many reasons to succeed had the envisioned process been allowed to carry itself out without various actors, supervisors included, both advertently and inadvertently throwing their respective spanners into the works.

## Irreparable damage

Having said that, the credit for causing the most irreparable damage to that peace effort belongs to the President of Sri Lanka at the time, Chandrika Kumaratunge. She single-handedly destroyed the trust-building exercises till that point, by dismissing the ruling government in 2004 when negotiations were progressing in a promising manner.

However, the most compelling case to demonstrate why it would seem to be extremely difficult for the two races to co-exist together as a single unitary political entity came, when Chandrikas' presidential term expired and at the next elections to choose their new President, the Sinhalese people were left to their own political decision making, without Tamil votes diluting their intent.

One would think that after almost two decades of war and suffering on the island, any reasonable voting body would elect a leader on a platform for peace. That would have been asking for too much in the case of Sri Lanka. When the election drama settled, Mahinda Rajapakse was elected on a far more aggressive position with regards to the ceasefire and the Tamil question.

Regardless of the fact that the Tamil leader Vellupillai Pirabaharan still greeted him to office as a pragmatist, the anti-Tamil conduct and flow of the Sinhala electorate by itself should illuminate, significantly, the traits and attitudes of the Sinhalese people vis-a-vis the Tamils.

It's also an indication of their capacity to co-exist with the Tamils. If we were to shine a little more context into the situation, the state of affairs becomes even more stark.

The preceding negotiations, the well-crafted interim governance structures and the ceasefire agreement itself that underpinned it, were the best the country had seen to date. Despite question marks over the full enforcement over the agreement, it largely held and negotiations were progressing with sufficient credibility, despite facing its own challenges. That is, until Chandrika pulled the mat from underneath the whole process by dismissing the ruling government of Ranil Wickremesinghe under whose stewardship the Sinhala side of the negotiations were proceeding.

This left the country with a ceasefire agreement, but no negotiating partner for the peace process. The rest, you might say, is history. It was all downhill from there.

## Benefit of the doubt

The Tamils always and repeatedly seem to display a penchant for giving the Sinhalese the benefit of the doubt at every new peace juncture, however disapprovingly history might suggest otherwise. An astute observer of the conflict, devoid of diplomatic restrictions, might be forgiven for thinking that the Tamils must be gagging for punishment. So willing have we been to accommodate a just peace within a unitary Sri Lankan state.

The responsibility for the downward spiral that the ceasefire went in, leading to its eventual capitulation, it must be said, must first be borne by the Sinhala people, then by the Sri Lankan government and finally by the Sri Lankan Armed Forces.

So are the LTTE completely fault free, you might ask? In driving the general trajectory of negative events, yes. Their actions have all been reactionary.

In fact, they should be applauded and rewarded for sitting back and absorbing the brunt of the violence with only limited retaliatory strikes.

But the question that begs an answer is; for how long would this be a sustainable strategy for giving peace the best possible chance? Are the *Sinhalese as willing as the Tamils in* wanting a just and permanent peace? The first might be like asking how long is a piece of string, but the answer to second question should be obvious to many. That every opportunity, throughout the conflict, in seeking a negotiated settlement to the Tamil cause, has been met by elected Sri Lankan governments with an intention to prevaricate, undermine or wholly deny the core grievances for the Tamil uprising, belies an undercurrent mindset towards wanting to enslave the Tamils within a unitary pro-Sinhala state.

We could, of course, wait indefinitely in the vain hope that, eventually, a sense of human decency would prevail among the Singhalese and the Tamils would then have no qualms on the sanctity of their citizenship, on their land, no fear on the preservation and relevance of their glorious Tamil language, no risk of infringements to their economic prosperity and the surety that all these shall always remain so.

But that would be an unforgivable dereliction of duty. Especially when the quest for the end of that rainbow would leave Tamils dead, missing or wounded on a daily basis without any measure for a just resolution.

The influence of the international community, especially those of the then working group for Sri Lanka, namely Norway, European Union, Japan, United States and, unofficially, India, has had very little impact on rectifying the belligerent actions of the Sri Lankan government. Moreover, on occasion, it might seem they were encouraging it.

The much vaunted international safety net seemed to have been constructed with the wrong gauge, allowing Sri Lankan transgressions to swim through with impunity.

The governments withdrawal from the ceasefire agreement aside, and let alone the human suffering inflicted on the Tamil people, their current military offensives on Tamil territory are serious breaches of trust and an indication that a solution by peaceful means was never high on the agenda of conflict resolution and probably never will be for any Sri Lankan government.

So, in the absence of any goodwill towards restarting negotiations in its fullest spirit, one might argue that it's about time we called a spade a spade and took matters of our own destiny into our hands. R Sampathan, *the TNA leader, was right in this* aspect when responding in a recent interview to the Sunday Observer. This is our problem. And it's about time we treated it as such, without bleeding ourselves to extinction in waiting for the Sinhala frame of mind to change en masse.

At no point did we abdicate our right to self determination since we first so unequivocally expressed in the declaration of 1976.

It's high time we righted the wrongs of the past few years and moved to taking back control over our affairs and exercise our military powers to the fullest extent necessary





INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய LIFE IN THE UK பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: 07908 866 300

# Karuna - Anthony, public money and mobile phones

**Kusal Perera**
**AZADEK CHAMBER**

Azadek was perplexed. The completely cleaned up Eastern Province that was also democratised with two types of elections one after the other, saw a Presidential helicopter being targeted by suspected LTTE rocket fire on Tuesday, 01st July, while returning from refuelling in Ampara. President was busy on the ground opening the newly constructed Arugam Bay Bridge, the old one devastated by the Tsunami. Then on Friday Police accepted 02 men were shot at in Eravur, by an "armed gang" operating in the area. There were previous incidents in the weeks past that prompted Azadek to ask, how clean the East is now, without the LTTE.

In fact, Karuna who flew into Katunayake BIA after a jail term in the UK for using a diplomatic passport that is not his and was whisked off even before the Immigration could take a look at his face, claims the LTTE is pretty weak now and is defeated. Azadek would now have to piece the statements of two war heroes with Army Commander Fonseka saying he needs another year to defeat the LTTE, but still, they would operate as a guerrilla group. Who knows best about the LTTE? Karuna a one time LTTE boss in the East, a terrorist himself before the break up, or the Army Commander, who has taken the responsibility of defeating the LTTE? They both know what they say, according to Azadek's theory of compunction. Hence what they both say is, what suits them best to be in power and the people would have to believe what is said, without doubting, or else the power equation changes. So the war would continue even after another year, though the LTTE is defeated.

As for Karuna, he wasn't technically brought in by the British Immigration, says Azadek. "How can they? It wasn't Karuna who left." said Azadek. It was Kokila Gunawardane the Wild Life boss who left, although there was never a Wild Life boss by that name. And who came in was one Anthony and not Kokila Gunawardane either. So, if the British law says Karuna Amman was proved using a passport that did not belong to him, then it would have to be either Karuna Amman or the rightful owner of that passport, Kokila Gunawardane, who should have been brought back, or both of them, for that matter. Who is this Anthony? Azadek has no case against him. Therefore Azadek recommends that this Anthony who was sent to Sri Lanka on Thursday on flight UL 504 should be set free immediately, instead of wasting security resources to guard him.

There are plenty of security resources going waste anyway, argues Azadek. Why can't all the parliamentary politicians have their own private security like Duminda Silva, asks this alcoholic bum turned village judge, with his nosey instincts. After all, if this man who is only a PC Member can have private security that as claimed by the super model Arkarsha could carry T-56 weapons, guard her through the day and abduct her too on the orders of their boss, that suits fine for any politician. The whole MSD could be used in the war and that budget could be scrapped altogether, says Azadek.

Even police work could be made easy with less time and money spent on investigations, if the public could heed the advice given by the new IGP. Azadek agrees that any young woman could photograph a rapist with the mobile in hand, if not while being raped, then when the man leaves. Mobile phones now have so many options that could be used for advantage, and these young Missus shouldn't only text on them and lament they don't get replied, thinks Azadek.

Theoretically, it is surprising why journalists who were attacked by "unidentified" armed gangs did not use their mobile phones to take photographs of those goons who attacked them. As explained by Wickramaratne, if women who are raped could help the police by taking photographs, then why not journalists? It takes creative thinking to make the total adult population a new breed of photojournalists. With photos provided for identification, Azadek feels, his work could be made very much easier.

It wasn't nevertheless difficult for the Anuradhapura Magistrate to decide the 08 Buddhist monks produced in his courts were definitely guilty. They had pleaded guilty with the Ven. Vice Chancellor of the Buddhist University, who opted to settle the dispute out of courts. But the Magistrate had a say before it was allowed for private settlement. The Magistrate warned the 08 Buddhists monks that they being monks should not behave in an unruly manner, trying to damage public property and burn the VC's vehicle.

Monks don't behave that way as they are told in Buddhist scriptures on discipline, the patient way of even walking, said the Magistrate, who said all the money spent on their higher education is public money. Azadek wasn't anywhere there to add that all Buddhist monks anyway live on the public, unless they opt to earn their own income.

The public has to sustain more than Buddhist monks, when it comes to daily living. They sustain the politicians, their entourages, their trips abroad and even elections, whether the public wants them or not. Take NCP and Sabaragamuwa PC elections, says Azadek.

Why should the public want those elections, asks Azadek, if those candidates are not those whom the public wants to support? Who asked the public whether they want "Choka mallis and Sarpayas" in their nomination lists? And if the politicians are going to fight it out like in Anuradhapura, Polonnaruwa and Ratnapura, why should the public spend their money for elections? Most would not even get a chance to vote at this rate, says Azadek.

Worst is, if MP's can come and go like S.B. and Hakeem and any other in the future, then even the parliament is not worth spending public money on, says Azadek. But then, if Hakeem feels the whole S.B project slimy, that takes care of it, argued Azadek. It's the law of human nature that finally decides most issues, says Azadek and bowed out for his final tot before the weekend closed on the Sabbath day. This part of the world rotates any way, he thought.

*(www.serendibine.com)*

# UNP accuses Army chief for media attacks



Chief Opposition Whip, Joseph Michael Perera told Parliament yesterday (July 08th) that a "special team" controlled by Army Commander, Lt. Gen. Sarath Fonseka was behind the attacks on journalists.

In a special statement to the House, Mr. Perera said that on June 30th 2008, Namal Perera of the Sri Lanka Press Institute and Mahendra Rathnaweera, an officer of the British High Commission, were badly beaten up by a gang in a white van in a Colombo high security zone.

Earlier, Keith Noyahr of 'The Nation' newspaper was similarly assaulted by a gang in a white van.

In addition, abductions, extortions and extra-judicial killings of persons belonging to all masses, including journalists, by gangs in white vans are reported frequently.

Noting that the government has failed to bring the perpetrators to justice, the Chief Opposition Whip said that in view of this trend of impunity, the UNP feels that the government is connected to such attacks.

Following an exposure by UNP MP Lakshman Seneviratne, ex-Air Force officer Nishantha Gajanayake was arrested in connection with abductions, and fewer similar incidents were reported during his detention.

The fact that Gajanayake was later bailed out by a senior Army officer gave rise to speculation that the Defence Ministry is directly connected to these abductions.

Journalists who criticize the government and the security forces and expose frauds in them are attacked by a special squad under Army Commander.

Noting that he received information from the Army itself, the Chief Opposition Whip challenged the government to arrest the culprits if he was wrong.

Describing remarks by the newly-appointed IGP and his media spokesman on white van killer squads as absurd, Mr. Perera challenged the police to name and to take legal action against journalists who planned to get themselves falsely attacked in order to seek visa to leave the country.

Such officers are not suitable to hold such top positions, the Chief Opposition Whip said, adding that he would ask the National Police Commission through Parliament for their removal.

The government is attempting to publish news items that are supportive of them, by intimidating journalists.

We also would like to prove with evidence that the government is reigning violence in the country through war.

We only ask the government to grant the public their fundamental rights to ensure their freedom.

If they are incapable of doing so, we request a dissolution of the government.

Sri Lanka is yet again named as a failed state and it is evident to any intellectual that the country is heading to be another Zimbabwe.

Speaking further, Mr. Perera said that the estimated budget of the forthcoming SAARC summit is over Rs. 3 billion.

Such an amount of public money is used on bulletproof vehicles and other unnecessary items. The government must tell us how these will benefit the people.

After the SAARC summit, we see no other option for the government than increasing the price of crude oil and increase tax on necessity goods and services to cover the costs.

By this the public will be further burdened by the cost of living and it is distressing to note Sri Lanka is showing signs of a state where rulers will enjoy a life of comforts while the public starves in misery, he added.







ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

**07951 631 883 / 020 8470 5209**

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

**Edutec**
TRAINING CENTRE

aat IAB City & Guilds

# EMPLOYMENT OPPORTUNITIES IN ACCOUNTANCY

# கணக்கியல் வேலைவாய்ப்புக்கள்

சிறிய வகுப்புகள்

**Helps the students to find suitable employment**
**our current employment rate 70%**

மாணவர்களில் நேரடிக் கவனிப்பு

Enrolling for
**AAT courses for December 2008 examinations in just months & Limited places**

PASS RATE 85%

| | | |
|---|---|---|
| **Foundation level 2** | **£400.00** | |
| **Intermediate Level 3** | **£500.00** | |
| **Technician Level 4** | **£250.00** | **per subject** |

Fast Track Foundation & Intermediate Combined
*Classes will be held on week ends and week day's evenings*

**INCREASE YOUR SKILLS GAIN COMPANY BASED EXPERIENCE**

# THOUSANDS OF JOBS IN PAYROLL

# ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்கள்

**Qualify in computerised payroll (SAGE) in 8 weeks**
**At the UK's top IAB centre Edutec.**

| | |
|---|---|
| **IAB Payroll level 2** | **£235.00** |
| **IAB payroll level 3** | **£295.00** |

PASS RATE 100%

*Courses commence on Saturday 12 July 2008 at 9.30am*

அந்த வேலைவாய்ப்புக்களை நீங்களும் பெறுங்கள்

# GRAB THAT JOB

PASS RATE 100%

**COME AND GAIN PRACTAL EXPERIENCE IN COMPUTERISED ACCOUNTING WITH SAGE LINE 50 IN 6 WEEKS**

# PITMANS QUALIFICATIONS

**LEVEL 2 £175.00 and Level 3 £295.00**
**Pitmans qualifications Level 2 £175.00 and Level 3 £295.00**
*Courses Commence on Sunday 13 July 2008.*

**Edutec**
TRAINING CENTRE

7, Station Chambers, High Street North
Eastham, London. E6 1JE
Tel: **020 3200 1006** Mob: **079 5034 3181**
E-mail:info@edutec.org.uk
Web:www.edutec.org.uk

# சர்வதேச அரசுகளும் தமிழர் பிரச்சினையும்

**தாரகா**

*(தினக்குரலில்)*

சர்வதேசம் அதாவது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அரசுகள் சிறிலங்கா அரசின் சமீபகால அணுகுமுறைகள் குறித்து, குறிப்பாக சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்து அதிருப்தி அடைந்து வருவதாகவும், அதன் விளைவாக எதிர்காலத்தில் சிறிலங்கா மீது மேற்கு அரசுகள் பாரிய அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடும் என்றும் பலவாறான அபிப்பிராயங்கள் நம் மத்தியில் உண்டு.

சமீப காலமாக மேற்கு அரசுகள் குறிப்பாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசுகள் வெளிப்படுத்தி வரும் கருத்துக்களினதும், சில நடவடிக்கைகளினதும் பின்புலத்தில் நோக்கினால் மேற்போன்ற அபிப்பிராயங்களை நோக்கி ஒருவர் செல்வதற்கான நியாயம் இல்லாமல் இல்லை.

இவ்வாறான அபிப்பிராயங்கள் ஈழத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்ததும் உண்மை.

புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மேற்கு அரசுகள் சிங்களத்திற்கு எதிரான நடவடிக்கைகள் சிலவற்றை மேற் கொண்டதன் பின்னணியில் தங்களது அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஒரு முக்கிய பங்குண்டு என்று கருதுகின்றனர்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் பின் தளமாக, புலம்பெயர் தமிழர்களின் வாழ் விடங்கள் தொழிற்பட்டுவரும் சூழலில் புலம்பெயர் மக்கள் அவ்வாறு நம்புவதிலும் நியாயமுண்டு.

ஆனால் இவ்வாறான அபிப்பிராயங்கள், மகிழ்ச்சிகள் அனைத்திலும் பலமான அடி விழுந்தது போன்ற சில சம்பவங்கள் தற்போது இடம்பெற்றுள்ளன.

அண்மையில் தற்போது கனடாவில் இயங்கி வந்த உலகத் தமிழர் இயக்கம், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நிதி சேகரிப்பதான குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட்டுள்ளதுடன், இத்தாலியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்ற பேரில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பொழுது நாம் மீண்டும் சர்வதேச சமூகம் குறித்த எங்களது முன்னைய பரிசீலனைகளையே மீளவும் உரையாடல் பரப்பிற்கு கொண்டு வரப் போகின்றோமா அல்லது சர்வதேசம் இன்னும் எங்களது போராட்டத்தை விளங்கிக் கொள்ளவில்லையே என்று ஏக்கப்பெருமூச்சு விடப் போகின்றோமா?

பொதுவாக எங்களது சர்வதேச சமூகம் குறித்த அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் எல்லாம் மேற்கு அரசுகளின் நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு அமைவாக இருப்பதை பார்க்கலாம்.

மேற்கு அரசுகள் சிங்களத்திற்கு எதிராக சில நடவடிக்கைகளை எடுக்கும் போது அதனால் மகிழ்ச்சி அடைபவர்களாகவும், பின்னர் அதே அரசுகள் புலிகளுக்கு எதிராக சில நடவடிக்கைளை எடுக்கும் போது அதனால் அதிர்ச்சி அடைபவர்களாகவும் நமது மக்கள் இருக்கின்றனர்.

எனவே சர்வதேச சமூகம் குறித்து நம்மிடம் ஒரு தெளிவான பார்வை இருப்பது அவசியம் என்றே நான் கருதுகிறேன்.

முதலில் சர்வதேச அரசுகளுக்கும் நமது பிரச்சினைக்கும் உள்ள உறவு மற்றும் முரண்பாடுகளை கணித்துக்கொள்வோம்.

ஆரம்பத்தில் எல்லா விடுதலைப் போராட்டங்களையும் போன்றே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் முற்றிலும் இலங்கை விடயமாகவே இருந்தது.

ஆனால் அது இந்தியாவின் கரிசனைக்குரிய ஒன்றாகப் பார்க்கப்பட்ட போது முதன்முதலாக ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு தெற்காசிய முகம் கிடைத்தது.

இந்தியாவின் தலையீட்டுக்காலத்தில் ஒரு வேளை ஈழப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்தால், அது இந்தியாவிற்கான சர்வதேச நன் மதிப்பை கூட்டும் ஒரு விடயமாக மட்டுமே மட்டுப்பட்டிருக்கும்.

ஆனால் இந்தியா விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக எதிர்கொண்டு பெரும் வரலாற்று தோல்விக்கு ஆளானதைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகளும், தமிழர் விடுதலைப் போராட்டமும் ஒரு தெற்காசிய முக்கியத்துவத்தை பெற முடிந்தது.

> **இந்திய தலையீட்டு காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமானது தெற்காசிய மட்டத்தில் ஒரு வலுவான கெரில்லா இயக்கமாக இருந்தது என்றால், போராட்ட பின்தளம் மேற்கிற்கு மாறியதைத் தொடர்ந்து அது ஒரு மரபுவழி விடுதலை இராணுவமாக பரிணமித்தது**

இது சர்வதேச அரசியலும் தமிழர் போராட்டமும் என்ற கணிப்பில் முதலாவது கட்டமாகும். இந்த போக்கின் இரண்டாவது கட்டம்தான் தமிழர் விடுதலைப் போராட்டமானது மேற்கு அரசுகளுடன் நேரடியாக தொடர்புபடும் கால கட்டமாகும். தமிழர் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் தெற்காசியாவில் அது பின்தளமைக்கக்கூடிய ஒரேயொரு இடம் இந்தியாவாகவே இருந்தது.

இதற்கு, தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் உள்ள வரலாற்று ரீதியான நெருக்கம் மற்றும் கலாசார ரீதியான தொடர்புகள் போன்ற காரணங்கள் உண்டு.

ஆனால் விடுதலைப் புலிகளை தனது மேலாதிக்க நலன்களுக்கு பயன்படுத்துவதில் இந்தியா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, 89-களின் இறுதியில் விடுதலைப் புலிகளை அங்கு செயற்பட முடியாத ஒரு இயக்கமாக இந்தியா தடை செய்தது.

இந்தியாவின் மேற்படி தடையைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டத்திற்கான பின்தளம் மேற்கு நாடுகளை நோக்கி நகர்ந்தது.

ஆரம்பத்தில் தமிழ் மக்கள் அதிகமாக செல்லக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளை நோக்கி நகர்ந்த விடுதலைப் போராட்டத்தின் ஆதரவுத்தளம், பின்னர் படிப்படியாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தையும் இணைத்துக்கொண்டது.

> **எந்தவொரு அன்னிய அரசும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடுவதானது அந்த நாட்டின் சொந்த நலன்களை கருத்தில் கொண்டதாகவே அமைந்திருக்கும்.**

இவ்வாறான சூழல் உருவாவதற்கு மேற்கின் குடிவரவு கொள்கையும், அந்த நாடுகளில் உள்ளக அளவில் பலமாக இருக்கும் ஜன நாயக நடைமுறைகளும் முக்கிய பங்காற்றின எனலாம்.

நாம் மேலே பார்த்த இரண்டாவது கட்டம்தான் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இராணுவ மற்றும் தகவல் பரிவர்தனை வளர்ச்சியில் பெரியளவில் பங்காற்றிய காலகட்டமாகும்.

முதலாவது கட்டத்தைப் பார்ப்போமானால், அதன்போது இந்தியாவை இராணுவ ரீதியாக எதிர்கொண்டதன் பின்னணியில் உள்ளக மட்டத்தில் விடுதலைப் புலிகள் மிகவும் வலுவான இயக்கமாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர் தவிர எத்தகையதொரு சந்தர்ப்பத்திலும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு தலைசாய்க்காது போராடக் கூடிய ஒரேயொரு இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே என்பதை இந்தக்கால கட்டத்தில் புலிகள் நிருபித்தனர்.

மேலும் இந்தக் காலகட்டம் விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தை அதிகரித்ததுடன், தமிழ் மக்களின் ஒரேயொரு தலைமை என்ற அந்தஸ்தையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தது.

இதனை இன்னும் சற்று மேலே சென்று போரியல் வளர்ச்சி நோக்கில் பார்ப்போமானால், இந்திய தலையீட்டு காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமானது தெற்காசிய மட்டத்தில் ஒரு வலுவான கெரில்லா இயக்கமாக இருந்தது என்றால், போராட்ட பின்தளம் மேற்கிற்கு மாறியதைத் தொடர்ந்து அது ஒரு மரபுவழி விடுதலை இராணுவமாக பரிணமித்தது எனலாம்.

இந்தப் பின்னணிகளை கருத்தில் கொண்டு தான் மேற்கு அரசுகள், இலங்கை அரசியல் குறித்த தமது காய்களை நகர்த்தி வருகின்றன.

முன்னர் இந்தியாவின் காய்நகர்த்தல்களுக்கு பின்னால் விடுதலை இயக்கங்களுக்கு பின்தள வசதிகளை வழங்குதல், பயிற்சியளித்தல் மற்றும் ஆயுத உதவிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் காரணங்களாக இருந்தன என்றால், இன்று மேற்கின் தலையீடுகளுக்கு பின்னால் இருப்பது மேற்கில் தமிழர் உள்நுழைவதற்கான குடிவரவு சட்டங்களாகும்.

இது குறித்து திரு.பிரபாகரன் அவர்கள் கடந்த மாவீரர் தின உரையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்ததும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

நான் மேலே குறிப்பிட்ட இரண்டாவது கட்டத்தின் ஒரு முக்கிய பகுதிதான் நோர்வேயின் தலைமையில் விடுதலைப் புலிகளும் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை.

இதன்போது நோர்வே என்பது உண்மையில் நோர்வே அல்ல அது மேற்கு அரசுகளின் குறியீடு. உண்மையில் இந்தக் கால கட்டம் தமிழர் விடுதலைப் போராட்டத்தினைப் பொறுத்த வரையில் அதனை அதுவரை இல்லாதளவிற்கு சர்வதேச மயப்படுத்தியது என்றே நான் சொல்வேன்.

அதுவரைக்கும் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச முகமானது புலம்பெயர் மக்களின் அவ்வப்போதைய நடவடிக்கைளிலேயே தங்கியிருந்தது. ஆனால் நோர்வேயின் தலையீட்டில் ஒரு தீர்வு முயற்சி மேற்கொள்ளப்பட்டதும் அது தோல்வில் முடிவடைந்ததும் ஈழத் தமிழர் பிரச்சினையை முதன் முதலாக சர்வதேச அரசு மயப்படுத்தியது.

இங்கு சர்வதேச அரசுமயப்படுத்தல் என்பதும் சர்வதேச சமூக மயப்படுத்தல் என்பதற்கும் இடையில் இருக்கும் பிரிவை நாம் துல்லியமாக மதிப்பிட்டுக்கொள்வது அவசியமாகும். இதிலுள்ள சுவாரசியம் என்னவென்றால் இரண்டு காலகட்டங்களின் போதும் காலமும், பங்குபற்றுநர்களிலும் மாற்றங்கள் இருந்ததே ஒழிய விடயம் என்னவோ ஒன்றாகவே இருப்பதுதான்.

அதாவது, தமிழர் பிரச்சினை இலங்கை எல்லையை தாண்டிய இரண்டு முக்கிய சந்தர்ப்பங்களின் போதும், அதன் கருப்பொருள் இலங்கையின் உள்நாட்டு பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வை காண்பதாகவே இருந்தது. ஆனால் இரண்டு சந்தர்ப்பங்களும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

*(தொடர்ச்சி 20ம் பக்கத்தில்)*

**By Air** or **By Sea** Weekly Sailings
TRY US and see the **difference**
**TRICO** - *The name you can trust*

இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்
கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை
செய்யக் காத்திருக்கிறோம்

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, you spend on transporting.*

One T-Chest to **Sri Lanka - Only £10**: Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85**: Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95**: Transit Time Only **27 days.**

*Open 6 days a week!*

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com
Trico Shipping and Forwarding Ltd.
555 Whitehart Lane, London. N17 7RP

## நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதுபவர் வித்தகன்

# மனிசரா இல்லாட்டி மண்ணாங்கட்டிகளா?

உலகமெல்லாம் பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுச் சிறப்பாய் நடந்து கொண்டிருக்குது.

இராணுவத்தின்ரை அடக்கு முறைக்கு மத்தியிலை, கொலை அச்சுறுத்தலுக்கும் பயப்படாமல் பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பிச்சு வைச்ச தமிழுணர்வெண்ட அந்தச் சின்னப் பொறி இண்டைக்குப் பெரும் சுவாலை விட்டு எரிஞ்சு கொண்டிருக்குது.

இந்த வரிசையிலை கனடாவிலை நடந்த பொங்கு தமிழ் நிகழ்வுகளிலை ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டவை எண்ட செய்தி கிடைச்சிருக்கு. இதைக் கேட்டுப் பலரும் பெருமைப்பட்டவை. எங்கடை தமிழ்ச் சனம் விழிப்படைஞ்சிட்டுது எண்டு சந்தோசப்பட்டவை.

ஆனால் என்னாலை அப்படிச் சந்தோசப்பட முடியேல்லை. கிட்டத்தட்ட 4 இலட்சம் தமிழர் வாழுற கனடாவிலை ஒரு லட்சம் பேர் தான் கலந்து கொண்டிருப்பினம். அதாவது கால் வாசிப் பேர். அப்படியெண்டால் மிச்ச முக்கால் வாசித் தமிழருக்கும் என்ன நடந்தது?

அவையளின்ரை உடம்பிலை தமிழ் ரத்தம் ஓட இல்லையா? அவையளுக்கு எங்கடை சனம் தாயகத்திலை அநுபவிக்கிற துன்பங்கள் தெரிய இல்லையா? அந்தச் சனத்துக்காக அதுகளின்ரை விமோசனத்துக்காக குரல் குடுக்க வேணும் எண்ட எண்ணம் தோன்ற இல்லையா? அவையளின்ரை மனசெல்லாம் காசு காசு எண்டு அலைஞ்சதிலை மரத்துப் பொயிட்டுதா?

கனடாவிலை மட்டும் தான் இந்த நிலை எண்டில்லை. பொங்குதமிழ் நடந்து முடிஞ்ச எல்லா நாடுகளிலையும் ஒரு கால் வாசிப் பேர் தான் கலந்து கொண்டிருக்கினம். மிச்ச முக்கால் வாசிப் பேரும் என்ரை குடும்பம் என்ரை பிள்ளை என்ரை சொத்து எண்ட சின்ன வட்டத்துக்குள்ளை இருந்து வெளியிலை வந்து என்ரை தமிழ், என்ரை சகோதரங்கள் எண்டு சிந்திக்க வேணும்.

அந்த வரிசையிலை லண்டனிலையும் இந்த மாசம் 12ம் திகதி சனிக்கிழமை பொங்குதமிழ் நடக்க இருக்குது. இதிலையும் எக்கச்சக்கமான தமிழ் ஆக்கள் கலந்து கொள்ளுவினம் எண்டு எதிர்பார்க்கப்படுகுது. ஆனால் இங்கையும் உணர்வுகள் மரத்துச் சடமாப் போன கொஞ்சச் சனம் வரலாற்றுக் கடமைக்கான இந்தக் காரியத்தை விட்டுப் போட்டு கண்ட கண்ட சோலிக்காகவும் அந்த நேரத்தை ஒதுக்கத்தான் போகுது.

உப்பிடித் தான் அண்டைக்கு ஒரு ஆளிட்டை வாற சனிக்கிழமை பொங்கு தமிழ் நடக்கது அண்ணை. நீங்கள் குடும்பத்தோடை கட்டாயம் வாங்கோ அண்ணை எண்டு சொல்ல "அப்படியே எங்கை நடக்குது எண்டு கேட்டுப் போட்டு "அது சரி பொங்கு தமிழுக்கு நுழைவுக் கட்டணம் ஏதாவது எடுப்பினமோ?" எண்டு கேட்டார்.

எனக்கு வாயிலை நல்லா வந்தாலும் அவற்றை வயசுக்கு மரியாதை குடுத்து

"இல்லையண்ணை. காசு கீசு ஒண்டும் இல்லை. இது எங்கடை தமிழ் ஆக்களின்ரை உணர்வை, ஒற்றுமையை, பலத்தைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டிற நிகழ்வு. நீங்கள் கட்டாயம் வாங்கோ எண்டு சொல்ல அவர் விடாக் கண்டன் மாதிரி "அப்ப தம்பி அங்கை சாப்பாடும் தருவினமே?" எண்டு கேட்டார்.

உவை மாதிரியான ஆக்களை மன்னிக்க வேணும் உதுகள் மாதிரியானதுகளை என்ன செய்யிறது?

சாப்பிடுறதும் பிள்ளை பெறுறதும் பிறகு தும்படிக்கிறதும் தான் வாழ்க்கை எண்டு நினைச்சுக் கொண்டு சடங்களாய்ப் போன உந்த மானங்கெட்டதுகளை மனச்சாட்சியோ மனிசத் தன்மையோ இல்லாத மண்ணாங்கட்டிகளை இனியும் தலைக் கணக்குக்காகத் தமிழர் எண்டு சொல்லத் தான் வேணுமோ?

---

**முக்கால் வாசித் தமிழருக்கும் என்ன நடந்தது? அவையளின்ரை உடம்பிலை தமிழ் ரத்தம் ஓட இல்லையா? அவையளுக்கு எங்கடை சனம் தாயகத்திலை அநுபவிக்கிற துன்பங்கள் தெரிய இல்லையா? அந்தச் சனத்துக்காக, அதுகளின்ரை விமோசனத்துக்காக குரல் குடுக்க வேணும் எண்ட எண்ணம் தோன்ற இல்லையா? அவையளின்ரை மனசெல்லாம் காசு காசு எண்டு அலைஞ்சதிலை மரத்துப் பொயிட்டுதா?**

---

இதை மாதிரி இன்னொரு 'தமிழ்' அக்காட்டைப் பொங்கு தமிழ் இருக்குது அக்கா கட்டாயம் வாங்கோ எண்டு சொல்ல

'ஐயோ 3 மணிக்குத் தொடங்கினால் முடிய லேற் ஆகும். நான் 'மானாட மயிலாட' பாக்க வேணும். அது தொடங்கினதுக்கு நான் ஒரு புறோகிறாம் கூட மிஸ் பண்ண இல்லை' எணடு பெருமையாச் சொன்னா.

தன்ரை சொந்தச் சாதியை நாயைச் சுடுற மாதிரிச் சுட்டுப் போடுறான். கண்டவன் எல்லாம் வீடுகளுக்கை பூந்து ஆக்களைக் கடத்திக் கொண்டு போறான். எங்கடை சகோதரிகளின்ரை வாழ்க்கை அவலத்துக்குள்ளை நகருது.

இப்படி பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கடை சகோதரங்களுக்கு ஆறுதலா நாலு வார்த்தை சொல்ல, உங்களுக்காக குரல் கொடுக்க நாங்கள் இருக்கிறம் எண்ட நம்பிக்கையை ஏற்படுத்த ஒரு நாலு மணித்தியாலத்தைக் கூட ஒதுக்க முடியாமல் என்ன தலை போற காரரியம் இருக்க முடியும்?

ஒரு நாள் வேலைக்குப் போகாமல் விடுற தாலையோ பிள்ளையின்ரை ஒரு நாள் டான்ஸ் வகுப்பு தடைப் படுறதாலையோ, ஒண்டும் குடி முழுகிப் போகப் போறதில்லை.

கலந்து கொள்ளாமல் இருந்ததுக்கு ஆயிரம் நொண்டிச் சாட்டுச் சொல்லலாம். ஆனால் இந்த வரலாற்றுக் கடமையின்ரை அவசியம் தெரிஞ்ச எந்தத் தமிழனும் உவையளை மன்னிக்க மாட்டான்.

உப்படிப் பட்ட ஆக்களுக்கு எல்லாம் இனி ஊரைப் பற்றி, பிறந்த மண்ணைப் பற்றி, படிச்ச பள்ளிக் கூடத்தைப் பற்றி கதைக்க என்ன அருகதை இருக்கு?

உந்த நாசமாப் போனதுகளை விடுவம். நாங்கள் எல்லாம் ஒண்டுபட்டு அணி அணியாப் பொங்கு தமிழிலை கலந்து கொள்ளுவம்.

தமிழன் எண்டு ஒரு இனம் இருக்குது. அந்த இனம் யாரிட்டையும் அடிமைப் பட்டு இருக்கக் கூடாது. தமிழன் தலை நிமிர்ந்து சகல உரிமைகளோடையும் சந்தோசமா வாழ வேணும் எண்டதைச் சர்வதேசத்துக்குச் சத்தமாச் சொல்ல எல்லாத் தமிழுணர்வுள்ள தமிழர்களும் சனிக்கிழமை அணி திரளுவம்.

சொந்த சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்கா ரடீ! – கிளியே!
செம்மை மறந்தா ரடீ! எ


# ELC Solicitors Understanding your needs...

## சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

- Karen Sommers

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

ELC Solicitors

Understanding your needs...

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE

www.elcsolicitors.com

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**

# சொல்ல மறந்த கதை

பாலுமகேந்திராவைச் சந்தித்த நாள் அன்றே ஒளி ஓவியர் தங்கர்பச்சான் அவர்களையும் சந்தித்தோம். இருவருமே ஒளி ஓவியர்களாக தமிழ்த் திரை உலகில் நுழைந்து நெறியாளராக பரிணமித்தவர்கள். பாலுமகேந்திரா அவர்கள் ஐரோப்பிய யதார்த்தவாத சினிமாவில் கவனம் செலுத்தினார். தங்கர்பச்சானின் பாணி வேறுபட்டது. யதார்த்தவாதம்தான், என்றாலும் தமிழர் பண்பாட்டின் கூறுகளில் திரைக் கதையைக் கசிய விட்டார். பாலுமகேந்திராவுடன் ஒப்பிடுகிறபோது தங்கர்பச்சான் திரைக்கதையிலும் கூடுதல் கவனம் செலுத்துபவர். அதன் காரணம் இன்னதென்றும் நான் அறிவேன். தங்கர் சிறுகதை, நாவல் ஆசிரியர். பாலுமகேந்திரா கவிஞர் மாத்திரமே.

பாலுமகேந்திராவின் 'அழியாத கோலங்களும்', தங்கர்பச்சானின் 'அழகி'யும் சமாந்திரமான இரு பாதையில் பயணித்தவையே. இடையிடையே விலகிக் கொண்டாலும் மீண்டும் சமாந்தரமாகின.

'அழகி'யின் வெற்றி என்னவென்றால் அதன் திரைக்கதை என்றே சொல்வேன். 'அழியாத கோலங்கள்' துண்டு துண்டான காட்சிகளின் தொகுப்பாக இருந்தபோது 'அழகி' சுவாரசியம் குன்றாத கதையுடன் இருந்தது. அழியாத கோலஙகளின் காட்சிகள் அழகியலுடனும் நுண்ணுணர்வுடனும் செதுக்கப்பட்டது. ஆனால் முழுவதுமான 'அழியாக கோலங்கள்' அந்த நிறைவினை எய்தவில்லை. 'அழகி'யோ நிறைவடைகிறபோது பூரணம் எய்தியது.

"இரவி வாடாப்பா" என்றுதான் தங்கர்பச்சான் ஒருமையில் என்னை விளித்து அழைத்தார். அந்தளவு அவருடன் எனக்குப் பரிச்சயம் இருந்தது. தங்கர்பச்சான் 2004ஆம் ஆண்டளவில் ஈழம் சென்றிருந்தார். ஈழமக்களின் 'கதை'யில் ஒரு திரைப்படம் எடுப்பதற்காகவும் அவர் பயணம் அமைந்தது என நினைக்கிறேன். புதுவை அண்ணன் (புதுவை இரத்தினதுரை) நான் எழுதிய 'காலம் ஆகி வந்த கதை' புத்தகத்தையும் கொடுத்து அத்திரைப்படத்துக்கு என்னை கதாசிரியராக (அல்லது வசனகர்த்தா) நியமிக்கலாம் என்றும் சிபார்சு செய்தார். புத்தகத்தை வாசித்து விட்டு தங்கர்பச்சான் என்னை சந்திக்க வேண்டுமென்று மிக்க ஆவல் கொண்டார். பிறகு அவர் இலண்டனுக்கு வந்தபோது என்னைச் சந்தித்தார். பின்னர் இரண்டு முறை சென்னையில் சந்தித்தோம்.

தங்கர்பச்சான் ஒளிப்பதிவாளராக தமிழில் அறியப்பட்ட படங்கள் பல. அவற்றில் மோகமுள், பாரதி, காதல்கோட்டை, பெரியார் என்பன குறிப்பிடத்தக்கவை. 'ஒளிப்பதிவு நெறியாளர்' என்ற பெயரை மாற்றி 'ஒளி ஓவியர்' என்று பெயரை வைக்கும் துணிச்சலும் தன்னம்பிக்கையும் ஆற்றலும் உள்ளவர் தங்கர்பச்சான். மேலும் "சிறுக்கன்" என்ற அடைமொழியும் தமிழ்திரை உலகில் தங்கருக்கு உண்டு.

மேலும் சில திரைப்படங்களை எழுதி, ஒளிப்பதிவு செய்து, இயக்கியும் உள்ளார். அவ்வகையில் முதற்படம் 'அழகி'. இளையராஜாவின் நல்லதொரு இசையில் வந்த படம். நந்திதாதாஸ், தேவயானி, பார்த்திபன் ஆகியோரின் தரமான நடிப்பு இத்திரைப்படத்தின் பலம்.

அழகிக்குப் பிறகு தங்கர் தந்த அடுத்த படம் 'சொல்ல மறந்த கதை' இயக்குனர் சேரனை நாயகனாக்கிய திரைப்படம் இது. பிறகு வந்தது 'தென்றல்' என்ற திரைப்படம். 'சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி' என்பது தங்கரின் அடுத்த படம். இதில் தங்கர்பச்சான் நாயகன். இவரது நடிப்பு என்னை வியக்க வைத்தது. மிக நுணுக்கமான நடிப்பு. பிறகு வந்ததும் பலரால் பேசப்பட்டதுமான திரைப்படம் 'பள்ளிக் கூடம்' சத்தியராஜின் நடிப்பை மெச்சி பலர் குறிப்பிட்ட திரைப்படம் 'ஒன்பது ரூபாய் நோட்டு'

யாவற்றையம் பார்த்ததில் தங்கர்பச்சானின் மிகப் பெரும்பலம் என நான் குறிப்பிடுவது திரைக்கதை அமைப்பைத் தான். மினக்கெட்டு திரைக் கதையை அமைக்கிறார். 'பள்ளிக்கூடம்' திரைப்படமாக உருவாக முன்னர் திரைக்கதை பிரதியை நான் பார்த்தேன். (படித்தேனல்லன்) அந்த மினக்கெடல் புரிந்தது. உழைப்பு தெரிந்தது. அந்த மினக்கெடலையும உழைப்பையும் குழப்பிக் கொண்டிருப்பது வேறொன்று.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

தங்கர்பச்சான் திரைப்படங்களைச் செய்கிறார். (பண்ணுகிறார்) படைக்கவில்லை. மனதுக்குள்ளிருந்து அது பீறிட்டு வரவில்லை. 'அழகி' என்ற ஒரு படத்தை அப்படிச் சொல்லலாம். அது மனதுள்ளிருந்து வந்தது. பள்ளிக் கூடத்திலும் சில காட்சிகள் அப்படி. இதனால் தங்கர் பச்சானில் எனக்கு வந்த அபிப்பிராயம் என்னவெனில் தங்கர்பச்சான் படங்களை நன்றாகச் செய்கிறார்.

இதனை ஏனைய இயக்குனர்களுக்கும் கூடப் பொருத்திப் பார்க்கலாம். மகேந்திரனின் 'முள்ளும் மலரும்' உதிரிப்பூக்கள் போல் இல்லை. 'அழகிய கண்ணே'வும் 'கண்ணுக்கு மை அழகு'வும் மனிரத்தினத்தின் நாயகன், தளபதி போல் இல்லை. 'ஆய்த எழுத்தும்' 'குரு'வும் பாலுமகேந்திராவின் 'மூன்றாம்பிறை', யாத்ரா போல் இல்லை. ராமன் அப்துல்லாவும் அது ஒரு கனாக்காலமும். சேரனின் பாரதி கண்ணம்மா ஆட்டோகிராப் போல் இல்லை தேசியகீதமும் மாயக்கண்ணாடியும்.

மேலும் ஒன்றை நான் இதில் சேர்த்துக கொள்கிறேன். பாலா (சேது, நந்தா, பிதாமகன்) அமீர் (மௌனம் பேசியதே, ராம், பருத்திவீரன்) மிஷ்கின் (சித்திரம் பேசுதடி, அஞ்சாதே) ஆகிய இவர்கள் படைப்பதற்காக காலம் எவ்வளவு போனாலும் காத்துக் கிடக்கிறார்கள். (சமகாலத்தில் வேறு ஒருவரின் பெயரும் எனக்கு அகப்படவில்லை.

தங்கர்பச்சானிடம் வேறொரு சின்ன ஏமாற்றமும் எனக்கு இருக்கிறது. ஒரு தட்டையான (Flat) பிரதியை அவர் கொண்டிருக்கிறார். ஒரு நுணுக்கம், இரசிகர்கள் படைப்பினுள் நுழைந்து தேட வைக்கும் வெளி. ஹா! அபாரம் என்று வியக்க வைத்தல். நுண்திறன் வாய்ந்த காட்சி ('இருவர்' திரைப்படத்தில் 'றெயின்' வருகிற ஒரு காட்சி. அதைப்பார்த்தபோது நான் ஆடிப்போனேன்) முன்னர் வைத்த ஒரு காட்சி பின் வந்த ஒரு காட்சியுடன் இயைபுறுகிறபோது அட. இதற்குத்தானா இந்தக் காட்சியை வைத்தார் என்ற ஆச்சரியம் அப்படி இன்னோரன்ன என்று சொல்லத்தக்க எவற்றையும் நான் தங்கர்பச்சானிடம் காணவில்லை அல்லது தங்கர்பச்சான் அப்படி வைத்து என் சிற்றறிவுக்கு அவை எட்டாமல் போயிற்றோ தெரியவில்லை.

சினிமாவுக்கு அப்பால் தங்கர்பச்சானிடம் எனக்குப் பிடித்த அம்சங்கள் பல இருந்தன. நல்ல இலக்கியவாதி. நல்ல இலக்கியங்களை இரசிக்கத் தெரிந்தவர். சிறுமை கொண்ட போது பொங்குவார். சமரசம் செய்யாதவர் (அது நல்ல குணமா?) நெற்றிக்கு நேரே கதைப்பார். தமிழ்ப் பண்பாட்டில் அக்கறை கொண்டவர். தமிழ் தேசியத்தை நேசிப்பவர். மேலாக தமிழீழ விடுதலைப் போரில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்.

நமக்கான சினிமாவைத் தேடி தொடர்பாக அவருடன் உரையாடியதை இங்கு தவிர்க்கிறேன். அவருடன் உரையாடிவிட்டும் இதை எழுதிவிட்டும் ஒன்றை யோசித்தேன். தங்கர்பச்சானின் திரைப்படங்களில் இரசிப்பதற்கு நிறைய உண்டு. வியப்பதற்கு ஏதும் இல்லை. நான் வியந்த ஒரு விசயம் பற்றி அடுத்த ஒரு பேப்பர் இல்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

### செவ்வாய் நோக்கிய பயணம் எப்போது?

கதிரவன் நிலவு விடிவெள்ளி (சுக்கிரன்) ஆகிய வான் பொருள்களுக்கு அடுத்ததாக தனது செந்நிறக் தோற்றம் காட்டி காலங் காலமாக மனித இனத்தைக் கவர்ந்தவன் செவ்வாய். இன்று அவன் சிறப்பு மேலும் ஓங்குகிறது.

முன்நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு அங்கு உயிரினங்கள் வாழ்ந்ததற்கு சான்றாக தடயங்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் உறுதியுடன் கூறுகிறார்கள். இதனால் முன் எப்போதையும் விட அங்கு காலூன்ற வேண்டும் என்ற அவா மனித இனத்திடம் மேலோங்கி உள்ளது.

கட்டம் கட்டமாக விண் கலங்கள் அங்கு தரையிறக்கப்பட்டு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டது.. இந்த மே மாதம் பீனிக்ஸ் என்னும் விண்கலம் அங்க தரையிறக்கப் பட்டுள்ளது. அடுத்த மாதம் அது முன்னுரிமை கொடுத்து செய்யும் ஆய்வு அங்குள்ள நீர்வளம் சம்பந்தமானதும் உயிர்வளி சம்பந்தமானதும். அதாவது மனிதன் உயிர் வாழ இன்றியமையாத இவை இரண்டினதும் வளம் சம்பந்தப் பட்டதே.

அடுத்த கட்டம் பற்றிப் பேசுமுன் செவ்வாய் பற்றிய தரவுகள் சிலவற்றைப் பார்ப்போம். எங்களுக்கு நிலவு உள்ளதுபோல் செவ்வாய்க்கு போபொஸ் டெய்மொஸ் என்னும் இரு சிறிய (அவைகளின் விட்டம் முறையே 22, 12 கிலோ மீட்டர்கள்) உபகோள்கள் உள்ளன. அடர்த்தி குறைந்ததும் பூமியின் விட்டத்தின் அரைவாசி விட்டமும் கொண்டுள்ளதால் எடையில் பூமியின் பத்தில் ஒன்றே இதன் எடை.

ஆனால் பூமியின் தரையின் பரப்பளவுக்கு சமனான பரப்பளவு செவ்வாயிலும் உண்டு (பூமியின் 70 வீதம் கடல் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது) கோடை காலங்களில் 25 பாகை செல்சியஸ்வரை சில இடங்களில் வெப்பம் உயர்ந்தாலும் சராசரி வெப்பம் என்று சொல்லும்போது நீரின் உறை நிலைக்கு கீழே சய 60 பாகை வரை இறங்கும். இதன் அச்சு சாய் நிலை பூமியை ஒத்திருப்பதால் பருவ கால மாற்றங்களும் பூமியை ஒத்தே அமையும். ஆனால் கதிரவனிலிருந்து உள்ள தூரம் காரணமாக மூன்று மாதங்கள் எங்களுக்கு நீடிக்கம் ஒவ்வொரு பருவ காலமும் அங்கு 5 மாதத்திற்கு மேல் நீடிக்கும்.

பூமியில் நாம் எள்ளளவும் எதிர்பார்காத அளவுக்கு 95.3 வீதம் கரியமல வாயுவும் 2.7 வீதம் நைதரசனும், அதாவது இரண்டும் சேர்ந்து 98 வீதம் உள்ளன. இதில் கரியமல வாயு அநேகமாக கட்டி நிலையிலேயே காணப்படும். காரணம் சய எட்டுப் பாகை செல்சியஸ்சில் அது கட்டி நிலையை எய்தும் தன்மை கொண்டது.

செவ்வாயில் கால்பதிக்க மனிதன் விரும்புகிறான் ஆனால் அதற்கான தேதி இன்னும் குறிக்கப் படவில்லை

தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகவும் அங்குள்ள வளங்கள் பற்றிய தகவல் பெறப்படுவதாலும் பிரயாணத்தின் ஏற்பாடுகள் இலகுவாகின்றன.

இங்கிருந்து கொண்டு செல்லும் திரவ நிலை மிதென் காற்றையும் அங்குள்ள கரியமல வாயுவையும் பயன்படுத்தி தண்ணீர் உயிர் வாயு நீர் வாயு ஆகியவற்றை சில எளிய சாதனங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. ஆண்டுக் கணக்கில் வானியலாளர் தங்கி இருந்து ஆய்வுகள் செய்ய உரிய சூழலும் உருவாகும்.

30 ஆண்டுகளுக்கு முன் சந்திரன் செல்ல உபயோகித்த அதே ரக ஊர்திகளைப் பயன் படுத்தலாம். ஆனால் தூரம் காரணமாக காலம்தான் 6 மாதங்கள் வரை நீடிக்கும்.

அதுகூடப் பெரிய தடையில்லை. தேவையான நிதி எங்கிருந்து வரப்போகின்றது என்பதே இன்றைய கேள்வி..

பெட்டேமிக்க நாகரிகங்கள் அனைத்திலும் கூடுதல் வளர்ச்சி கொண்டது என்றும் கூறப்படுகிறது. ஓட்டு மொத்தத்தில் பழமை மிக்க நாகரிகங்கள் மீள் வரிசைப் படுத்தப் படும்போது சரித்திரமே மாறப் போகின்றது.

உங்கள் தேவை எங்கள் சேவை

வியாபார நிலையம் வாங்க
விற்க குத்தகைக்கு எடுப்பதற்கு,
உங்கள் வசதிக்கும் வல்லமைக்கும்
ஏற்ப சிறப்பான வழிகாட்டலுக்கு
தனித்துவமான எம்மை நாடுங்கள்

பிரித்தானிய குடிவரவு விசா

தற்போது நடைமுறையிலிருக்கும்
புள்ளி அடிப்படையிலான முறையின்
கீழ் சரியான ஆலோசனை
வழங்கப்படும்

Indra Sebastian Solicitors
Administrators of Oaths



Tel: 020 8427 3303 Fax: 020 8427 3313
144 Station Road, Harrow, Middlesex HA1 2RH
Website: issolicitors.co.uk | Email: info@issolicitors.co.uk

Conveyancing - Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

Intellectual Property
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business Disputes

Matrimonial - Divorce & Ancillary Proceedings
Employment

- Immigration
- Home Office Same Day Visa Service
- Work Permits, HSMP, SEGS
- Business Persons
- Doctors - Medical Training Initiatives
- Care Homes - Cares & Nurses
- Hospitality - Fire, Receptionist, Waiters etc.
- Skilled Workers & Domestic Servants
- Marriage & Certificate of Approval
- Asylum & Human Rights
- European Applications (EEC, WPS)
- Entry Clearance & Visa Refusals Appeal
- Students
- Nationality (UK & Sri Lanka)
- Long Term Residency in UK

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கண்களில் விரலை விட்டு ஆட்டியவர்கள்

**லக்கிலுக்**
*(யாழில்)*

சிறுவயதிலிருந்தே காமிக்ஸ்களை விரும்பி படிப்பது என் வழக்கம். ஜேம்ஸ்பாண்டு போன்ற நாயகர்கள் தோன்றும் ஐரோப்பிய கதைகளை விட டெக்ஸ்வில்லர், லக்கிலுக் போன்ற அமெரிக்க நாயகர்களின் கதைகள் எனக்கு மிகவும் பிடித்தவை. · அவ்வாறு காமிக்ஸ்களை வாசிக்கும்போது தான் செவ்விந்தியர் என்ற ஒரு இனம் இருந்தது எனக்கு தெரியவந்தது.

நான் வாசித்த கதைகளில் 99.99% வெள்ளையர்கள் தங்கள் மதியூகத்தால் செவ்விந்தியர்களை வெல்வதே முடிவாக இருக்கும். இணையத்தில் நான் படித்த கதைகளில் வந்த செவ்விந்திய இனங்கள், வீரர்களின் பெயரை தேடி வாசித்த போது தான் பல புதிய விவரங்களை என்னால் அறிய முடிந்தது.

நான் வாசித்த கதைகளில் வந்ததைப் போல வெள்ளையர்கள் மதியூகத்தாலும், வீரத்தாலும் செவ்விந்திய இனத்தை வீழ்த்தி விடவில்லை, கேவலமான தந்திரங்களை பயன்படுத்தி கோழைத்தனமான முறையிலேயே செவ்விந்திய கலாச்சாரத்தை அழித்தொழித்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. தங்கள் குடியேற்றத்தை விரிவுபடுத்திக்கொள்ள பயங்கர இனப்படுகொலைகளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெள்ளையர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். இன்றைய நிலையில் இருப்பதைப் போன்ற தகவல் தொடர்பு அப்போதிருந்தால் உலகம் அன்றே அமெரிக்காவை காறித்துப்பியிருக்கும்.

என்னதான் புத்திசாலிகளாக இருந்தாலும் நவீன ஆயுதங்களை தம் கைவசம் வைத்திருந்தாலும் வெள்ளையர்களுக்கு உள்ளுக்குள் இருந்த கோழைத்தனம் செவ்விந்தியர்களுக்கு எதிரான மகத்தான வீரவெற்றியை போர் முறையில் பெறும் வாய்ப்பை அளிக்கவில்லை. செவ்விந்தியர்கள் ஒரே இடத்தில் வசிக்கும் இனமல்ல, நாடோடி இனம். தங்கள் குடியிருப்பை காலநிலைக்கு ஏற்றவாறும் தங்கள் முக்கிய உணவான காட்டெருமைகள் வசிக்கும் காடுகளுக்கு அருகாக அமைவதைப் போல மாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

அவ்வாறான குடியிருப்புகளில் ஆண்கள் வேட்டைக்கு செல்லும் நேரத்தில் கோழைகளைப் போல வெள்ளையர்கள் தாக்குதல் நடத்துவார்கள். குடியிருப்புகளில் வசிக்கும் பெண்கள், குழந்தைகளை கொன்று அந்த கூட்டத்தையே அழித்ததைப் போல தலைநகருக்கு தகவல் சொல்லுவார்கள். செவ்விந்தியர்கள் தனித்தனியாக கூட்டமாக வாழ்ந்ததால் அவர்களால் வெள்ளையர்களுக்கு எதிரான ஒரு பெரிய போர்ப்படையை உருவாக்க இயலாமல் போய்விட்டது. பொதுவாக ஒரு செவ்விந்திய கூட்டம் அறுபது முதல் நூறு வீரர்கள் வரையே கொண்டிருக்கும். மாறாக வெள்ளையர்களோ தங்களது ஒரு படைப் பிரிவில் ஐநூறு முதல் ஐயாயிரம் பேர் வரை வைத்திருப்பர்.

வெள்ளையர்களின் குடியேற்றத்துக்கு செவ்விந்தியர்கள் அதிக அளவில் எதிர்ப்பு தெரிவித்தது இருப்புப் பாதைகள் போடப்பட்ட போது தான். தங்களது மேய்ச்சல் நிலங்களை அழித்து வெள்ளையர் அதிக சத்தம் போடும் 'இரும்புக் குதிரையை' (ரயிலை செவ்விந்தியர் அவ்வாறு தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்) கொண்டு வந்ததை செவ்விந்தியர் விரும்பவில்லை. தொடர்ந்து சிறுசிறு குழுக்களாக செவ்விந்தியர்கள் வெள்ளையர்களின் நகரங்களை அவ்வப்போது தாக்கி வெற்றி பெற்று வந்துள்ளனர்.

போர் மூலமாக செவ்விந்தியர்களை அடக்க முடியாத அமெரிக்க அரசாங்கம் அம்மை நோய் போன்ற தொற்றுநோய்களை செவ்விந்திய கிராமங்களில் 'மிஷினரிகள்' மூலமாக பரப்பி செவ்விந்திய இனத்தை அழித்தனர். வெள்ளையர்களுக்கு எதிரான போரில் இறந்த செவ்விந்தியர்களை காட்டிலும் மருத்துவவசதி கிடைக்காது தொற்றுநோயால் கிராமம், கிராமமாக இறந்த செவ்விந்தியர்களே அதிகம்.

ஆயினும் பல தடைகளை தாண்டி, சொந்தம், பந்தம், தோழமைகளை இழந்து வெள்ளையர் குடியேற்றத்துக்கு எதிராக போராடி வெள்ளையரின் கண்களில் விரல்விட்டு ஆட்டிய மாவீரர்கள் அவ்வப்போது செவ்விந்திய இனங்களில் தோன்றினார்கள். அவர்களில் ஒருவர் மாவீரன் ஜிரோநிமா. 1829ல் பாரம்பரியமிக்க அபாச்சே இனத்தில் பிறந்த ஜிரோநிமாவின் இயற்பெயர் கோயல்த்லே. செவ்விந்தியர்களின் பெயர்களை உச்சரிக்க சிரமப்பட்ட வெள்ளையர்கள் அவர்களுக்கு தங்கள் வாயில் நுழையும் பெயர் வைத்து அழைப்பது வழக்கம். அவ்வழக்கத்தின் படியே கோய்ல்தே ஜிரொநிமா ஆனார். எல்லா செவ்விந்தியர்களைப் போலவும் வேட்டை மேய்ச்சல் போன்றவற்றில் கைதேர்ந்த ஜிரோநிமா செவ்விந்திய மருத்துவத்தையும் கற்று திருமணம் முடிந்து மூன்று பிள்ளைகளை பெற்று வாழ்ந்து வந்தார்.

1851ல் தன் முகாமை விட்டு சகாக்களோடு ஜிரோநிமா வேட்டைக்கு சென்றிருந்தார். அப்போது சுமார் நானூறு வீரர்களோடு வந்த ஸ்பானியப் படை அம்முகாமை தீக்கிரையாக்கி அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் ஆகியோரை ஈவிரக்கமின்றி கொலை செய்தது. அச்சம்பவத்தில் தன் மனைவியையும், மூன்று குழந்தைகளையும் இழந்த ஜிரோநிமா வெள்ளையர்களை வேரறுக்க உறுதி பூண்டார்.

பதினாறு தேர்ந்த வீரர்களை மட்டுமே தன் கைவசம் வைத்திருந்தவர் 1858ஆம் ஆண்டிலிருந்து மெக்ஸிகோ இராணுவ வீரர்கள் மீதும், மெக்ஸிக்கோ குடியிருப்புகள் மீதும் அதிரடி தாக்குதல் நடத்தத் தொடங்கினார். பெரும் படைப்பிரிவுகளை கூட கொரில்லா முறையில் அனாயசமாக திடீர் தாக்குதல் நடத்தி வெற்றி கொண்டார். மெக்ஸிகோவில் ஜிரோநிமாவின் புகழ் பெருகுவதை கண்ட அமெரிக்க அரசாங்கம் மெக்ஸிகோவுக்கு உதவியாக தன்னுடைய படைப்பிரிவுகளை (நம்ம அமைதிப்படை ரேஞ்சில்) அனுப்பி வைத்தது. அவற்றையும் தொடர்ந்து ஜிரோநிமா சுளுக்கெடுத்து வந்தார்.

நம் வீரப்பன் தண்ணி காட்டிய ரேஞ்சுக்கு ஜிரோநிமாவும் தன் சிறிய படைப்பிரிவை வைத்து இரண்டு ஏகாதிபத்திய அரசுகளுக்கு அள்ளு கொடுத்தது எத்தனை ஆண்டுகள் தெரியுமா? இருபத்தெட்டு ஆண்டுகள்! கடைசியாக உதைவாங்கியே அலுத்துப் போன அமெரிக்க அரசாங்கம் 1886ஆம் ஆண்டு ஐயாயிரம் பேர் கொண்ட பெரிய படை ஒன்றினை ஜிரோநிமாவை கைது செய்ய அனுப்பி வைத்தது.

ஐயாயிரம் பேரும் முற்றுகையிட்டபோதும் ஜிரோநிமாவை அவ்வளவு சுலபமாக நெருங்க முடியவில்லை. கடைசியாக பொதுமன்னிப்பு உள்ளிட்ட சில நிபந்தனைகளோடு ஜிரோநிமா சரணடைய முன்வந்தார். ஜிரோநிமா சரணடையும் போது அவரது பெரும்படையும் சரணடைய வேண்டும் என்று அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டது. ஜிரோநிமாவுடன் சரணடைந்த பெரும்படையில் இருந்தவர்கள் மொத்தமே (குழந்தைகள், பெண்கள் உட்பட) முப்பத்தெட்டு பேர் தான்.

அதன் பின்னர் 23 ஆண்டுகள் அமைதியாக உயிர்வாழ்ந்த ஜிரோநிமா 1909ல் தன்னுடைய எழுபத்தி ஒன்பதாவது வயதில் மரணமடைந்தார். தன் கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் என்றுமே விட்டுக் கொடுக்காத ஜிரோநிமா கடைசிக் காலத்தில் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியது தான் ஆச்சரியம். பின்னர் ஜிரோநிமாவை கதாநாயகனாகவும், வில்லனாகவும் சித்தரித்து ஏராளமான திரைப் படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. இன்றைக்கும் செவ்விந்தியர்கள் தங்கள் வேர்களையும் கலாசாரத்தையும் இழந்து விட்டு அமெரிக்க கிராமங்களில் சிறுபான்மையினராக வசிக்கிறார்கள்


## Ratna & Company Solicitors



We are accredited both by Law Society and the Legal Services Commission, as providers of quality service, in all areas of Immigration law.

We are authorised by the Legal Services Commission to provide free legal advice (If you are entitled for the same).

Contact:
**Mr. M. or Mrs. K. Ratnapalan**
T: **020 8470 8818** F: **020 8475 0131**
M: **07769 748 409**
Visit: www. ratna.co.uk Email: mratnapalan@hotmail.com
169A High Street North, East Ham, London. E6 1JB

- தேசியம் குடியுரிமை அகதி நிலை ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள்
- ஐக்கிய ராச்சியத்தில் 7/10/14 வருடங்கள் வசித்தவராயிருப்பின் நிரந்தர வதிவிட விண்ணப்பங்கள்
- தொழில் அனுமதி, மனித உரிமை, தடுத்து வைத்தல் தொடர்பான விடயங்கள்
- வீடுகள் விற்பனை நிலையங்கள் வாங்குதல் விற்றல் remortgage, transfer of equity வசதிகள்
- remortgage, transfer of equity
- Power of Attorney / Last will; / Sponsorship விடயங்கள்
- குடும்ப திருமண விவகாரங்கள்
- இலவச சட்ட ஆலோசனை வழங்குவதற்காக Legal serv- - ices Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
- எமக்குத் தொடர்ந்தும் Immigra- tion & Asylum சட்டத்தில் இலவச சட்ட ஆலோசனை கொடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது

# திருடா திருடா



'திருடிய முத்தங்கள் மிகவும் இனிப்பானவை' என்று ஒரு இங்கிலாந்து கவிஞன் சொல்லியிருக்கிறார் என்று வாசித்தபொழுது, என்னவோ எனக்கு அந்தக்கருத்தோடு உடன்பட மனம் இடம் கொடுக்கவில்லை. நான் என் சின்ன வயதில் 'திருடிய மாம்பழங்களும், பப்பாசிப் பழங்களும்' அதைவிட இனிப்பானவை என்ற எண்ணமும் கூடவே வந்தது. 'எப்படி நீங்கள் அவ்வளவு நிச்சயமாகச் சொல்வீர்கள்' என்று நீங்கள் திருப்பிக்கேட்டால் பதில் சொல்வதற்கு இதுவல்ல நேரம். யாரோ பின்னால் நிற்பதுபோல, பிடரி குறுகுறுக்கிறது.

அந்த நாட்களில் எங்கள் வீட்டிலோ, எங்கள் அயலிலோ காய்க்கும் மாமரங்கள் என்று இல்லை. நாலாவது வீட்டு முற்றத்தில் பட்டுப்போன கிளைகளுடன் ஒரேயொரு மாமரம், எப்பவோ ஒரு காலத்தில் காய்த்ததிற்கு அடையாளமாக, பழைய தகரவாளியுடன், கல்லுக்கட்டிய கயிறும் தொங்கியது. பழங்களைத் தின்ன வரும் 'கிளிகளைத் துரத்தவாம். பழங்களே இல்லை. அந்தக் கிளிகள் எப்படி வரும்? ஆனால் இரட்டைப்பின்னல், ஒற்றைப் பின்னல் கிளிகள் மாத்திரம் அந்த மரத்தின் கீழே கெந்தி விளையாடுவதைக் கண்டிருக்கிறேன்.

சில சந்தர்ப்பங்களில், அம்மா காய்கறி, மீன், தேங்காய் என்று பலதும் பத்தும் சந்தையில் வாங்கி மிச்சமாக காசு இருந்தால் மட்டும், எனக்கும், தம்பிமாருக்குமாக கண்டல்பட்ட மாம்பழங்கள் வாங்கி வருவதுண்டு, (கண்டல்பட்ட மாம்பழங்கள் என்றால் தெரியாதா? மெலிந்து, நசுங்கி, நலிந்துபோன பழங்கள்) அவை வெட்டிச்சாப்பிடும் நிலையில் இருக்காது. தோலை கையால் உரித்து சதைப்பகுதியை வாயில் வைத்து உறிஞ்ச வேண்டியதுதான். கைவிரல்கள், முகத்தில் வாய்க்கு அண்மித்தான பிரதேசங்கள் எல்லாம் அதன் பாகினால் தோய்த்து மெழுகி, சூத்தைப்பற்களின் இடுக்குகளில் அதன் நார்கள் சிக்கிக்கொள்ள, மகாபிரயத்தனத்துடன் அவற்றை பிடுங்கி எடுத்து - பெரிய சடங்காகவே நானும், தம்பிமாரும் மாம்பழம் சாப்பிட்டு (குடித்து) முடிப்போம்.

கறுத்தக்கொழும்பான், விலாட்டு, கிளிச்சொண்டன் என்றெல்லாம் காய்த்துக்குலுங்கும் ஒரு இடம் எங்களூரில் இருக்கத்தான் செய்தது. எங்கள் பள்ளிக்கூடத்திற்கு போகும் வழியில், சிங்கப்பூர் பென்சனியர் ஒருவருக்கு சொந்தமான காணி. சுற்றிவர முள்ளுக்கம்பி அடித்து, பலத்த பந்தோபஸ்துடன் விளங்கியது. நானும் நண்பர்களும் போகவும் வரவும், இளவெய்யிலில் இலைகளின் இடையே ஒளித்து விளையாடும் அந்த மாம்பழங்களைப் பார்த்து 'சப்புக் கொட்டிக்' கொண்டே திரிந்தோம்.

திடீரென்று ஒருநாள் நல்லசெய்தியொன்று எங்களுக்கு கிடைத்தது. தனியாக இருந்த பென்சனியர் தன் பிள் ளைகளைக் காண தொலைவிலுள்ள ரவுணுக்கு போய் இரண்டு கிழமை மட்டில் அங்கேயே தங்கப்போகிறார் என்று யாரோ சொன்னார்கள். எங்கள் காரியம் நிறைவேற இரண்டு கிழமை எதற்கு.. இரண்டு மணித்தியாலமே போதுமே என்று சொல்லிக்கொண்டோம்.

அந்தக்காணியின் யாரும் வராத ஒரு ஒதுக்குப்புறமான மூலையில், முள்ளுக்கம்பிக்கு கீழாக உள்ள மண்ணை வாரி, சுரங்கப்பாதை மாதிரி அமைத்துக்கொண்டோம். (சிறைக்கைதிகள் தப்புவதற்கு செய்வார்களே அது மாதிரி) சிறிதுநேரத்தில் மேலே உள்ள முள்ளுக்கம்பி எங்கள் வெறும் முதுகில் கீறாமல் மாந்தோப்புக்குள் தவழ் ந்து போகிறமாதிரி செய்தாயிற்று. முதலாவதாக நான் உள்ளே நுழைந்த பின் திரும்பிப் பார்த்தால் கூட்டா ளிகள் தயங்குவது தெரிந்தது. நான் பயப்பிடுவதை அவர்க ளுக்கு காட்டிக்கொள்ள முடியுமா?

முதல் இரண்டு, மூன்று அடிகள் பயத்துடன் எடுத்துவைத்த நான், யார் வரப்போகிறார்கள் என்ற எண்ணம் மனதில் குதூகலத்தைத்தர, பாட்டொன்றை முணுமுணுத்துக்கொண்டு காரியத்தில் இறங்கினேன்.

மரத்தில் கொத்துக் கொத்தாகத் தொங்கும் பழங் களுக்கு ஒரு வழிபண்ணவேண்டாமா?. 'நாமிருக்கப் பயமேன்' என்பதுபோல ஒரு கொக்கச்சத்தகத் தடி மரத்தில் சாத்தியிருந்தது. எடுத்து ஒவ்வொரு இழுப் புக்கும், காயும், பழமும், பிஞ்சுமாக விழுந்து சருகுகளின் மேல் பரவின.

ஆங்காங்கே விழுந்திருந்த பழுத்த பழங்களை சண்டிக்கட்டில் கட்டிக்கொண்டு போய் கம்பிவேலிக்கு வெளியே காத்திருந்த நண்பர்களிடம் கொடுக்க, 'கெதியாக..கெதியாக' என்று அவர்கள் சொல்லத்தான் செய்தார்கள். இரண்டு, மூன்று தடவைகள் இப்படி ஓடி, ஓடி பழங்களை 'போடர்' தாண்ட வைத்தேன்.

அடுத்த தடவை திரும்பிப்போகும்போது ஒரு மரத்தின் பின்னிருந்து, நீலக்கலர் சேலைத்தலைப்புமாதிரி காற்றில் பறந்து, சட்டென்று மறைந்தது. தயக்கத்துடன் நின்று திரும்பிக் கூட்டாளிகளை பார்த்தேன். அவர்கள் நின்ற இடம் வெறிச்சோடிப்போய் இருந்தது. அதற்கிடையில் வளையல்கள் போட்ட ஒரு கை என்தோள் மீது படிந்தது.

## கடந்தது நடந்தது

**கே.எஸ். பாலச்சந்திரன்**

பட்டென்று நிமிர்ந்து பார்த்தால் பென்சனியர் பக்கத்துவீட்டு அக்கா. அவவிடம் பென்சனியர் காணிக்காவலை ஒப்படைத்து விட்டுப் போயிருக்கிறார் என்று தெரிந்தது. கண்களை அகலவிரித்து, 'நீயா' என்று அவ கேட்க, அது நாள்வரை 'குழப்படி யில்லாதவன்' என்று ஊருக்குள் எனக்கிருந்த நல்ல பெயரெல்லாம் கரைந்து போவது போலிருந்தது.

'என்ன செய்கிறாய்' என்று அவ கேட்டதிற்கு, எச்சிலை விழுங்கி, எதையாவது சொல்லிவைக்க வேண்டு மென்பதற்காக 'பந்து இங்கை விழுந்திட்டுது.. எடுக்க வந்தனான் அக்கா' என்றேன். அந்த நேரம்பார்த்தா சாறத்தின் சண்டிக்கட்டு அவிள வேண்டும்? மாம்பழங்கள் பொலபொலவென்று என் காலடியில் விழுந்து காட்டிக்கொடுத்தன.

அருகில் இருந்த மாமரத்தைக்காட்டி 'கட்டிப்பிடி' என்றா. கட்டிப்பிடித்துக்கொண்டேன். 'உன்னைக் கட்டுறதிற்கு கயிறு எடுத்துக் கொண்டு வாறன்.. ஓடப்பார்த்தியோ.. நாய் அவிட்டு விட்டு இருக்குது' என்று சொல்லிக் கொண்டே தங்கள் வீட்டுப்பக்கமாகப் போனா.

'அக்கா..அக்கா' என்று அழுகையுடன் கூப்பிட்டுத்தான் பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. அப்படியே விம்மலுடன் மரத்தைக் கட்டிப்பிடித்தபடி நின்றேன். காணியின் ஒரு பக்கத்தில் றோட்டு.. அதிலே நல்ல தண்ணீர் அள்ளிக்கொண்டு போகும் எங்கள் ஊர் பெண்கள் போவார்கள். முள்ளுக்கம்பி வேலிதானே. என்னை பார்த்துக் கொண்டுபோவார்கள் என்று நினைக்கவே முதுகெல்லாம் கூசுகிறது மாதிரி இருந்தது.

நான் நினைத்தது போலவே, யாரோ றோட்டில் நின்று என்னை உற்றுப் பார்ப்பதுபோல.. கடைக்கண்ணால் பார்த்தேன். கலர்கள் தெரிந்தன. 'கிளுக்', 'கிளுக்' என்று மெதுவாக சிரிப்பதும் கேட்டது. அதில் ஒன்று எனக்குத் தெரிந்த 'கிளுக்'. கண்களை இறுக மூடிக்கொண்டேன். படங்களில் வருகிறமாதிரி மந்திரம் சொன்னவுடன் 'பூம்' என்று புகையில் மறைந்து போகும் சங்கதி எனக்குத் தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாகவிருக்கும் என்று யோசித்துக்கொண்டேன். 'உஸ்..உஸ்' என்று சத்தம் கேட்டது. அவர்கள்தான்.. என் முகத்தைப் பார்த்து விடவேண்டுமென்று பறக்கிறார்கள். நான் கருமமே (மாமரமே) கண்ணாக அசையாமல் நின்றேன். நின்று அலுத்துப்போயோ, என்னவோ, தங்களுக்குள் கதைத்துக் கொண்டு போனார்கள்.

தாம் படித்த கல்லூரியின் வளர்ச்சிக்கான பல திட்டங்களைச் சிறப்பாக நடாத்தி வரும் பழைய மாணவர் சங்கத்தினர் இது போன்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்தி அதன் மூலம் பெறப்படும் பணத்தைத் தமது கல்லூரியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்களை இங்கே பிரசுரிக்க
ஒரு பேப்பர் உடன் தொடர்பு கொள்ளவும்
ஒரு பேப்பர்


## Mortgages – Re-mortgages – Commercial Loans



வீட்டு உரிமையாளர்களே உங்கள் கவனத்திற்கு...

வாடகை வீட்டுக்கு எம் வாடிக்கையாளர்கள் காத்திருக்கிறார்கள்

உடன் எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

Call **Pon Siva**
Tel: **020 8683 1313**
Mob: **07958 953 199**
Fax: **020 8684 0444**

**Mortgages**
**Re-mortgages**
**Business Loans for Shops**
**Petrol Station & Hotels**

**Portland Estate Agents UK Ltd**
9 St. James Road
Croydon, Surrey, CR0 2SB.

# அழிக்கப்பட்ட காந்தீயம்

**ஊரின் வாசம்**

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

தாயகத்தில் தொடர்கதை ஆகிவிட்ட தொண்டு நிறுவனப் பணியாளர் கொலைகள். தொண்டு நிறுவனங்களுக்குத் தடைகள். தமிழர் நிலப்பரப்பில் தவிப்பையும் துயரையும் தணிப்பதற்குக் கூட எவரும் இருக்கக் கூடாது என்பதில் இனவாதச் சிங்கள அரசு காட்டும் அக்கறை. இது இன்று நேற்று ஏற்பட்டதா? இல்லை. காலாகாலமாகத் தொடர்வதுதான்.

1977இல் இனக்கலவரத்தை தொடர்ந்து வெளியேறிய தமிழர்களுக்கு வடக்குக் கிழக்கு எல்லைப் பரப்பில் புனர்வாழ்வுக் கிராமங்களை அமைத்து தொண்டாற்றிய நிறுவனம் காந்தீயம். இரவோடு இரவாக அழிக்கப்பட்டு இருப்பத்தைந்து ஆண்டுகளாகின்றன.

அந்த யூன் 1983, 1ம் திகதி காந்தீய நிறுவன அழிப்பும் இனக்கலவரம் ஆரம்பத்துக்குமான முதல் முடுக்கலும் வவுனியா நகரில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட நாள். காந்தீயம் என்ற தமிழ்த் தொண்டு நிறுவனம் சிதைந்து எரியூட்டப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டது. வவுனியா நகரில் இயங்கிய அதன் பணிமனை அடித்து நொறுக்கப்பட்டு சூறையாடப்பட்டது. சின்னப்புதுக் குளத்தில் இயங்கிய அதன் சிறுவர் இல்லம், பண்ணை, பயிற்சி நிலையம் உட்பட அனைத்தும் எரியூட்டப்பட்டது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என இயங்கிய அந்நிறுவன பணியாளர்கள், பண்ணைகள், குடியேற்றத் திட்டங்கள் எல்லாமே இயங்கத் தடைவிதிக்கப்பட்டன.

சட்டபூர்வமாக இல்லாது எரியூட்டல், கைது, சோதனை நடவடிக்கைகள் என்ற தொடர் கெடுபிடிகளால் தடை நடைமுறைப்படுத்தப்பட்டது. இயங்கிய முக்கியஸ்த்தர்கள் கைது செய்யப்பட்டனர். எட்டுத் தமிழ் மாவட்டங்களிலும் பின் தங்கிய கிராமங்களில் இந்நிறுவனம் இயக்கிய 634 பாலர் பாடசாலைகள் இதனூடாக பயன்பட்ட மாதர் குடிக்கள். கிராமியப் பண்ணைகள் தொழில்பயிற்சிக்கூடங்கள் இயக்கம் இழந்தன. கல்லாறு மணியர்குளம் நாவலர் பண்ணை கெனஸ்புாம் உட்பட இவ் அமைப்பின் ஊடாக இயங்கிய குடியேற்றத்திட்ட செயற்த்திட்டங்கள் முடிவு கண்டன.

வவுனியாவில் 83 யூன் 1ம் திகதி நண்பகல் காந்தீயப் பணிமனையின் கீழ்ப்புறம் இயங்கிய மரக்கறிச் சந்தையில் அரச வான்படையினர் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்தச் சம்பவத்தைத தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மறு நாள் வரை தொடர்ந்தது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்க எரிப்பு, அழிப்பு வேலைகளை வவுனியாவின் அன்றைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு நடைமுறைப்படுத்தியது.

1977 இனக்கலவரம் துரத்திய தென் இலங்கைத் தமிழர்களை; தமிழ் அகதிகள், புனர்வாழ்வுக்கழகம் என்ற அமைப்பு அரவணைத்தது. திரு. கே.சி. நித்தியானந்தா தலைமையில் இயங்கிய நிறுவனம் இது. வருகை தாந்தாருக்கு நிரந்தர வாழ்வு தரும் பணிக்கு காந்தீயம் என்ற நிறுவனம் 1978இல் உருவாக்கப்பட்டது. உலக உதவி வழங்கும் நிறுவனங்களின் பார்வை பரிதாபத்துக்குரிய இனக்கலவுர அகதிகள் மீது பதிந்திருந்த நேரம் அது.

கெயார், ஒக்ஸ்பாம் கிறிஸ்டியன் எய்ட் என்ற நிறுவனங்களின் தொடர்போடு புனர் வாழ்வுப் பணிகளை எல்லைப்புறக் கிராம குடியேற்றத் திட்டங்களாக காந்தியம் ஆரம்பித்தது. ஆரம்பித்தவர் எஸ்.ஏ. டேவிட் ஐயா. கட்டிட வரைபடக் கலைஞர். பழுத்த காந்தீயவாதியுமாக நடந்துதிரிபவர். டாக்ரர் சுந்தரம் தனியார் மருத்துவமனை ஒன்றை வவுனியாவில் இயக்கி வந்தவர். இவர்களை தலைவர், அமைப்புச் செயலாளராகக் கொண்டு இந்த நிறுவனம் ஆரம்பமானது. கிளிநொச்சியில் அப்பு கதிரவேலு அவர்கள் தலைமையில் இயங்கிய குருகுலம், சிறுவர் இல்லம், தொண்டர் ஆசிரியர் பயிற்சிமையமாகவும் காந்தீயத்துக்கு பயன்பட்டது.

**தொண்டு நிறுவனம் பணியாளர்கள் மீது பயங்கரவாத முலாம் பூசி அவர்களை பழிவாங்கும் படலம் காந்தீய இயக்க அழிப்புடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.**

எல்லைப்புற கிராமக் குடியேற்றத்திட்டங்கள் வெற்றி அளித்தன. மலையக, தென் இலங்கைத் தமிழர்களை இந்தத் திட்டங்கள் பயனாளிகளாக உள்வாங்கிக் கொண்டது. வீட்டு நிலம், தோட்ட நிலம், காட்டு நிலத்தை திருத்த கூட்டாக தொண்டர்கள் செயற்பாடு, ஐந்து காணிகளுக்கு ஒரு தண்ணீர் இயந்திரம், மகளிர் தொழிற் பயிற்சி, பாலர்கல்வி, முதியோர் கல்வி என இந்தக் கிராமங்களில் செயற்திட்டங்கள் விரிவு கண்டன.

இந்த தொண்டு நிறுவனத்தை அழிப்பதற்கு முன்பாக இதன் முதுகெலும்பாக செயற்பட்ட தலைவர் எஸ்.ஏ. டேவிட் அமைப்புச் செயலாளர் சோ. இராசசுந்தரம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ஏப்ரல் 7ம் திகதி இவர்களைக் கதைது செய்து வெலிகடை சிறைக்குள் வைத்த அன்றைய ஜே. ஆர் அரசு அதே யூன் 1ம் திகதி நிறுவனத்தை அழிப்பதில் வெற்றி கண்டது. வெலிகடை படுகொலையில் கொல்லப்பட்ட 54 தமிழ் சிறைக் கைதிகளுள் டாக்ரர் இராசசுந்தரமும் ஒருவர். மட்டக்களப்பு சிறை உடைப்பில் வெளிக் கொணரப்பட்ட எஸ். ஏ. டேவிட் ஐயா தள்ளாத முதுமையிலும் தளராத காந்தீயக் கொள்கைகளோடு இன்றும் எழுத்துப் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

தொண்டு நிறுவனம் பணியாளர்கள் மீது பயங்கரவாத முலாம் பூசி அவர்களை பழிவாங்கும் படலம் அன்று ஆரம்பமானது. பலி வாங்கும் படலமாக இன்றும் தொடர்கின்றது. அன்றைய பொலிஸ் அடக்கு முறைகளை கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த குற்றச்சாட்டில் காந்தீய பாடசாலை தொண்டர் ஆசிரியர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

பண்ணைகள் ஒவ்வொன்றும் பயங்கரவாத பயிற்சி முகாம்கள் என்ற குற்றச் சாட்டில் சல்லடையிட்டு தேடுதல்களும் தொடர் கெடுபிடிகளுக்கும் ஆளாக்கப்பட்டது.

அக்காலத்தில் தங்கள் அமைப்பின் நேரடிக் கிளையை இலங்கையில் கொண்டிருக்காத காந்தியம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்ற நிறுவனங்கள் ஊடாக தம் உதவிகளை வழங்கிய உலக உதவி வழங்கும் ஸ்தாபனங்கள் அரச பயங்கரவாதத்தை தெரிந்து கொண்டும் மௌனம் காத்தன.

இன்று இனவாத சிங்கள அரசு நேரடியாக தமிழ்ப் பரப்பில் இயங்கும் தொண்டு நிறுவனங்களில் தொண்டையைத் திருக ஆரம்பித்துவிட்டது. காந்தீய நிறுவனத்தின் மீது 25 ஆண்டுகள் முன் ஆரம்பமான கெடுபிடி இன்றும் தொடர்கிறது.


வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

NEKKASAT
BEST DIGITAL SATELLITE CHOICE
2 CARD VIACCESS SATELLITE RECEIVER





பல Receiverகளின் Manual Scanning மூலம் T.B.O போன்ற புதிய தொலைக்காட்சிகளை எடுக்கும் பொழுது எதிர்காலத்தில் Factory Reset அல்லது வேறு சில காரணங்களினால் அவை இவகுவில் அழிந்து விடும். ஆனால் தமிழ்த் தொலைக்காட்சிகள், வானொலிகள் யாவும் NEKKASAT Receiverல் நிரந்தரமாக Preset செய்து இருப்பதனால் Factory Reset செய்யும் பொழுதோ அல்லது வேறு காரணங்களினாலோ அந்த சனல்கள் அழியாதபடி வரிசை கிரமமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு தீபம் சந்தாவுடன் (2 கார்ட் போடக் கூடிய) டிகோடர் £139.00 மட்டுமே.

2 கார்ட் போடக்கூடிய ரிசீவர் £69.00 மட்டுமே.

M25க்கு வெளியே உள்ளவர்கள் தபால் மூலம் டிகோடர்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் செலவு முற்றிலும் இலவசம்..

மேலதிக விபரங்களுக்கு

www.nekkasat.com

- Manual Book இலகு தமிழில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நேரடியாகவோ தபால் மூலமாகவோ (NEXTDAY DELIVERY) பெற்றுக்கொள்ளலாம்.
- உங்கள் வீடு தேடி வந்து ரிசீவர்கள் புதிதாக மாற்றிக் கொடுக்கவோ அல்லது UPGRADE செய்து தரவோ அல்லது புதிய இணைப்புக்களுக்கோ

வீட்டின் உள்ளே வைத்து பார்க்கக் கூடிய சட்லைட் எம்மிடம் உண்டு.

கட்டணத்தை இரண்டு தவணையிலும் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

- User Friendly Setup
- High Sernsitivity tuner for very weak signal for small dishes
- Fast auto scanning within 3 minutes
- Scan all transponders about 1300 channels on hotbird
- Channel Sorting by A-Z favourite
- Digital Audio Out (S/P DIF)
- Support for multiple language
- LNB short circuit production
- Parental Control Facility
- 2 Scart Sockets
- TV out and Aerial in
- Audio Video out
- ROHD Component (Lead Free)
- New 2007 Software

London: **Siva**
Tel: **07715 591 237 | 01895 272 721**

Paris: **Rajan Informatique**
22 Rue Perdonnet, 75010 Paris
Tel: **01 46 07 39 26** Por: **06 64 20 46 91**

# ஈழத்து இளைஞர்களும் தமிழகத்துத் தாத்தாக்களும்..

## ராஜீவ் காந்தியும் நானும் ஒண்டு தான்

*கட்டம் கட்டி ஆசிரியர்தான் முழங்க வேண்டுமா? என்னைப் போன்ற ஆசாமிகளுக்கு அந்த உரிமை கிடையாதா என்ன? ஆக...... இந்தக் கட்டத்துக்கான காரணம் யாதெனில்...... போன இதழில் என்னைக் கட்டம் கட்டிப் போட்டதில் மாபெரும் பிழை ஒன்று நடந்திருக்கிறது என்பதுதான். சொற்குற்றமாயின் பொறுத்தருளலாம்...... ஆனால் பொருட் குற்றத்தை......?*

*ஒரு பேப்பர் ருக்கு உலகெங்கிலும் உள்ள விரிவுரையாளர்கள் மீது என்ன கோபமோ நானறியேன். ஆனால்...... பி.காம். படிப்பையே இன்றைய நொடி வரை முடிக்காத என்னைப் போய்...... 'விரிவுரையாளர்' என விளித்தது ஒட்டுமொத்த கல்வி மான்கள்......கரடிகள்...... கங்காருகள்...... என எல்லோருக்கும் ஆப்பு வைக்கும் செயல். வெட்கத்தை விட்டு சொல்வதானால் (அப்படி ஒன்று இல்லாவிட்டாலும்......) இன்னமும் இருபத்தி மூணு அர்ரியர்ஸ் பி.காமில். (வணிகவியல் எண்டும் சொல்லலாம்) மொத்தம் இருபத்தி ஐந்தில் இரண்டு மட்டுமே தேறிய 'மேதையைப்' போய்...... 'விரிவுரையாளர்' என்றால் அடுக்குமா? 'அதுசரி...... அப்புறம் உனக்கெல்லாம் எப்படித்தான் கொடுத்தான் வேலையை?' என நீங்கள் புருவத்தை உயர்த்துவது புரிகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் நானும் ராஜீவ் காந்தியும் ஒரே ரகம்.*

*ஆம்.*

*அவர் அம்மா இறந்ததனால் பிரதமர் வேலைக்கு வந்தவர்.*

*'நான் அப்பா இறந்ததனால் கிளர்க் வேலைக்கு வந்தவன். போதுமா?*

எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழக மண்ணைத் தொட்ட போராளிகளாகட்டும்...... புலம் பெயர்ந்தவர்களாகட்டும்...... யாருக்குமே 'ஒழுங்காக' தமிழ் பேச வராது என்கிற 'உண்மை' இன்னும் பலருக்குத் தெரியாது. தமிழகத்தில் அடைக்கலம் தந்த அநேகருக்கு ஈழத்தவர்கள் கதைத்த 'இங்கிலீஷ்' தலை சுற்ற வைத்து விட்டது. இவர்களும் அவர்களும் உரையாடிக் கொள்வதைப் பார்த்தால் ஏதோ இரண்டு வேற்று கிரகவாசிகள் உரையாடிக் கொள்வதைப்போல் தான் இருக்கும்.

இப்படித்தான் ஒருமுறை தோழன் குட்டி திருச்சியில் நின்றபோது ஒரு சம்பவம். ஏதோ அவசர நிமித்தமாய் பக்கத்து வீட்டுக்காரரின் கதவைத் தட்டி

"அம்மா...... ஒரு பாரமான வாளி இருந்தா கொடுங்கம்மா" என்று கேட்க அந்த அம்மணி வெலவெலத்துப் போய்விட்டார்.

"ஏம்பா... நீ மலையாளத்துக்காரனா? சொல்லவே இல்லியே.." என்று பதிலுக்கு வினவ...... ஏற்கெனவே அவசரத்தில் இருக்கிற குட்டி என்ன செய்வது? ஏது செய்வது? என்று தடுமாறிய வேளையில் சட்டென்று பதில் தோன்றியிருக்கிறது பக்கத்தில் இருந்த தோழனுக்கு....

"அம்மா...... அவன் கிடக்கிறான்...... நீங்க ஒரு வெயிட்டான பக்கெட் இருந்தா கொடுங்க அவசரம்." என்று விளக்கம் கொடுக்க......

"ஆங்...... அப்படித் தமிழ்ல கேட்டா குடுப்பனல்ல" என்றபடியே கொடுத்திருக்கிறார் அந்த பக்கத்து வீட்டுக்காரர்.

பாரமான வாளி இங்கிலீஷ் ஆகவும் வெயிட்டான பக்கெட் தமிழாகவும் மாறிய கதையைச் சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள் தோழர்கள்.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் ஒரு நிகழ்ச்சி. கூட்டம் 6 மணிக்கு என்று அழைப்பிதழில் போட்டிருந்தாலும் ஆரம்பிப்பதாய்க் காணோம்.

பொறுத்துப் பொறுத்து பார்த்த எனது ஈழத்து நண்பன் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பெரியவரிடம்......

### உளறுவது

தமிழகத்திலிருந்து : **பாமரன்**

"அய்யா...... நிகழ்ச்சி எப்பத் துவங்கும்?" என்று கேட்க...... பெரியவரிடம் இருந்து எந்த பதிலும் இல்லை. ஒருவேளை பெருசுக்கு காது கேட்காதோ என்னமோ என்கிற சந்தேகத்தில் கொஞ்சம் உரக்க

"அய்யா...... நிகழ்ச்சி எப்பத் துவங்கும்?" என்று அடிவயிற்றிலிருந்து மறுபடியும் குரல் கொடுக்க...... கொஞ்சம் அசைந்து கொடுக்கிறது பெருசு. அப்பாடா இப்பவாவது காதில் விழுந்ததே என்கிற நிம்மதியில் நண்பன் மீண்டும் அந்தப் பெரியவரைப் பார்த்து புன்னகைக்க......

அவரோ சுற்றும் முற்றும் பார்க்கிறார். பின்னர் மெதுவாக நண்பனின் காதருகே குனிந்து மன்னிப்பு கேட்கும் தொனியில்

"தம்பி...... எனக்கு அவ்வளவாக இங்கிலீஷ் பேச வராது" என்று சொல்ல...... நண்பன் மயக்கம் போட்டு விழாததுதான் குறைச்சல். கர்மம்டா சாமி...... என்று தலையில் அடித்துக் கொண்டு

"அய்யா...... நான் புரோகிராம் எப்ப ஸ்டார்ட் ஆகும்ன்னு கேட்டன்" என 'அழகு தமிழில்' விளக்கிச் சொல்ல......

"ஓ அதுவா தம்பி...... புரோகிராம் கரெக்ட்டா செவன் ஓ கிளாக் ஸ்டார்ட் ஆயிரும்" என்று பெருசு நெத்தியடியாய் போட்ட போட்டில் அன்றிலிருந்து நண்பன் நிகழ்ச்சிகளுக்கு போவதையே கைவிட்டு விட்டான் என்பது வேறுகதை.

சாதாரணமாக வழக்குத் தமிழில் பேசினாலேயே "சார் உங்களுக்கு ரொம்ப தமிழ் பற்றா?" என்று எங்களையே ஒரு கை பார்க்கும் சனத்திடம் நமது ஈழத் தோழர்கள் பட்ட பாட்டை நினைத்துப் பார்கிறேன்...... ம்ம்ம்ம்ம்ம்...... அந்தப் பாட்டுக்கு பதிலாக வெறும் காத்துதாங்க வருது.

என்னைப் பொறுத்தவரை......

சிங்களனுக்குத் தப்பி தமிழகத்தின் கரைகளில் ஒதுங்கியவர்களை விடவும்

'சிங்களன் கையாலேயே செத்தாலும் பரவாயில்லை'

என்று தமிழனுக்குத் தப்பி படகேறியவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பது எனது நம்பிக்கை.

*(உளறல் தொடரும்)*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**JULY 12 — SATURDAY @ 3PM**

*பொங்கு தமிழ் -2008*

*உணர்வுபூர்வமான தமிழர்களின் ஒன்றுகூடல்*

Richardson Evans Playing Fields, Roehampton Vale, London, SW15 3PQ

*விபரங்களுக்கு : 078 5378 5660, 079 4376 7470,*

**JULY 19 — SATURDAY @ 5.30PM**

*சதங்கை நாதம்*

*திருமதி ராகினி ராஜகோபாலின் நாட்டியாலயா மாணவர்களின் நடன விருந்து*

Fair Field Hall, Park Lane, Croydon, Surrey, CR9 1DG

*தொடர்புகளுக்கு: 020 8767 8004, 07904 069 369*

**JULY 20 — SUNDAY**

*அனைத்துலக விளையாட்டு விழா*

*அனைத்துலக பிரித்தானிய விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் விளையாட்டு விழா*

தொடர்புகளுக்கு Sprots Foundation Milton keynes *07908000570, 07878668859*

**JULY 26 — SATURDAY @4PM**

**Britains Braniest Pillai Final**

Chundukuli - St John's Annual General meeting & Hoppers Lunch

Lampton School, Lampton Avenue, Hounslow, Mddx, TW3 4EP

**JULY 26 — SATURDAY @4.30PM**

**Kalai Maalai - *2008***

*பிறன்ற் தமிழ் பாடசாலை நடாத்தும் கலை நிகழ்வு*

Winston Churchill Hall, Pinn Way, Ruislip,

*தொடர்புகளுக்கு: 020 8842 90429 0208 997 5324*

### காமம் பெரிதெனினும் கடந்து நில்

பச்சைஇளநீர்க் காய்களை
விற்பவன் போல்
தேடியலைகிறாய்
உன் மனவோட்டங்களில்
எந்தத் தடையுமின்றி
பதியும் வார்த்தைகளை
அவ்வப்போது தெருவோரங்களில்
வீசி எறிகிறாய்
புழுதியாய் படரும்
உன் சுவாசங்களையறிந்து
விலகியே நிற்கிறது
சாலையோரத்து மரங்கள்பறவைக்
குஞ்சுகள்
கரகரத்து பாடுகின்றன
பிறிதொரு நாள்...
என் வாசலில் நின்றழும்
பெண்ணிடமிருந்து வருகிறது
உன் கண்களாலும் உடலாலும்
உறிஞ்சப்பட்ட காமம்.

*- ஜீ. மஞ்சுளா*

உங்கள் நிகழ்வுகளையும் இங்கே பிரசுரிக்க ஒரு பேப்பர் உடன் தொடர்பு கொள்ளவும்.

*ஒரு பேப்பர்*



- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sale Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

அனைத்து தமிழ் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

**TAMSONS**

Accountancy & Tax Consultancy Ltd.

65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR

Tel: **020 8313 0800**

# அறுந்து போகும் குடும்பப் பிணைப்புகள்

**அக்னிபுத்திரன்**
*(முத்தமிழ் மன்றத்தில் )*

உறவுகள் மனிதனுக்கு மிக மிக முக்கியமானவை. பந்த பாசமே மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அந்தப் பந்தம், அந்தப் பாசம் உருவாகி, மலர்ந்து, மணம் வீசும் அற்புதப் பூங்காதான் குடும்பம். பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் குடும்ப உறவுகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியத நிதர்சனம்.

குடும்பப்பிணைப்பு, குடும்பம் என்பது கணவனும் மனைவியும் தங்களுடைய குழந்தைகளோடும் சுற்றத்தோடும் கூடி வாழும் சமூக அமைப்பின் ஒரு அங்கம் ஆகும். இதில் குடும்பப்பிணைப்பு என்பதோ, குடும்ப உறுப்பினர்களிடையே இருக்க வேண்டிய நெருக்கமான உறவைக் குறிக்கின்றது.

வெறும் கற்களையும் சிமெண்டையும் கொண்டு உருவாக்கப்படும் கட்டடத்தில் குடும்பப் பிணைப்பு என்னும் விலைமதிப்பற்ற மாணிக்கம் பொருத்தப்பட்டு அழகு சேர்க்கும் போதுதான் அது வீடு என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் இன்று பணம் பணம் பணம் என்று பொருள் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். பணம் என்று வந்து விட்டால் அதைத் தேடுவதில் உள்ள ஆர்வத்தைக் குடும்பப் பிணைப்பில் காட்ட மறந்து விடுகிறார்கள்.

இன்று கணவனும் மனைவியும் மனம் விட்டுப் பேசிக்கொள்ள முடிகின்றதா? நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அப்படிப்பட்ட ஒரு நல்ல குடும்பத்தை தனது குடும்பவிளக்கில் படைத்துக் காட்டினார்.

வேலை இடத்தில் ஒரு பிரச்சினை ஏற்பட்டு மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்புவார் குடும்பத்தலைவர். உடனே மனைவி, ஆறுதல் அளிக்கும் வகையில்,

'நண்புளார் தீமை நாடினும் அதனைப்

பண்புளார் பொறுப்பார்? பகைமை கொள்ளார்!

அத்தான் மறப்பீர்! அகம் நோகாதீர்....'

என்று பதமாக, இதமாகப் பக்குவமாகத் தேறுதல் கூறுவாள் குடும்பத்லைவி!

ஆனால்...இன்று, 'அய்யய்யையோ, எனக்கே மண்டையெல்லாம் ஓடுது...எங்க ஆபிஸ்லயே எனக்கு ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகள்! நீங்க வேற.. உங்க பிரச்சனைய உங்களோடயே வைத்துக் கொள்ளுங்க' இந்த வசனம்தான் எல்லாக் குடும்பங்களிலும் கேட்கிறது!

பிரச்சனைகளைக் காதுகொடுத்து கேட்க வேண்டுமென்று, கணவனைப் பார்த்து மனைவி பயந்து ஓடுறதும், மனைவியைப் பார்த்து கணவனும் பயந்து ஓடுறதும்...இவங்க இரண்டு பேரையும் பார்த்துப் பிள்ளைகள் பயந்து ஓடுறதும்... இப்படி இருக்கு இன்றைய குடும்பத்திலே பிணைப்பு!

வேலை வேலை வேலை என்று பெரும்பாலானவர்கள் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர். குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி ஒருவேளை உணவையாவது ஒன்றாகச் சாப்பிட முடிகின்றதா ? முடியவில்லையே! என்ன காரணம் ?

இப்போது புதியதாக ஒரு வழக்கம் வந்திருக்கிறது. பிள்ளைகளும் பணம் சம்பாதிக்க கிளம்பி விடுகிறார்கள். விடுமுறை கிடைத்தால் போதும் பிள்ளைகளும் வேலைக்குக் கிளம்பிப் போய் விடுகிறார்கள். குடும்ப உறவுகளிடையே பேச்சுவார்த்தை நடத்தக்கூட முடியாத ஒரு அவலநிலை! குடும்ப வாழ்க்கையில், குடும்ப உறுப்பினர்களிடம் கலந்துரையாடும் பயனுள்ள நேரம் கொஞ்சம் கூட இருப்பது இல்லை!

பாடுபட்டு உழைத்து அழகான பெரிய வீடு வாங்குகிறார்கள். விலை உயர்ந்த கட்டில் வாங்குறார்கள். நல்ல மெத்தையும் வாங்குகிறார்கள். ஆனால், கொடுமையைப் பாருங்கள் கூடவே தூக்கத்தையும் வாங்குறார்கள். ஆம் தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தான் ஒரு சிலருக்குத் தூக்கமே வருகிறது.

எப்போதும் பொருள் ஈட்டும் சிந்தனையில் ஓயாமல் உழைக்கும் மக்கள், மன உளைச்சலால் பாதிக்கப்படுகிறார்கள்.!

ஒரு புதுக்கவிதை...

காசு, பங்களா, காவலாளி
எடுபிடிக்கு ஏழெட்டு ஏவலாளி
எல்லாம் இருந்தும் என்ன ஆச்சி ?
நிம்மதி மட்டும் போயே போச்சி!

மகிழ்ச்சி என்பது பணத்தால் மட்டும் வருவதில்லை. பணம் வாழ்க்கைக்குத் தேவை. ஆனால், பணமே வாழ்க்கை ஆகிவிடாது. பாசத்தைத் தொலைத்துவிட்டு பணத்தைத் தேடுவது குடும்பப்பிணைப்பை வளர்க்குமா ?

வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டும் வெளியில் அழைத்துச் சென்று, பிள்ளைகளுக்கு அன்பளிப்புகள் வாங்கிக் கொடுத்து விட்டால் மட்டும் அன்பு மழை அருவியாய்க் கொட்டோ கொட்டுன்னு கொட்டிடுமா ?

பணம் பகட்டுக்கு உதவலாமே தவிர அது பாசத்தைத் தந்துவிடாது.

பிள்ளைகளுக்காகப் பணம் சேர்க்கின்றேன் என்று கூறி பணத்தின் பின்னால் அலைகிறார்கள் பெற்றோர்கள். பிள்ளைகளோ பாசத்திற்காக ஏங்குகிறார்கள். இதுதான் இன்றைய உண்மையான நிலை.

'இன்பமோ துன்பமோ இரண்டிலும்
இணைந்து
ஏற்றமோ தாழ்வுவோ எதையும் பகிர்ந்து
மாற்றமில்லா மனத்தொடு அகம் மகிழ்ந்து
வாழும் வாழ்வே வளமிகு குடும்பப்
பிணைப்பாகும்'

## பொங்குதமிழ் களம் புகுவாய்

என் அருமைத் தமிழ் மகனே!
இங்குனக்கு என் கேள்வி
பொன்னான உயிரையெல்லாம்
போக்கிவிடும் அரக்கரிடம்
எந்நாளும் அடிமைகளாய்
இருந்திடவோ பிறந்தாய் நீ
எம் வாழ்வும் எம் வளமும்
எம் கையில் உளது என
உணராமல் உறங்குகிறாய்
உணர்ச்சியின்றிப் புலம்புகின்றாய்
பொங்கியே எழுவாய் நீ
புலம்புதலை விடுவாய் நீ
சிங்கமெனப் புறப்படுவாய்
பொங்குதமிழ் களம் புகுவாய்
சாகிலும் அழுவதும் தமிழ் மொழியாம்

- அனுராதா



# சென்னைப் பட்டணம்

போனதெல்லாம் கனவினைப்போல்

சென்னையிலிருந்து த. அகிலன்

இன்னாபா இது ஒவ்வொரு தபாவும் சென்னலேர்ந்து அகிலன்னு போட்டுக்கினுருக்கானுவளே மெய்யாலுமே அந்தாளு அங்குன தான் இருக்கானா. இல்ல இந்த ஒரு பேப்பர் காரனுவ நம்கையில ரீல்வுட்டுக்கினு இருக்கானுவளா. இந்தா நைனா ஒருவாட்டி செக் பண்ணுய்யா...

இப்படி ஒரு சந்தேகம் உங்களுக்குள் தோன்றிக் கொண்டேயிருக்கும் என்பதால் சென்னை பற்றி இந்தவாரம்.

சென்னை என்கிற வார்த்தை எனக்குத் தெரிகிறபோது. ஒரு 8 வயதிருக்கும். கட்டுங்கடங்காமல் காட்டுக்குள் குகைகளிற்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் விசித்திரக்குள்ளர்களையும், முகமூடி வீரர் மாயாவியையும் அவரது காதலி டயானாவையும் ராணி காமிக்ஸ் புத்தகத்தில் புரட்டி முடித்து ஆவலடங்காமல் கடைசி மட்டைவரை படித்துவிடுகிறபோது எனக்கு தெரிந்த வார்த்தை சென்னை- 600018 என்று நினைக்கிறேன்.

பிறகு சென்னை இந்திய புத்தகங்கள் வழியாகவும் சினிமா வழியாகவும் மிகவும் புரிச்சயமான பக்கத்து வீட்டு ஜன்னலில் ஒளிர்கிற புன்னகை போலாகிவிட்டது. நான் சென்னையில் வசிக்கநேரிடும் என்று அப்போதெல்லாம் நான் நினைத்து பார்த்தது கிடையாது. இப்போது நான் ஒரு சென்னை வாசி. அதன் பிரமிப்புக்களை எல்லாம்தாண்டி அதன் வாழ்வியலுக்குள் என்னை நுழைத்துக் கொண்டு விட்ட சராசரி நகரவாசியான பின்பு எனது கற்பனையில் இருந்த சென்னை கொஞ்ச இடங்களில் தகர்ந்து போய்விட்டிருக்கிறது. கொஞ்ச இடங்களில் இன்னும் ஒரு பெரிய நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்கிறது.

ஒரு திசை தெரியாப் பயணியைப்போல் நான் நுழைந்த ஆரம்பங்களில் சென்னை என்னை திக்குமுக்காட வைத்திருக்கிறது. இந்தப் பெருநகரின் வாய் எங்கே என்னை விழுங்கி ஏப்பம் விட்டுவிடுமோ என்கிற தயக்கம் இருந்துகொண்டேயிருந்தது. திருவிழாவில் தொலைந்து போன குழந்தையைப்போல் மிரள மிரள விழித்திருக்கிறேன். செம்மண் புழுதியுடன் குண்டுச்சத்தங்களால் திசைகள் நிறைந்து வழியும் ஊரிலிருந்து வந்த எனக்கு இந்த நகரத்தின் இரைச்சலும் பெற்றோல் புகையும் அதிசயமாகத்தான் இருந்தன. (பெற்றோல் கூட ) எனக்கு சென்னையில் முதல் முதலாக அழகாக தெரிந்தது விளம்பரத் தட்டிகள் தான். டயரில் இருந்து தங்கம் வரைக்கும் அழகழகான பிகர்களை போட்டோ புடிச்சு யட்டா... எத்தினை வளைவுகள் நெளிவுகள் மேடுகள் ( நான் தெருக்களில் சொல்கிறேன்.) எங்கெங்கு காணிலும் விளம்பரங்கள். எங்கேயாவது மண்டையோடு படம் போட்டு மிதிவெடி கவனம் என்கிற விளம்பரங்களை மட்டுமே பார்த்திருந்த எனக்கு இது ஆச்சரியமான ஒரு அனுபவமாக இருந்தது.

ஆனால் என்னதான் இருந்தாலும் எனக்கு சென்னை ஒரு அழுக்கு நகரம் என்கிற மாதிரியான உணர்வு இருந்து கொண்டேயிருக்கிறது. சென்னை குப்பையில் கிடக்கும் ஒரு வைரம் என்பதனாலோ !!.

சென்னைக்கு வந்த முதல் வாரத்தில் விக்கி அண்ணாவின் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வியப்படங்கவில்லை எனக்கு. அது ஒரு அற்புதமான அனுபவம். எங்கேயோ ஒரு விமான நிலையத்தில் இருந்து இறங்கி வந்து குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வண்டிகளில் பயணித்து நட்சத்திர விடுதிகளில் தங்கி அப்படியே பறந்து விடுகிற எல்லோரும் சென்னையின் உயிரற்ற ஒரு வெறும் கூட்டை மட்டும் தான் பார்க்கலாம். சென்னையை உயிரும் துடிப்புமான சென்னையாகப் பார்க்க அதன் பேருந்துகளிலோ, மின்சார ரெயிலிலோ, அல்லது ஆட்டோக்களிலோ பயணம் செய்து பார்த்தால் மட்டுமே சென்னையை அதன் உயிர்த்துடிப்புடன் அதன் உயிரின் அசைவை அனுபவிக்கலாம்.

மெட்ராசை சுத்திப்பாக்க போறேன்

மெரினாவில் வீடு கட்டபோறென்?.

ஒரு பாட்டிருக்கிறது இல்லையா. அப்படி மெரினாவில் ஒரு வீடுகட்டலாம் என்று ஒரு ஆசை வரும்.( சுனாமியும் தான் வரும்) மெரினாவை பார்க்கின்ற போதெல்லாம். தின்னத் தின்ன தீராத சுண்டலைப்போல மெரீனா நீண்டு கிடக்கும். அதன் அழகில் சொக்கிப் போய் கால்நனைக்கலாம் பூக்களாய் உடைந்து சிதறும் நுரையில் சென்னை அழுக்கல்ல அற்புதம் என்று தோன்றும் ஒரு கணம். பிறகந்தக் கணம் நுரையைப்போலச் சிதறியும் போகும். இரவின் மெரீனா அழகோ அழகு. ஒரு பௌர்ணமி இரவில் மெரீனாவில் யாருமற்ற ஒரு மணற்பரப்பில் (அதைத் தேடிக் கண்டு பிடிப்பது கஸ்டம்) எனை மறந்து உட்கார்ந்து கொண்டிருந்திருக்கிறேன். அந்த அனுபவம் அற்புதமானதுதான். போன வருடப்பிறப்பன்று நான் சென்னையில் பார்த்த குதூகலம் என்னை ஆச்சரியப்படுத்தியது. இரவின் மெரீனா மட்டுமா அழகு எங்காவது மொட்டைமாடியில் உட்கார்ந்து கொண்டு வெறுமனே கண்முன்னே விரிகிற சென்னையின் ஒளிப்புள்ளிகளை இணைத்து ஓவியங்கள் செய்யலாம் அதுவும் ஒரு ரசானுபவம்.

மெரினா நிறைய வெள்ளந்திகளை அடையாளம் காட்டும். எங்கேயோ ஒரு கிராமத்தில் இருந்து தன் பொண்டாட்டியை கூட்டி வந்து எம்.ஜி.ஆர் சமாதியை காட்டி தொட்டு வணங்கிப்போகிறபோது எனக்கு புரிந்தது எம்.ஜி.ஆரின், அண்ணாவின் மீதும் மக்கள் கொண்டு அன்பும் அவர்களின் மக்கள் தொண்டும். அதற்கெல்லாம் ஒரு படி மேலே போய் எரிகிற தீபத்தின் வாயு வெளிவிடுகிற இரைச்சலை தலைவர் குரல் என்று பொண்டாட்டிக்கு விளக்கம் கொடுத்து அது கல்லறையில் காதுவைத்து 'அப்படியா மாமா' என்று விழி விரிக்க ஒரு தெனாவெட்டாக வேட்டியை இன்னும் உயர்த்திக்கட்டியபடி நடக்கிற வெள்ளந்திகளை பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

ஆட்டோக்காரர்கள் மீதான அச்சமும் கோபமும் எனக்கு ஏனோ ஊட்டப்பட்டிருக்கிறது. சென்னையின் துடிப்பு ஆட்டோக்கள் தான். ஆட்டோக்கள் இரையாத தெருக்கள் தங்களை அனாதையைப்போல உணரும் என்று நினைக்கிறேன். மற்றபடி அட்ரஸ் இல்லாத தெருக்களையும் கூட ஆட்டோக்கள் அறியும். ஆட்டோக்காரர்கள் ஏமாற்றுக் காரர்கள் கடத்தல் காரர்கள் என்கிற மாதிரியான ஒரு பிம்பம் எனக்குள் இருந்தது. ஒரு வேளை சினிமாக்காரர்கள் பத்திரிகைகள் எற்படுத்திய பிம்பமாய் அது இருக்கலாம். ஆனால் சென்னையின் பஸ் ரூட்கள் இலக்கங்கள் தெரியாத ஆரம்ப நாட்களில் நான் ஆட்டோக்களின் ராஜாவாக இருந்தேன். எனக்கு ஆட்டோக்காரர்கள் ஊர் சுத்திகாட்டியதாய் தெரியவில்லை. (எனக்கே தெரியாமல் அல்வா கொடுத்துவிட்டார்களோ தெரியாது) ஆனால் ஒரு மழை நாளில் தீடீரென்று ஏறிய குமார் அண்ணாவின் ஆட்டோவில் இப்போதெல்லாம் போன்போட்டு வரச்சொல்லி ஏறிப்போகுமளவுக்கு நெருக்கமாக முடிந்தது. அதனால் ஆட்டோக்காரார்களைக் குறை சொல்ல முடிவதில்லை.

பஸ்சைத் தவறவிட்டு மறித்த ஆட்டோக் காரக்கிழவர் சொன்ன கதைகள் அந்த மழை இரவில் காக்கிச்சட்டையில் ஊறிய ஈரம்போல மனசில் பாரமாக அழுத்தியது. ஒரு புதிய தோழனைப்போல என்னிடம் ஏனோ கபகபவென்று எல்லாவற்றைப் பற்றியும் பகிர்ந்து கொண்டாரே அந்த அந்நியோன்னியம். அந்த மழை இரவில் சூடாகக் குடித்த ஒரு சிங்கிள் ரீக்கு நான் பணம் கொடுத்தேன் என்பதற்காக ஆட்டோவுக்குப்பணம் வேண்டாம் என்று அடம்பிடித்து மறுத்துவிட்டுப் போன அந்த கிழவரின் மனசு எல்லாமுமாக சோந்து ஆட்டோக்காரர்கள் பற்றிய அபிப்பிராயத்தை மாற்றியது. அந்த கிழவர் பேசும் போது சொன்னார் 'சென்னைக்கு புதுசா அதான் பாத்தாலேதெரிதே. ரொம்ப உசாராஇருக்கணும் தம்பி. மோசக்காரப்பய ஊரு. நான் 46 வருசமா மெட்ராசில வண்டி ஓட்டுறேன். என்னை வாழவைக்கல தம்பி மெட்ராசு? அதிஸ்டம் வேணும்பா ஏமாத்துக்காரனுகதான் ஜயிக்கிறான். குரலுடைந்து பிறந்த அந்த வார்த்தைகள் இன்னமும் ஒலிக்கிறது.

ரங்கநாதன் தெருவுக்குள் முதல் முறை போனால் மிரண்டு நசுங்கி வியர்த்துக் கொட்டிப்போகும். போகப்போகச் சரியாகும். என்னதான் கரும்புச் சக்கைகளை கவிழ்த்து தெருமுழுக்க கொட்டியிருந்தாலும் என்ன அழகு எத்தனை அழகு என்று பாடிக்கொண்டே திரும்பித் திரும்பி எதைப்பார்ப்பது எனத் தெரியாமல் (நான் கடைகளை சொல்றேன்) கழுத்து வலித்துப்போவதும் ஒரு சுகம்தான். அப்டியே ஒரு மாலை 5 மணிவாக்கில தி.நகர் போயிட்டு மாம்பலம் ரெயில்வே ஸ்ரேசன் வந்தீங்கன்னு வையுங்க பாக்கலாம் சென்னையின் ஜனத்தொகை எப்படிப்பட்டதென்று. ஏதாவது ஒரு கூபே வாசலுக்கு நேரே நிண்டீங்கண்டா சரி தானாவே உள்ள ஏத்துவாங்க. அவ்வளவு கூட்டம். என்னதான் ரயில்வேத்துறை பிரச்சாரம் பண்ணினாலும் கம்பியைப்பிடித்து தொங்கிக் கொண்டே பயணம் செய்கிற வவ்வால்களின் சாகசங்கள் காணச் சகியாதவை.

மற்றபடி மின்சார ரயில் அலைபாயுதே படத்தில் வருகிறமாதிரி மனசுக்குள் பூப்புக்கிற மத்தாப்பு அனுபவம் தான். ஏதோ அறியா வயதில் யாழ்தேவியில் பயணம் போன எனக்கு தடுக் துடுக் என்று அடிக்கடி கடக்கிற அல்லது வருகிற மின்சார ரயில் ஒரு புழகாங்கித அனுபவம் தான். ஆயிரம்தான் கூட்டம் இருந்தாலும் ரயில் பயணம் என்பது சிலிர்க்கும் அனுபவம் மெட்ரோ ரயிலில் ஏறாதவன் நரகத்துக்குப் போகட்டும் (யார்ப்பா யாரோ ஒரு ஆபீசர் குரல் கேக்குது அதுவே ஒரு நரகம் தான்னு) என்னதான் இருந்தாலும் சென்னையின் மின்சார ரயிலின் நிரந்தரப் பயணிகளை என்றைக்கு அது இறக்கிவிடப்போகிறதோ தெரியவில்லை.

அதான் நான் பிச்சைக்காரர்களை சொல்கிறேன். என்னதான் சிலிர்க்கும் அனுபவமாயிருப்பினும். அவர்களின் பாடல் அல்லது இரக்கும் குரல் ஒலிக்கத் தொடங்குகையில் தண்டவாளத்தின் தடதடப்பு மனசுக்குள் தொற்றிக்கொள்கிறது. திடீரென்று வண்டியின் வேகத்தில் தொற்றி ஏறிக்கொள்கிற 5 வயது சிறுமியும் அவ ஆத்தாவும் வாசலருகில் உட்கார்ந்து கொள்கிறார்கள். ஆத்தா தோளில் முடிச்சுப்போட்டு இறுக்கிய இன்னுமொரு குழந்தை. அதுவும் சில ஆண்டுகளில் இப்படித்தான் ஆகும். அந்த 5 வயது சிறுமி திடீரென்று ஒரு ஜிம்னாஸ்டிக் காரியையைப்போல் சின்ன வளையத்தை வைத்துக்கொண்டு ஏதோ வித்தை மாதிரி செய்வாள் யாரும் பார்க்கிறார்களா என்பதெல்லாம் அவள் கவனிப்பதில்லை. பிறகு கைகளை நீட்ட தொடங்குவாள் மனிதர்களின் முகங்கள் இறுகத்தொடங்கும். அவள் பொருட்படுத்தாது நீட்டிக்கொண்டேயிருப்பாள் இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் நீட்டிக்கொண்டேயிருப்பாள்?.

இன்னுமொரு மனவிழிப் பிச்சைக்காரர். வாயுள் அடங்கிப்போகும் குரலால் பாடியபடி பிச்சை எடுக்கிறார். அவர் குரல் வெளியே எழவேயில்லை கரங்கள் நீண்டிருக்கிறது. அவர் தனது தொழில் குறித்து வெட்கம் கொள்பவராய் எனக்கு பட்டது இருந்தும் அவர் கைகளை நீட்டுகிறார். என்னைக்கடக்கையில் நான் பார்த்தேன் அவரது மூடியவிழிகளில் நீரை. சென்னை கடக்க வேண்டிய துயரங்களில் முக்கியமானது இது.

கோடை வெயிலும், கூவத்தின் மணமும் இல்லாத சென்னையை யாரும் கற்பனை கூடச்செய்யமுடியாது. கூவத்தை கடக்கையில் எனக்குத் தோன்றும் 'கந்தகத்தின் வாசனை விடவும் கூவத்தின் மணம் மேலானது.' எத்தனையோ சினிமாக்களில் பார்த்த நேப்பியர் பாலத்தை நேரில் பார்க்கிறபோது வியப்பேதும் எழவில்லை மாறாக ஏமாற்றம் மிஞ்சுகிறது. சின்னச்சின்ன துயரங்கள் இருந்தாலும் சென்னையில் மட்டும் தான் வாழ்வின் எல்லாத் தரப்பு வருமானமுள்ளவர்களாலும் பிழைக்க முடிகிறது அல்லது சாப்பிட முடிகிற நகரமாயிருக்கிறது. குப்பங்களும் கோபுரங்களும் இங்கேதான் சாத்தியம். ஆழ்வார் படத்துக்கு 600 ரூபாய்க்கு டிக்கெட்டும் பள்ளிக்கூடம் படத்துக்கு 60 ரூபாய் டிக்கெட்டும் இங்கேதான் சாத்தியம். பிளாட்பாரக்குழந்தையின் உலர்ந்த உதடுகளின் மேல் ஊற்றப்பட வேண்டிய பால் கட்டவுட்டுகளில் வழிவதும் இங்கேதான் சாத்தியம். நான் குப்பைபொறுக்கும் சிறுவர்கள் பற்றி விவரங்கள் சேகரிக்கசென்ற ஒரு நண்பருடன் தொற்றிக்கொண்டே போனபோது நிவேதா என்கிற எட்டு வயது சிறுமியைப் பார்த்தேன்.

( தொடர்ச்சி 33ம் பக்கத்தில்)

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder/Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Scale Drug Importation
- Sexual Offences Including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Criminal Defence Service

RAJ LAW SOLICITORS

Community Legal Service

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும்
சட்டத்துடன் அதனைச் சந்திக்க
நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

24 hour police station emergency service

Experts in Criminal Defence Service (UK)

M: 07947 641 876 / 07956 067 587 T: 020 8516 7730/020 3133 0000

Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance /Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives' Visa
- EU Dependant Visa/Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 year rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy

# சலவைக்கு இனி விடுதலை

துணி துவைக்கும் தொழில் இன்றோ அல்லது நேற்றோ ஆரம்பித்த தொழில் அல்ல. பாரம்பரியமாக பேணிக்காத்து வந்த இத் தொழிலுக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது.

அழுக்குத் துணிகளை அலம்பி அலம்பி அலுத்துப்போன எமது முன்னோர்கள் ஒரு வழியாக அந்த வேலையைச் செய்ய இயந்திர சாதனங்களைக் கண்டுபிடித்தார்கள்.

அப்பாடா! ஒரு வாரத்துக்கு ஒரு முறை அழுக்குத் துணிகளைத் துவைத்தால் போதும் என்ற நிலைமைக்கு வந்துள்ள எமது சக நண்பர்களுக்கு ஒரு நற்செய்தி. இனிமேல் மாதக் கணக்கில் ஓய்வு எடுக்கும் வகையில் புதியரக உடுபுடவைகளை தொழிற்சாலைகள் தயாரிப்பதில்படுவேகமாகபணியாற்றிவருவது சமீபத்தில் கிடைக்கப்பெற்ற செய்தியாகும்.

2001ம் ஆண்டு நானோ டெக்ஸ் ஆரம்பித்த புதியரகப் புடவைகளில் புகுத்தப்படும் நவீன இரசாயனப் பகுதிகளால், ஆடைகளில் பதியும் கறைகள் உள்வாங்கப் படாமல் தடுக்கும் தன்மை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய புதியரக ஆடைகள் ஏற்கனவே எடி பௌவர், கப், குகோ பொஸ் போன்ற விற்பனை நிலையங்களால் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. இதன் பிரபல்யம் இப் போது உணரப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களுக்கு கழுவப்படாமல் அணிந்து செல்லக்கூடிய உடைகளை, கூடுதலாக வாங்கிக் குவிப்பதில் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிக ஆர்வம் காட்டி வருவதாகச் செய்திகள் கூறு கின்றன.

இவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் நிமித்தமும் உடைகளில் அநாவசியமாக ஒட்டிக்கொள்ளும் கறைகளைக் கழுவும் சிரமத் தினாலும், புதியரக உடைகள் இராணுவச் சிப் பாய்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

புளொரிடா வைச் சேர்ந்த ஜெப் ஓவென்ஸ் என்ற இரசாயன ஆய்வாளரும் அவரது குழுவினரும், ஆடைகளில் பற்றிக் கொள்ளும் தீ, கொழுப்பு எண்ணெய், நீர் போன்ற வற்றின் தாக்கத்தை முற்றாகத் தடுப்பதற்கு ஆராய்ச்சிகளை முன்னெடுத்து வருகி றார்கள்.

## தகவல் களஞ்சியம்

சுவாசிப்பவர்: **உமா மகாலிங்கம்**

அனேகமாக 2009ம் ஆண்டளவில் இவர்களுடைய கண்டுபிடிப்புகளின் பதிவுகள் வெளிக் கொண்டு வரப்படுமென நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

என்ன தான் புதிய கண்டுபிடிப்புகள் வந் தாலும், ஆற்றங்கரைகளில் ஆடைகளை அலசி, வெட்டவெளியில் காயவைத்து, கரி களினால் அடுப்பூட்டி, மெதுவாக மடிப்புகள் நீக்கி, அலங்கார உடையணிந்து, அழகாக நடைபயின்ற காலங்கள் மீண்டும் வருமா?

### ஒலி—ஒளிபரப்பைப் பதிக்கும் வலைப்பின்னல்

இப்போது நடைமுறையில் இருக்கும் அன லொக் வகை ஒளிபரப்பு, 2009ம் ஆண்டு பெப்ரவறி மாதம் 17ம் திகதி தொடக்கம் டிஜிட்டல் வகையில் ஒளிபரப்பு செய்யும் நடைமுறை உலகரீதியாக அமுலாகுமென எதிர்பார்த்திருக்கும் வேளையில், மைக்கிரோ சொப்ட், கூகில் போன்ற அதிசக்திவாய்ந்த வலைப்பின்னல் ஸ்தாபனங்கள் தமது தொடர்புகளை கம்பியில்லாத் தந்திமூலம் பயன்படுத்திவருவது தெரிந்துள்ளது.

விண்வெளி மூலம் ஒளிபரப்பாகும் ஒலி-ஒளி பரப்பு செய்திகள், வலைப்பின்னல்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்பால் பாதிக்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக, ஒளிபரப்பு ஸ்தா பனங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது என்ன சங்கடம் என்று தலையைப் பிய்த்துக் கொண்ட பெடரல் கொமுனிகேஸன் கமிஷன் கடந்த ஆண்டு ஒரு பரிசோதனை யை மேற்கொண்டது.

இந்த ஆய்வில் கம்பியில்லாத் தந்தி மூலம் தொடர்பு ஏற்படுத்தும் வலைப்பின்னல், டிஜிட்டல் வகையிலான ஒளிபரப்பை தருவிக்கும் தொலை பேசிப் பெட்டிகளை, முற்றாகச் செயல் இழக்கச் செய்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரு சாராருக்கும் சமரசம் காணும் வகையில் வானவெளியில் காணப்படும் வெள்ளை இடைவெளியை இனங் கண்டு அதனைப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கு வதற்கு உலகின் அதி சக்தி வாய்ந்த ஸ்தாபனங்களான Adatrum, Microsoft, Motorola, Philips electronics, Singapores institute for dofocomm என்பவற்றிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடைமுறைப்படுத்திய பரிசோதனைகள் மூலம் பயன்படுத்தப்படாத வெள்ளை இடைவெளியை கண்டு பிடிப்பதில் இரண்டு தடவைகள் தோல்வி கண்டுள்ளதை மைக்கிரோசொப்ட் ஸ்தாபனம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இதன் காரணமாக எப்.சி.சி யின் அனுமதியைப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த முயற்ச்சியில் நிச்சயம் வெற்றி கொள்வோம் என்று பிலிப்ஸ் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த கிரான் சல்லபலி என்ற மூத்த ஆய்வாளர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

யார் எந்தக் கூத்து ஆடினாலும் சரி, 2009ம் ஆண்டளவில் பெரிய திரைகளில் பவனி வருவோரும் டிஜிட்டல் ஒளிபரப்பைக் கண்டுகளிக்க இருக்கும் உலகளாவிய பொழுதுபோக்குபிரியர்களை ஏமாற்றிவிடாமல் இருக்க, வெள்ளை இடைவெளி விடை கொடுக்குமென நம்பலாம்.

### சுழலும் கட்டிடம்

விசித்திரமான எண்ணங்களும், விசித் திரமான விஞ்ஞானிகளும், பணக்கார நாடு களை பலியாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகாயத்தில் அதிக உயரத்தை எட்டிப்பிடிக்க கட்டிடங்களைக் கட்டிக்கொள்ள ஆசைப்படும் டுபாய், இன்னுமொரு புதிய முயற்சியில் இறங்கியுள்ளது. 2010ம் ஆண்டளவில் கட்டி முடிக்க இறங்கியிருக்கும், வானுயரந்த கட்டிடத் தொகுதியில் 80 வீடுகள் நிர்மானிக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 1355- 12317 சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்டதாக அமையவிருக்கிறது. இதில் உள்ள ஆச்சரிய மென்ன வெனில், ஓசையின் கட்டுப்பாட்டுக் கிணங்க இந்த வீடு ஒவ்வொன்றும் தானாகச் சுழன்று வருவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

கட்டிடத்தின் தொகுதியில் மாடிகள் ஒவ் வொன்றுக்குமிடையே பொருத்தப்பட்டுள்ள, மின் இயந்திரங்களின் மூலம் இந்த சுழற்சி நிகழ்வு ஏற்படுகிறது. ஒரு வீடு முழுவதாகச் சுழன்று வர ஒன்று முதல், மூன்று மணித் தியாலங்கள் அவகாசமெடுக்குமென இதன் கட்டிட நிர்மாண அமைப்பாளர் டொக்டர் டேவிட் பிஷர் கூறினார். இத்தாலியைச் சேர்ந்த இக்கட்டிடக் கலைஞர், இதே போன்ற கட்டிடங்கள் நியுயோர்க்கிலும் வேறு முக்கிய நகரங்களிலும் நிர்மானிக்க வரவேற்பு இருப்பதாகக் கூறியுள்ளார்.

700கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் இக்கட்டிடத் தொகுதியை அமைப்பதற்கு பணக்கார உலகம் காத்திருக்கும் வேளையில் மியான்மார் போன்ற இடங்களில் பிறந்த மக்கள் படுத்துறங்க இடமின்றி என்ன பாவம் செய்தனரோ?


MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

*We also Specialise in....*

- அகதி நிலை - ஆரம்ப முதல் இறுதி விண்ணப்பம்
- உயர்தரத் திறமை குடிவரவுத் திட்டம்
- ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரப் பிரதேச குடும்ப அங்கத்தவர் பதிவு.
- தொழில் முறை மற்றும் மாணவர் விசா விண்ணப்பம்
- அகதி நிலை மேன்முறையீடு
- ஐக்கிய இராச்சிய பிரஜாவுரிமை / தேசியம்
- வேலை செய்யும் விடுமுறை விண்ணப்பம்
- ஐக்கிய இராச்சிய/உள்வரவு அனுமதி/விசா விண்ணப்பம்
- வதிவிட உரிமை/நீண்டகாலம் (5,7,10,14) வருடங்கள் தங்கியுள்ளோர் விண்ணப்பம்
- தங்கியுள்ளோர் / உறவினர் விடுமுறை / வதிவிட விண்ணப்பம்
- விசா நீடிப்பு

**No Win – No Fee**

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

**European Court Appeals**
**100% success**

- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation
- Bankruptcy
- Divorce

**கடன் சுமையில் இருக்கிறீர்களா?**

உங்கள் வீட்டை வங்கி திரும்பப் பாரமெடுக்கும் துர்பாக்கிய நிலையில் உள்ளீர்களா? அதை வெற்றிகரமாகத் தடுக்கும் நிலையில் நாம் உள்ளோம்.

நீங்கள் கடன் சுமையால் அல்லல் படுகிறீர்களா? எங்களால் உங்களை கடன் சுமையிலிருந்து விடுவிக்கவும் வங்குரோத்திலிருந்து பாதுகாக்கவும் முடியும்.

கடன் காப்புறுதிப் பாதுபாப்புச் செய்திருந்தீர்கள் என்றால் வங்கியிலிருந்து உங்களால் பணம் கோர முடியும். **திரு தாகூ**டன் தொடர்பு கொள்ளுங்கள்..

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்

அனுபவமிக்க எங்கள் சட்ட நடவடிக்கைப் பிரிவு, சமூக, தொழில், விவாகப் பிரிவு போன்ற எல்லா வழக்குகளையுமே மகிழ்வுடன் நடாத்தி வெற்றியும் கண்டுள்ளார்கள்.

Is you house in danger of re-possession from your bank. We have been successful in stopping the re-possession.

**No Win – No Fee**
(subject to assessment) 99% success



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **0208 514 8188** Fax: **0208 514 8303**
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# சாதனை... சாதனை...

**சாத்திரி**
*(ஒரு பேப்பருக்காக)*

சாதனை, சாதனை. மாபெரும் உலக சாதனை இருநூறு மணித்தியாலங்கள் இடைவிடாது நடனமாடுகிறார். அடாது மழை பெய்தாலும் விடாது புயல் அடித்தாலும் கொழுத்தும் வெய்யிலடித்தாலும் கொண்ட கொள்கை மாறாது குறித்த நேரம்வரை ஆடி உலக சாதனையை நிலை நாட்டுவார். வாருங்கள் வந்து உங்கள் ஆதரவினை வாரி வழங்குங்கள்.

என்ன சாத்திரி இதுவரை எழுதிக் கிழிச்சது காணாதெண்டு இப்ப புசிசா ஆடிக் கிழிக்கபோறாராக்கும் அதுவும் உலக சாதனையாம் எண்டிற உங்கள் அனுதாபப் பார்வை விளங்கினாலும் இது நான் சாதனை நிகழ்த்தேல்லை இந்த அறிவிப்புக்கள் யாழில் எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் காரில் ஒரு ஸ்பீக்கரைக் கட்டி ஊர்ஊராய் சொல்லிக்கொண்டு திரிவினம்.

இந்த சாதனை விசயமும் குனியா மேனியா போலை ஒரு வியாதிமாதிரி பரவி ஊருக்கு ஒரு இளைஞராவது சாதனை நிகழ்த்தப் போறன் எண்டு வெளிக்கிட்ட காலம்.

யாழ்குடாவிலை இந்த சாதனை நிகழ்த்திறதை தொடக்கி வைத்தவர் என்று பார்த்தால் வல்வெட்டித்துறையை சேர்ந்த ஆனந்தன் என்பவர் 1975ம் ஆண்டு மன்னாரிலிருந்து பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவின் தமிழ்நாட்டு தனுஸ்கோடி கரையைத் தொட்டு மீண்டும் மன்னாரை வந்தடைந்து ஒரு சாதனையை நிகழ்த்தினார்.

அதுமட்டுமில்லாமல் தொடர்ந்து வெவ்வேறு சாதனைகள் என்று மொத்தமாக ஏழு சாதனைகளை செய்து உலக சாதனைப் புத்தகமான கின்னசில் இடம் பிடித்தார்.

கடைசியாய் பிரான்ஸ் இங்கிலாந்துக்கிடையிலான கால்வாயை கடந்து சாதனை செய்ய முற்பட்ட பொழுது அந்தச் சாதனையாளர் இறந்து போனார்.

இந்தச் சாதனையாளன் தொடக்கி வைத்ததுதான் பிறகு ஊருக்கொருத்தராய் சாதனை செய்யிறம் எண்டு வெளிக்கிட்டவை. தொடர்ந்துகைதட்டி சாதனை, தொடர்ந்துநடனமாடி சாதனை, சைக்கிளோட்டிறது.தலைகீழாய் நடக்கிறது என்று ஆளாளுக்கு வெளிக்கிட்டிச்சினம். ஆனால் மப்பிலை தலைகீழாய் நடந்து சாதனை செய்தவையளும் இருக்கினம். ஆனால் அதெல்லாம் கின்னசிலை சேர்க்க மாட்டாங்கள்.

சரி ஆனந்தனுக்கு அடுத்தபடியாய் கனக்க சாதனை செய்ய வெளிக்கிட்டவர் எண்டு பாத்தால்.யாழ்ப்பாணம் பொம்மை வெளியை சேந்த நசீர் எண்டிற தமிழ் முஸ்லிம் ஒருத்தர். இவர் யாழ்ப்பாணம் முத்தவெளியிலை ஒரு கண்ணாடிக் கூட்டுக்குள்ளை பல விசப் பாம்புகளோடை இருந்து சாதனை செய்யிறாராம் எண்டு கேள்விப்பட்டு நானும் சைக்கிளை எடுத்து மிதிச்சுக்கொண்டு முத்தவெளிக்கு ஓடிப்போய் பாத்தன்.

ஒரு கண்ணாடிக் கூட்டுக்குள்ளை சில பாம்புகள் பாவம் அடிச்ச கோர வெய்யில் வெக்கை தாங்காமல் சரியான சாப்பாடும் இல்லைப் போலை மூலைக்கு ஒண்டாய் சுருண்டு போய் கிடந்திதுகள் நடுவிலை நசீர் ஒரு கதிரையை போட்டிட்டு அவரும் வெக்கை தாங்க ஏலாமல் ஒரு விசிறியாலை விசிக்கினபடி இருந்தார்.

நசீரும் ஏதோ பெரிய அனகொண்டா மாதிரி மலைப்பாம்புகளை கழுத்திலை சுத்திக் கொண்டுநாலைஞ்சு நாகபாம்பு அவரைச்சுத்தி படமெடுத்தபடி நிக்குமெண்டு நினைச்சு ஓடிப் போன எனக்கு ஏமாற்றம்தான். ஆனாலும் படமெடுத்தவை அது பாம்பு இல்லை யாழ்ப்பாண ஈழநாடு பத்திரிகையிலையிருந்து வந்த படப்பிடிப்பாளர். படமெடுத்து அது அடுத்தநாள் பேப்பரிலை செய்தியாவும் வந்தது.

### "இவன் ஏற்கனவே பித்தம் பிடிச்ச ஆள் மாதிரி இதுக்குள்ளை கச்சானை திண்டு இன்னும் பித்தம் தலைக்கேறி விசராக்கப் போகுது"

அடுத்தாய் ஒருநாள் றோட்டாலை காரிலை ஸ்பீக்கரை கட்டி சாதனை உலகசாதனை சங்கானையில் அரைப்பனை உயரத்தில் அந்தரத்தில் ஆடி சாதனை செய்கிறார் வாருங்கள் வந்து பாருங்கள் எண்டு ஒருத்தர் அலறிக் கொண்டு போனார். சங்கானையிலை அரைப் பனையிலை ஆடினால் அது சங்கானை சாதனையல்லோ இவரென்ன உலகசாதனையெண்டுறார்.சிலநேரம் ஆடுறவருக்கு சங்கானைதான் உலகமோ? எதுக்கும் ஒருக்கால் போய் பாப்பம் எண்டு நினைச்சு சங்கானைக்கு சைக்கிளை மிதிச்சன் சங்கானை பிள்ளைச்சுண்டு மைதானத்தடியிலை பாட்டு கேட்டிது.

அங்கைதான் உலகசாதனை நடக்குதாக்கும் எண்டு நினைச்சு உள்ளை போனால் ஒரு பனையை அரைவாசியளவில் தறித்து அதிலை இரண்டு ஸ்பீக்கர் கட்டி எம்.ஜி.ஆரின் வெற்றிய நாளை சரித்திரம் சொல்லும் எண்டு பாட்டுபோய்க்கொண்டிருக்க அதுக்கும்மேலை ஒரு பலகையை மேடைபோல பொருத்தி அதுக்குமேலை ஒருத்தர் எம்.ஜி.ஆரின் பாட்டுக்கு கையை காலை ஆட்டினபடி நிண்டார்.

அதை ஒரு பெரிய கூட்டமே ஆவெண்டு அண்ணாந்து பாத்தபடி நிண்டிச்சினம்.நானும் கொஞ்ச நேரம் அண்ணாந்து பாத்து கழுத்து நோவெடுக்க கீழை குனிஞ்சு பக்கத்திலை நிண்ட ஒருத்தரிட்டை இவர் எத்தினை மணித்தியலம் ஆடப்போறார் எண்டு கேட்டன். அதுக்கு அவரும் தம்பி வெளிநாடு ஒண்டிலை யாரோ எட்டுநாள் ஆடிசாதனை செய்தவங்களாம். அதை முறியடிக்க இவர் பத்துநாள் ஆடுறதாய் முடிவெடுத்திருக்கிறார் எண்டார். வெளிநாடெண்டால் எந்த நாடு எண்டு திருப்பிக் கேட்டன் அவரும் தாடையைசொறிஞ்சபடி ரஸ்யாவே அமெரிக்காவே சரியாத் தெரியேல்லை ஆனால் ஆரோ ஆடினவங்களாம் எண்டார்.

ஆனால் அந்த நேரம் எனக்கு உந்த உலக அறிவு பெரிசா இருக்காததாலை அமெரிக்காவிலையோ ரஸ்யாவிலையோ ஒருத்தரும் அரைப் பனையிலை ஆடினதாய் நான் கேள்விப்படேல்லை அதாலை சரி நம்ம ஊர்காரன் ஒருத்தன் அந்தச் சாதனையை முறியடிக்கப்போறான் எண்டுசந்தோசப்பட்டுக் கொண்டிருக்க பக்கத்திலை இருந்த வேறை இரண்டு பேர் அண்ணாந்து பாத்தபடி இன்னொரு ஆராச்சியிலை ஈடுபட்டுக் கொண்டிருந்திச்சினம்.

அது என்னவெண்டால் பனையை முழுதாய் தறிக்கிறதெண்டால் சுலபம். ஆனால் பாதியிலை தறிச்சிருக்கிறாங்கள் உண்மையிலை கெட்டிக்காரர். இதையும் உலக சாதனையிலை சேர்க்கவேணுமெண்டு கதைச்சுக் கொண்டு நிண்டிச்சினம்.

எனக்கும் அது ஆச்சரியமாத்தான் இருந்தது அப்பதான் அடிப்பனையை உத்துப் பாத்தன். பாதியாய் தறிச்ச பனங்குத்தியை கீழை கிடங்கு கிண்டி தாட்டிருந்தது. ஆடுறவர் சாப்பிட மட்டும் நேரமெடுத்து உண்மையிலேயே தொடர்ந்து பத்துநாள் ஆடுவாரா இல்லாட்டி இரவு பன்னிரண்டு மணியளவிலை பாட்டையும் நிப்பாட்டிப்போட்டு எல்லாரும் படுக்கப் போனால் பிறகு இவரும் பனையாலை இறங்கி படுக்கப் போடுவாராஎண்டுயாரையாவதுகேக்கநினைச்சாலும் எதுக்கு அடுத்த ஊருக்கு வந்து அநியாயமாய் அடிவாங்குவானெண்டு நினைச்சுக் கொண்டு அங்கை ஆவெண்டு அண்ணாந்து பாத்துக் கொண்டிருந்த சனங்களும் அதை பாக்க பக்கத்து ஊரிலை இருந்து வேலை மினக்கெட்டு போன என்னை மாதிரி ஆக்கள் இருக்கும் மட்டும் இப்பிடி சோதனையான சாதனையள் நடக்கத்தான் செய்யுமெண்டு நினைச்சபடி ஊருக்கு வந்திட்டன்.

ஒருநாள் நாங்கள் வழமை போலை கோயிலடி மண்டபத்திலை கச்சான் கடலை வாங்கிசாப்பிட்டபடி அரட்டையடிச்சுக் கொண்டிருக்கேக்குள்ளை ஏதோ கதையிலை எங்களுக்குள்ளை ஒரு பந்தயம் வந்திட்டுது அது என்ன வெண்டால் யார் அதிகளவான கச்சான் கடலை சாப்பிடுறது எண்டதுதான் பந்தயம்.

அதிலை எனக்கும் இன்னொரு நண்பனுக்குமிடையிலை போட்டிவந்திட்டுது நண்பன் தான் 3 கிலோ கச்சான் சாப்பிடுவன் எண்டான் நான் ஏதோ ஒரு வேகத்திலை 5 கிலோ சாப்பிடுவன் எண்டிட்டன். உடனையே எல்லாரும் சேர்ந்து என்னை பப்பாவிலை ஏத்தி விட்டு அப்பிடி நான் 5 கிலோ கச்சான் சாப்பிட்டு சாதனை செய்தால் நாங்கள் மாலை நேரத்திலை மருதடிச்சந்தியிலை இருக்கிற குமார் கடையிலை குடிக்கிற பிளேன்ரீயும் வடையும் ஒரு மாதத்துக்கு எனக்கான செலவு தங்களுடையது எண்டு முடிவெடுத்திட்டாங்கள்.

உடைனையே சந்தர்ப்பம் காத்திருந்த என்ரை உயிர் நண்பன் இருள்அழகன் எல்லாரிட்டையும் காசு சேர்த்து ஓடிப்போய் கச்சான் கடைக்காறியிட்டை விசயத்தை சொல்லி 5 கிலோ கச்சானை நிறுத்துத் தரச்சொல்லி கேட்கவும் கச்சான் கடைக்காறிக்கு ஒரே புழுகம் இன்னும் தேவையெண்டால் கேளுங்கோ உடனை சுடச்சுட வறுத்துத்தாறன் எண்டு சொல்லி 5 கிலோ கச்சானை நிறுத்து மொத்தமாய் கச்சான் வாங்கினதுக்காக மேலதிகமாய் இலவசமாய் இன்னும் இரண்டு கை கச்சானையும் அள்ளிப் போட்டு குடுத்து விட்டாள்.

இருள் அழகன் கச்சானை கொண்டுவந்து எனக்கு முன்னால் கொட்டினதுமே எனக்கு அடிவயித்திலை ஒரு இலேசான மாற்றம் தெரிஞ்சிது. ஒரு மாதிரி சமாளிச்சுக்கொண்டு ஒரு நிபந்தனையை வைச்சன் அதாவது கச்சான் சாப்பிட்டு முடிக்கும் வரைக்கும் எனக்கு பிளேன்சோடா வாங்கித் தரவேணும் இதுதான் நிபந்தனை அதுக்கும் எல்லாரும் தலையாட்ட எல்லாரும் கச்சானை உடைச்சு உள்ளங்கையிலை வைச்சு தேச்சு தோலை ஊதி ஊதி என்ரை கையிலை தர பிளேன் சோடாவை குடிச்சபடி என்ரை கச்சான் தின்னும் உலக சாதனை ஆரம்பமானது.

கோயிலுக்கு கும்பிட வந்தவையள் கூட கொஞ்ச நேரம் மடத்தடியிலை நிண்டு என்ரை உலக சாதனையை ரசிச்சு பாத்திட்டு" இவன் ஏற்கனவே பித்தம் பிடிச்ச ஆள் மாதிரி இதுக்குள்ளை கச்சானை திண்டு இன்னும் பித்தம் தலைக்கேறி விசராக்கப்போகுது" எண்டு வாயார வாழ்த்திவிட்டுப்போனார்கள்.

இரண்டு கிலோ தாண்டியதுமே வயித்துக்குள்ளை வாயுக்குமிழிகள் ஓடிவிளையாட ஆரம்பிச்சது. மூன்றாவது கிலோவைத் தொட்டதும் முட்டி மோதிக்கொண்டிருந்த வாயுபகவான் வழிகிடைத்த இடத்தால் டர்ர்ர்ர்... டர்ர்ர்ர்...என்று வெளியேறத்தொடங்கவே நானும் காற்றோட்டமாய் வயற்கரைப்பக்கமாய் சரிந்திருந்தபடியே மிச்ச சாதனையை தொடர்ந்தேன்.

பிளேன் சோடா குடித்த வாயு வாயால் ஏவறையாய்(ஏப்பமாய்) வெளியேறிக் கொண்டிருந்தது. நாலாவது கிலோவை கஸ்ரப்பட்டு அனுப்பிக்கொண்டிருக்க வயிற்ரை பிரட்டி சத்தி(வாந்தி) வாற மாதிரி இருக்கவே. நண்பர்களிடம் போட்டி விதியில் சின்ன மாற்றம் செய்து சத்தி எடுத்திட்டு தொடந்து சாப்பிடலாமா எண்டு கேட்டுப் பாத்தன்.

அப்பிடியெல்லாம் செய்ய முடியாது அப்பிடிச் செய்தால் பந்தயத்தில் தோத்துப் போனதாக தீர்மானம் கொண்டு வருவோமெண்டு மிரட்டினார்கள். இவங்கடை பெரிய ஐ.நா. சபைத் தீர்மானம் என்று நினைத்தபடி அடுத்த பிடி கடலையை வாயிலை போட்டேன் அவ்வளவுதான் உவ்வாய்ய்ய்க்........என்டு ஏதோ அணை உடைஞ்சு வெள்ளம் வந்த மாதிரி சத்தி வந்து அந்த வெள்ளத்திலை எனக்கு முன்னாலை இருந்த நண்பர்கள் எல்லாரும் நனைஞ்சு போச்சினம்.

பிறகென்ன என்னைத் திட்டியபடியே கோயில் கிணத்திலை எல்லாரும் குளிச்சிட்டு மடத்தையும் கழுவிசுத்தம் செய்துபோட்டு போட்டினம்.

அண்டைக்கு கடலை சாப்பிடுற போட்டியிலை தோத்துப்போனாலும் இண்டைக்கு வெளிநாட்டிலை இருந்தபடி கணணியிலை கடலை போடுறதிலை உலக சாதனை நிகழ்த்தியே தீருவது எண்டு உறுதியாய் இருக்கிறான்

IRO
Immigration – குடிவரவு

கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத் துறையில் முன்னணி நிறுவனம்

விபரங்கட்கு: திரு குலேந்திரன்
திரு ராம்
திரு சூரியகுமாரன்

Tel: 020 8682 4494
Mob: 07976 759 725
07939 261 540
07810 848 017

உங்கள் சகல விதமான
- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

இது தவிர
- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

OISC

முன் அனுமதி பெற்று வரவும். அலுவலக நேரம்
11.00 – 17:30 திங்கள் முதல் வெள்ளி

1083 Garratt Lane, Tooting,
London, SW17 0LN

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)



# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

## SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

(Charity No: 1014409)

**5, Chapel Road, West Ealing, London, W13 9AE, UK. (+44) 208 810 0835, (+44) 208 840 0485**

(HANDS THAT HELP ARE HOLIER THAN LIPS THAT PRAY)

# SPONSOR A CHILD



# £15 PER MONTH

*ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்!*
*அவர்களுக்கு வாழ வழி காட்டுவோம்!*
*அவர்களுக்குப் படிப்பறிவித்து இருளகற்றுவோம்.*
*அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.*
*அவர்களை உயர்த்தும் ஏணிப் படியாக*
*எங்களை அர்ப்பணிப்போம்.*

## காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் பராமரிகப்படும் இல்லங்களின் விபரம்

1. இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் – பதுளை
2. இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் – மன்னார்
3. இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இல்லம் – திருப்பழுகாமம்
4. திலகவதியார் இல்லம் – மட்டக்களப்பு
5. திலகவதியார் இல்லம் – செட்டிப்பாளையம்
6. அன்பு இல்லம் – திருகோணமலை
7. விபுலானந்தர் இல்லம் – மட்டக்களப்பு
8. அம்மன் மகளீர் இல்லம் – அம்பாறை
9. இனிய வாழ்வில்லம் – புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
10. சிவானநந்த தபோவனம் – திருகோணமலை
11. சைவ வித்தியா விருத்திச் சங்கம் – யாழ்ப்பாணம்
12. அன்பகம் – வவுனியா
13. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் – வவுனியா
14. ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் – வவுனியா

மேற் குறிப்பிட்ட இல்லங்களில் உங்களின் பேருதவியினால் 350 **பிள்ளைகள்** பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் இன்னும் ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன.

அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவ வேண்டுமென வினயமாகக் வேண்டி நிற்கின்றோம். கடந்த ஓராண்டில் (சித்திரை 2007 – பங்குனி 2008) **"காக்கும் கரங்கள்"** திட்டத்திற்கு £60,000 பவுண்களும் தையல் பயிற்சி நிலையங்கள், மற்றும் கணினிப் பயிற்சி நிலையங்கள் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கு £40,000 பவுண்களும் அனுப்பப்பட்டு உள்ளன.

*– ஆலய நிர்வாக சபையினர்*

**கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.**



அன்பகம்
வவுனியா



அன்பு இல்லம்
திருகோணமலை



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி [illegible] (Boys)
வவுனியா

email: info@ammanealing.com
www.ammanealing.com

மேலதிக விபரங்களுக்கு ஆலய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: **020 8810 0835**

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் மகோற்சவம்

## Annual Mahostsava Festival 2008 details

**Pooja will be performed everyday from 18.07.2008 on following times during the festival period.**

### Morning

| | |
|---|---|
| 8.30 | Abishekam |
| 10.15 | Pooja |
| 10.45 | Sthampa Pooja |
| 11.30 | Vasantha Mandapa Pooja |
| 1.00 | Vibuthi Prasadham |

### Evening

| | |
|---|---|
| 5.30 | Evening Pooja |
| 6.00 | Sthampa Pooja |
| 6.30 | Bajana / Specaches |
| 7.15 | Vasantha Mandapa Pooja |
| 8.00 | Swamy Ezhuntharulal |
| 9.35 | Vibuthi Prasadham |
| 10.30 | Evening Festival Concludes |

| | | | |
|---|---|---|---|
| **1st Day** | **18/07/2008** | **Friday** | ***Flag Hosting*** |
| 2nd Day | 19/07/2008 | *Saturday* | Raja Rajeswari appearance |
| 3rd Day | 20/07/2008 | *Sunday* | Kanaga Dhara Lakshmi appearance |
| 4th Day | 21/07/2008 | *Monday* | Nagapooshani appearance |
| 5th Day | 22/07/2008 | *Tuesday* | Meenadshi Ampal appearance |
| 6th Day | 23/07/2008 | *Wednesday* | Saraswathy Vidhya appearance |
| 7th Day | 24/07/2008 | *Thursday* | Artha Nareeswar appearance |
| 8th Day | 25/07/2008 | *Friday* | Kailaya Dharisana appearance |
| 9th Day | 26/07/2008 | *Saturday* | Anna poornampika appearance |
| 10th Day | 27/07/2008 | *Sunday* | Abirami Dharisana appearance |
| 11th Day | 28/07/2008 | *Monday* | Shaupakiyambika appearance |
| 12th Day | 29/07/2008 | *Tuesday* | Kamadshi appearance |
| 13th Day | 30/07/2008 | *Wednesday* | Anantha Sayana appearance |
| 14th Day | 31/07/2008 | *Thursday* | Pushpaka Vimana appearance |
| 15th Day | 01/08/2008 | *Friday* | Kethara Gowri Ampaal appearance |
| 16th Day | 02/08/2008 | *Saturday* | Vasanthotsava appearance |
| 17th Day | 03/08/2008 | *Sunday* | Pakthankraga appearance |
| 18th Day | 04/08/2008 | *Monday* | Santhanabakya Lukshmi appearance |
| 19th Day | 05/08/2008 | *Tuesday* | Jothi Mangala appearance |
| 20th Day | 06/08/2008 | *Wednesday* | Om Gara Ruba Dharsana appearance |
| 21st Day | 07/08/2008 | *Thursday* | Maha Dhurga Dharsana appearance |
| 22nd Day | 08/08/2008 | *Friday* | Hunting Festival appearance |
| 23rd Day | 09/08/2008 | *Saturday* | Sakopura Dharsana appearance |
| **24th Day** | **10/08/2008** | **Sunday** | **Chariot Festival** |
| 25th Day | 11/08/2008 | *Monday* | *Theerththa Vaari appearance* |
| 26th Day | 12/08/2008 | *Tuesday* | Sangabishekam - Sakasdhira (1008) Poonkavanam Festival |
| 27th Day | 13/08/2008 | *Wednesday* | Vairavar Madai |

Dear Devotes,

London Ealing Shree Kanagathurkai Amman Temple Annual Mahostsava Festival will be Celebrated for 25 days from 18.07.2008 Festival starts with Flag Hosting on 18th July 2008.

Devotes are expected to strictly adhere to Saiva principles during the festival Season, and abide by the Temple rules.

Please provide Flowers, Milk and Coconut waters before Abishekam.

***Sponsors for the Festival, Executive Committee, Trustees.***

## விழா விபரம் (18.07.2008 முதல் தினமும் காலை மாலை இந் நேரங்களின் படி கிரியைகள் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 01ம் நாள் | 18.07.2008 | (வெள்ளி) | கொடியேற்றக் காட்சி |
| 02ம் நாள் | 19.07.2008 | (சனி) | ராஜ ராஜேஸ்வரி அருட் காட்சி |
| 03ம் நாள் | 20.07.2008 | (ஞாயிறு) | கனக தாரா லட்சுமி அருட் காட்சி |
| 04ம் நாள் | 21.07.2008 | (திங்கள்) | நாகபூசணி அருட் காட்சி |
| 05ம் நாள் | 22.07.2008 | (செவ்வாய்) | மீனாட்சிஅம்பாள் அருட் காட்சி |
| 06ம் நாள் | 23.07.2008 | (புதன்) | சரஸ்வதி வித்யா அருட் காட்சி |
| 07ம் நாள் | 24.07.2008 | (வியாழன்) | அர்த்த நாரீஸ்வர அருட் காட்சி |
| 08ம் நாள் | 25.07.2008 | (வெள்ளி) | கைலாய தரிசன அருட் காட்சி |
| 09ம் நாள் | 26.07.2008 | (சனி) | அன்ன பூர்ணாம்பிகை அருட் காட்சி |
| 10ம் நாள் | 27.07.2008 | (ஞாயிறு) | அபிராமி தரிசன அருட் காட்சி |
| 11ம் நாள் | 28.07.2008 | (திங்கள்) | சௌபாக்கியாம்பிகை அருட் காட்சி |
| 12ம் நாள் | 29.07.2008 | (செவ்வாய்) | காமாட்சி அருட் காட்சி |
| 13ம் நாள் | 30.07.2008 | (புதன்) | அனந்த சயன அருட் காட்சி |
| 14ம் நாள் | 31.07.2008 | (வியாழன்) | புஸ்பக விமான அருட் காட்சி |
| 15ம் நாள் | 01.08.2008 | (வெள்ளி) | கேதார கௌரி அம்பாள் அருட் காட்சி |
| 16ம் நாள் | 02.08.2008 | (சனி) | வசந்தோற்சவ அருட் காட்சி |
| 17ம் நாள் | 03.08.2008 | (ஞாயிறு) | பக்தானுக்கிரக அருட் காட்சி |
| 18ம் நாள் | 04.08.2008 | (திங்கள்) | சந்தானபாக்கிய லட்சுமி அருட் காட்சி |
| 19ம் நாள் | 05.08.2008 | (செவ்வாய்) | ஜோதி மங்கள அருட் காட்சி |
| 20ம் நாள் | 06.08.2008 | (புதன்) | ஓம் கார ரூப தர்சன அருட் காட்சி |
| 21ம் நாள் | 07.08.2008 | (வியாழன்) | மகாதுர்காதர்சன அருட் காட்சி |
| 22ம் நாள் | 08.08.2008 | (வெள்ளி) | வேட்டைத் திருவிழா அருட் காட்சி |
| 23ம் நாள் | 09.08.2008 | (சனி) | சகோபுர தர்சன அருட் காட்சி (சப்பரம்) |
| 24ம் நாள் | 10.08.2008 | (ஞாயிறு) | இரதோற்சவ விழா (தேர்) |
| 25ம் நாள் | 11.08.2008 | (திங்கள்) | தீர்த்த வாரி அருட் காட்சி |
| 26ம் நாள் | 12.08.2008 | (செவ்வாய்) | சங்காபிசேகம் – சகஸ்த்திர (1008) பூங்காவனத் திருவிழா. |
| 27ம் நாள் | 13.08.2008 | (புதன்) | வைரவர் மடை |

### அம்பிகை அடியார்களே!

லண்டன் மாநகரில் ஈலிங் பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அன்னை 'கனக துர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான சர்வதாரி வருடம் ஆடி மாதம் 03ம் நாள் (18.07.2008) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அன்னை 'கனகதுர்க்கை அம்மன் அகிலமெல்லாம் வாழும் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் தலமாக ஈலிங் பதியமர்ந்து மனம் பக்குவமடைவதற்கு *சாதனமாக திகழ்கின்றாள்.*

திருத்தலங்களில் நித்யம், நைமித்திக பூஜையாக இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவது மகோற்சவங்கள். அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்கு கொண்டு தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பூஜைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிசேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக.

அனைவரும் வருக!! அன்னையின் அருள் பெறுக!!

**விழா உபயகாரர்களுடன், நிருவாக சபையினரும் அறங்காவலரும்.**

## Notice:

**EALING AMMAN TEMPLE CHARIOT FESTIVAL; 10th Aug. 2008.**

As the neighbours faced many difficulties during the last year's chariot festival day we have to consider not to cause any difficulties to them this year. We the trustees and executive committee members have taken few steps to avoid any inconveniences to the neighbours. this year and the forthcoming years.

We kindly request you the devotees not to leave your slippers/shoes in the neighbours' gardens or in front of their residences. Please leave your shoes/slippers in your vehicles.

Please do not throw or leave any rubbish/litter on the streets or in their gardens as this happened last year.

This year plenty of toilet facilities will be provided in the temple, temple car park adjacent to the temple and in the alley way next to the temple and it will be sign posted.

Devotees are kindly requested to park their vehicles in the car parks, Ealing area car parks details are displayed in the temple notice board or kindly use the public transports if possible.

No street trading will be allowed this year due to high number of devotees are increasing every year.

Please keep the noise down during the festival time and follow the above. mentioned request as well during the festival time.

PLEASE HELP US TO HELP THE NEIGHBOURS TO HAVE A PEACEFUL QUITE CHARIOT FESTIVAL THIS YEAR AND IN THE FUTURE.

## அறிவித்தல்

### ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழா - 10.08.2008

சென்ற வருடத் தேர்த் திருவிழாவின் போது அயலவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக இவ்வருடம் தேர்த் திருவிழாவின் போது அவர்களுக்கு இடையூறுகள் விளையாமல் இருப்பதற்காக கீழ்க்காணும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன:

அடியார்களாகிய நீங்கள் தயவுசெய்து உங்கள் பாதணிகளை உங்கள் வாகனங்களிலேயே விட்டு வரவும். அயலவர்களின் முன் தோட்டத்திலோ அவர்களின் வீட்டில் முன் பக்கத்திலோ விட வேண்டாம் எனத் தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றோம்.

சென்ற வருடம் அயலவர்களின் தோட்டங்களிலும் வீதிகளிலும் சாப்பாட்டு தட்டுகள் வீசப்பட்டு இருந்தமை மிகவும் வருத்தத்திற்குரியது. எனவே இம்முறை அவ்வாறு செய்யாது அதற்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூடைகளில் போடுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வருடம் தேவையான அளவு மலசலகூடங்கள் ஆலய மலசல கூடத்திற்கு முன்பாகவும், ஆலய வாகனத் தரிப்பிடத்திலும், ஆலயத்தின் வலது புறத்தில் இருக்கும் நடைபாதையிலும் அமைக்கப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

ஆலயத் தேர்த் திருவிழாவிற்கு வருகை தரும் அடியார்களாகிய நீங்கள் உங்கள் வாகனங்களை ஈலிங்கில் உள்ள வாகனத் தரிப்பிடங்களில் விட்டுவரவும். வாகனத் தரிப்பிடங்களின் விபரங்கள் அறிவிப்புப் பலகையில் போடப்பட்டுள்ளன. கூடுமானவரை உங்களின் வசதிகளைப் பொறுத்து பொதுப் போக்குவரவுச் சேவையினைப் (Public Transport Service) பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அடியார்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்துச் செல்வதால் இவ்வருடம் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது;

மேற்குறிப்பிட்ட வேண்டுகோள்களை தயவு செய்து தேர்த்திருவிழா உற்சவத்தன்று கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாது திருவிழாக்காலங்களிலும் கடைப்பிடிக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம். மேலும் அயலவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தா வண்ணம் அதிகளவான இரைச்சலை ஏற்படுத்த வேண்டாம் எனவும் வேண்டிக் கொள்கின்றோம்.

**நன்றி**

# இன்னுமொரு தாஜ்மஹால்

**அ.மயூரன்**
*ஒரு பேப்பருக்காக*


மாசோலியத்தின் இன்றைய நிலை

'பெண்ணுக்கு தாஜ்மகால் கட்டிவைச்சாண்டா, எவளாச்சும் ஒரு செங்கல் நட்டு வைச்சாளா' என்னும் பா.விஜயின் வரிகளை மீண்டும் ஒருமுறை மீளாய்வு செய்யவேண்டும் போல் உள்ளது. ஓர் உன்மையான காதலன் தன் காதலியை இழந்துவிட்டால் அவளுக்கு நினைவுச்சின்னம் எழுப்புவது பற்றிக் கோள்விப்பட்டிருக்கின்றோம். அதற்கு தாஜ்மகால் ஒரு சான்று. ஆனால் ஒரு காதலி கணவனின் மறைவுக்குப்பின் அவன் நினைவாய் நினைவுச்சின்னம் எழுப்பியுள்ளாள் என்றால் அது விந்தையானது.

கி.மு 623 இல் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது கலிகர்னேசஸ் என்னும் நகரமாகும். இது தற்போதைய துருக்கியின் துறைமுக நகரமான பொட்ரம் ஆகும். இந்த நகரத்தை கி.மு.377 இல் அதை கெகற்ரோம்நஸ் ஒவ் மிலஸ் என்னும் மன்னன் ஆண்டு வந்தான்.

அவன் இறந்து போக அவனது மகனான மாசோலஸ் கெக்ற்ரோம்நஸ் ஆட்சிப் பொறுப்பினைக் கைப்பற்றினான். இவன் ஆட்சிப்பீடம் ஏறியபின் தனது ஆட்சி நிலப்பரப்பை நெய்ற்போரிங் நகரம், மற்றும் அனரோலியா ஆகிய இடங்கள் வரை விஸ்தரித்தான். அவனுக்கு ஆட்டிமிசியா என்னும் தங்கை ஒருத்தி இருந்தாள். அவள் ஆணழகனான மாசோலஸ் மன்னனைக் காதலித்து கரம்பிடித்தாள். அந்தக்காலத்தில் உடன்பிறந்தவர்களை மணப்பது தவறாகத் தெரிவதில்லை. தங்களது உடமைகள் தமது வம்சாவழியினருக்குக் கிடைக்கவே இவ்வாறு செய்தனர். ஆர்ட்டிமிசியா. காதலுக்கு இலக்கணமாய் வாழ்ந்தவள். திருமணத்தின் பின்னும் அவள் தன் கணவன் மேல் கொண்ட பாசத்தையிட்டு உலகமே வியந்தது. இவ்வாறு இருவரும் ஆட்சியை 24 ஆண்டுகள் ஆண்டனர். *(கி.மு.377 - கி.மு.353)*

யார் கண்பட்டதோ தெரியவில்லை. மாசோலஸ் மன்னன் திடீரென கி.மு.353 இல் மரணமடைந்தான். ஆர்ட்டிமிசியா கணவனின் பிரிவைத் தாங்காது துவண்டாள் துடித்தாள் இருந்தும் தான் தளர்ந்துவிட்டால் நாட்டை யார் ஆள்வார்கள் எனத் தன்னைத் தேற்றிக்கொண்டு கணவனுக்குப்பதில் நாட்டை ஆளத் தொடங்கினாள். இதனால் கெகற்ரோம்நஸ் நகரம் ஆர்ட்டிமிசியா நாடு எனப்பட்டது. இருந்தும் அவள் கணவன் மீது கொண்ட பற்றினால் அவனது முகத்தை அவளால் மறக்க முடியவில்லை. கணவனின் நினைவிலிருந்து விடுபட எவ்வளவோ முயன்றும் தோல்வி கண்டாள். முடிவில் ஆர்ட்டிமிசியா தன் அருமைக் கணவனுக்காக நினைவுச்சின்னம் கட்ட முடிவு செய்தாள். ஆனால் இந்த நினைவுச்சின்னம் உலகில் உள்ள நினைவுச் சின்னங்களை விட பெரிதாக இருக்க வேண்டும் என நினைத்தாள்.

இன்றைய துருக்கியின் துறைமுகப்பட்டினமான பொட்ரம் தான் அன்றைய ஆர்ட்டிமிசியா நாட்டின் தலைநகராக விளங்கியது. அந்தப்பட்டினத்திலேயே கணவனின் நினைவுச் சின்னத்தையும் கட்ட ஆர்ட்டிமிசியா தீர்மானித்தாள். இதற்காக கிரேக்க நாட்டிலேயே தலை சிறந்த சிற்பி எனப் போற்றப்பட்ட ஸ்கோபாஸ் ஒவ் பரஸ், என்பவன் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவழைத்து நினைவுச்சின்னம் அமைக்கும் பணியை தொடங்கினாள். அச்சிற்பி தனக்குத் துணையாக வேறு பலரையும் அமர்த்திப் பணியைத் தொடங்கினான்.

120 அடி அகலமும் 100அடி நீளமும், 145 அடி உயரமும், உடைய நினைவுச்சின்னம் பளிங்கினால் அமைக்கப்பட்டது. அந்நினைவுச்சின்னத்தின் நான்கு முகப்புக்களை லியோசர்ஸ், பிரையக்ஸ், ஸ்கோப்பஸ் ஒவ் பரஸ், அத்துடன் ரிமோதயஸ் ஆகியோர் கட்டினர். அம்முகப்புக்களுக்கு மேல் வானளாவிய உயரத்தில் 36 தூண்கள் அமைக்கப்பட்டு அதற்கப்பால் 24 அடுக்குகள் கொண்ட பிரமிட் வடிவிலான விதானம் அமைக்கப்பட்டது. அவ்விதம் அமைக்கப்பட்ட கல்லறைக்குள் மாசோலஸ் மன்னனின் உருவச்சிலை வடிக்கப்பட்டது. அத்துடன் கல்லறைக்குச் செல்ல அகலமான இருபது படிகள் அமைக்கப்பட்டன.

இவ்விதமாக மாசோலஸின் கல்லறை முழுமையடையும் தறுவாயில் எவரும் எதிர்பாராத விதமாக இராணி ஆர்டடிமிசியா மடிந்து போனாள். (கி.மு.351) இது தனது கணவன் இறந்து இரண்டுவருடங்களின் பின் ஆட்டிமிசியா இறந்தாள். இதனால் கணவன் மனைவி இருவருமே ஓர் இரதத்தில் அமர்ந்திருப்பது போல் சிலை வடித்து கல்லறையில் வைத்தனர். அந்தக் கல்லறைக்கு அவர்கள் மாசோலியம் (Mausoleum) எனப் பெயரிட்டனர். அந்த மாசோலஸ் கல்லறை இன்றைய தாஜ்மகாலைவிட உயர்ந்தது. தாஜ்மகால் 137அடி உயரமுடையது. ஆனால் மாசோலஸ் 145 அடி உயரமுடையது. இது உலக அதிசயங்களில் ஒன்றாகக் பல காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் துரதிஷ்ட வசமாக பல நினைவுச்சின்னங்களுக்கும் ஏற்பட்ட நிலை இந்த மாசோலியத்திற்கும் ஏற்பட்டது.

அதாவது கி.மு.334 அளவில் அலெக்சாண்டரின் படையெடுப்பாலும், அதன்பின்னர் கி.மு.62 மற்றும் 58 களில் கடற் கொள்ளைக்காரர்களின் அட்டுழியத்தாலும் இவ் மாசோலியம் சிதைவடையத் தொடங்கியது. அதன் பின்னர் 1404 இல் நிகழ்ந்த மிகப்பெரும் பூமியதிர்ச்சியினால் தன்னிலை தளர்ந்து தடுமாறி தரையில் வீழ்ந்து அடி மட்டம் மட்டும் எஞ்சியது. மாசோலியம். கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மல்டா நாட்டைச் சேர்ந்த நைற் ஒவ் சென்யோன்ஸ் தலமையிலான படைகள் இந்த மாசோலியத்தினைத் தகர்த்து அதன் கற்களைக் கொண்டு போட்ரம் நகரின் துறைமுகப் பாதுகாப்புக்கென போட்ரம் கோட்டையை 1494 இல் அமைத்தனர். இன்றும் இந்தக் கோட்டையின் சுவர்களில் இப்பளிங்குக் கற்களைக் காண முடிகிறது.

*1522 இல் துருக்கியர்கள் கலிகர்னேசஸ் நகரினை* முற்றுகையிட்டபோது காவலாளிகள் மாசோலியத்தைப் பாதுகாத்தனர். இதனால் இவ்விடம் பொட்ரம் என அழைக்கப்பட்டது. பின்னர் 1960 களில் பிரித்தானியாவைச் சேர்ந்த தொல்லியலாய்வாளர் சாள்ஸ் ரோமன் நியூட்டன் என்பவர் இப்பிரதேசத்தை ஆய்வுசெய்தார். இன்றும் பிரித்தானியா அருங்காட்சியகத்திலே இதன் முழுவிபரமும் அடங்கிய எச்சங்கள் காணப்படுகின்றன.

தன் கணவனை ஆழமாய் நேசித்த ஒரு காதலி. தன் காதலின் சிறப்பை உலகுக்கு உணர்த்தும் வகையில் கலையம்சத்துடன் அமைத்த மாசோலியம் இன்று இல்லை. இருந்தபோதும் ஒரு ஆணுக்காக பெண் ஒரு செங்கல் நட்டுவைத்தாளா என்கின்ற பாடல் வரிகளை இது பொய்யாக்கியுள்ளது. இது ஆண்களுக்காக பெண்கள் ஒரு கல்லைக்கூட நாட்டவில்லை. என்ற ஆண்களின் குற்றச்சாட்டிலிருந்து பெண்கள் விடுதலை பெற ஒரு வழியாக அமைந்துவிட்டது எனலாம்.

# விருந்தினர் வந்தால்...

## கரட் அல்வா



**தேவையாணப் பொருட்கள்**

கரட் - 2
சீனி - 3/4 கப்
நெய் - 1/4 கப்
பால் - ஒரு கப்
முந்திரிப்பருப்பு - 7
ஏலக்காய் - 3

**செய்முறை**

கேரட்டை துருவி வைத்துக் கொள்ளவும். முந்திரிப்பருப்பை இரண்டாக உடைத்துக் கொள்ளவும். ஏலக்காயை பொடி செய்துக் கொள்ளவும்.

ஒரு அடிகனமான பாத்திரத்தில் பாலை ஊற்றி அதில் கால் கப் தண்ணீர் ஊற்றி சுண்ட காய்ச்சி எடுத்துக் கொள்ளவும்.

பின்பு வாணலியில் 2 தேக்கரண்டி நெய் ஊற்றி காய்ந்ததும் இரண்டாக உடைத்த முந்திரியை போட்டு வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

அதே வாணலியில் துருவி வைத்திருக்கும் கரட்டை போட்டு ஒரு நிமிடம் வதக்கவும். தேவைப்பட்டால் ஒரு தேக்கரண்டி நெய் ஊற்றி வதக்கலாம்.

அதில் சுண்ட காய்ச்சி வைத்திருக்கும் பாலை ஊற்றி 8 நிமிடம் கிளறிக் கொண்டே இருக்கவும். கரட் வெந்து பால் வற்றும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும்.

அதன் பின்னர் பால் வற்றி நன்கு சுண்டியதும் அதில் சீனியை சேர்த்து நன்கு 3 நிமிடங்கள் கிளறவும். சீனி கரைந்து கெட்டியாகும் வரை கிளறவும்.

கரட் வெந்து அல்வா பதம் போல் திரண்டு வரும்போது வறுத்த முந்திரியை போட்டு மீதம் உள்ள நெய்யை ஊற்றி கிளறி இறக்கவும்.

சுவையும் மணமும் நிறைந்த கரட் அல்வா தயார்.

## கரட் பணியாரம்



**தேவையாணப் பொருட்கள்**

கரட் - 5
கோதுமை அவித்தமா - 2 சுண்டு
சீனி - 100 கிராம்
உப்பு - சுவைக்கேற்ப
அப்பச்சோடா - ஒரு சிட்டிகை
எண்ணை - பொரிப்பதற்கு

**செய்முறை:—**

கரட்டை கரையவிடாமல் நன்றாக அவித்து அரைத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும், அதனுடன் அவித்த கோதுமை மா, சீனி , உப்பு, அப்பச்சோடா எல்லாவற்றையும் நன்றாக கலந்து தண்ணீர் விட்டுப் பிசைந்து பனங்காய்ப் பணியாரத்துக்கு குழைப்பது போல் குழைக்கவும்.

குழைத்த மாவை ஒரு மூடியால் மூடி 2 அல்லது 3 மணித்தியாலங்கள் ஊற வைக்கவும்.

அடுப்பில் தாச்சிச்சட்டியை வைத்து எண்ணெய் விட்டுக் கொதித்ததும். ஊற வைத்த மாவை சிறு சிறு உருண்டைகளாக கொதித்த எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்கவும்.

இதோ சுடச் சுட கரட் பணியாரம் இல்லையில்லை பனங்காய்ப் பணியாரம் ரெடி.

இதில் ஒருவிசேடம் என்னவென்றால் இதை என்னவென்று சொல்லாமல் ஒருவருக்கு கொடுத்தால், அவர் பனங்காய் பணியாரம் என்றே சொல்லுவார், சுவையும், மணமும் சரியாக பனங்காய் பணியாரம் போன்றே இருக்கும்.

*- விசாலம்*

ARM ASSOCIATES
Financial Advice for Life

We have been helping our clients for over 35 years. Now we are proud to announce that you are able to receive advice from us by a

Chartered Financial Planner

Chartered Status is the highest benchmark in financial advice. If you require quality advice from one of the most qualified advisers in the country, feel free to contact:

Mr Suhan Srinivasan
(APFS, Chartered Financial Planner, Economics BSc)

Tel: 020 8763 2221

32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH.

Authorised and Regulated by the Financial Services Authority.

FINANCIAL PLANNER CII CHARTERED

# அநியாயம் ஆனால் உண்மை



சிறி
ஒரு பேப்பருக்காக

மேலே படத்தில் தாயாருடன் உள்ள பெண்ணின் பெயர் சமந்தா சியலர் வயது 21. நான் வசிக்கும் நகரத்தில் வசிக்கின்ற ஒரு மாணவி.

கடந்தவாரம் எங்கள் பிராந்தியப் பத்திரிகையில் (nice matin) இவரது படத்துடன் வந்த செய்தி எங்கள் நகர மக்களை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தச் செய்தியினை தேவை கருதி தமிழில் தருகிறேன்.

சியலர் ஒருநாள் பொழுது போக்காக இணையத்தில் வலம் வந்து கொண்டிருந்த பொழுது இணையத்தில் ஒரு விளம்பரத்தினை பார்க்கிறார்.

அது ஒரு இணையத்தின் மூலமான பயண முகவர் நிலையமொன்றின் ஒரு விளையாட்டு. அதில் வெற்றி பெற்றால் உலகின் பல இடங்களிற்கு ஒரு வார காலம் உல்லாசப் பயணம் போய் வருவதற்கான பயணச் சீட்டும் தங்குவதற்கான விடுதியும் பரிசாக அறிவிக்கப்பட்டு. பரிசு பெற்றால் போவதற்காக தெரிவு செய்வதற்காக சில நாடுகளின் பெயர் விபரங்களும் அதில் இருந்தது.

போட்டிக்கான விதி முறைகள் சுலபமானது தான். அதில் நீங்கள் ஆணா பெண்ணா? முழுப் பெயர் வயது மற்றும் மின்னஞ்சல் முகவரி இவற்றை பதிவு செய்து அனுப்பி விட வேண்டியதுதான்.

இதனைப்பார்த்த சிலரும் சிலநேரம் அதிஸ்ரம் அடித்தால் இந்தக் கோடை விடுமுறையை குதூகலமாகக் களிக்கலாமென நினைத்து அதில் கேட்டிருந்த விபரங்களை பதிவுசெய்து அனுப்பிவிட்டார்.

ஒரு வாரத்தின் பின்னர் சியலருக்கு ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. அதனைத் திறந்து பார்த்தவரிற்கு மகிழ்ச்சி அவர் நினைத்தது போலவே கோடை விடுமுறையை கொண்டாட்டமாக களிப்பதற்காக நீங்கள் போட்டியின் பரிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று அவர் விபரங்கள் அனுப்பிய அந்த பயண முகவர் நிலையம் மின்னஞ்சல் அனுப்பியிருந்தது.

அத்துடன்சில ஆசியமற்றும்தென்அமெரிக்க நாடுகளின் பெயர்ப் பட்டியலைப் போட்டு நீங்கள் செல்ல விரும்பும் ஒரு நாட்டினை தெரிவு செய்யும்படியும் கேட்டிருந்தனர்.

சியலரும் தாய்லாந்தின் பத்தையா கடற்கரையோரம் கால் நனைக்கும் கனவுகளுடன் தாய்லாந்தினை தெரிவுசெய்து அனுப்பியிருந்தார்.

ஆனால் அவருக்கு மீண்டும் ஒரு மின்னஞ்சல் வந்தது அதில் தற்சமயம் தாய்லாந்திற்கான ஒழுங்குகளை எங்களால் செய்யமுடியாமல் உள்ளது எனவே எங்கள் முகவர் ஒருவர் உங்களை நேரடியாக சந்தித்து நீங்கள் பயணம் செய்யக்கூடிய வகையில் மேலும் சில நாடுகளின் பெயர்ப்பட்டியலையும் காண்பித்து மேலதிக விபரங்களையும் தருவாரென்றும் தொடர்புகொள்ளும்படி அதில் ஒரு கைத்தொலைபேசி இலக்கத்தினை வழங்கியிருந்தனர்.

சியலரும் உடனே அந்த இலக்கங்களை அழுத்தினார். மறுமுனையில் ஒரு பிரெஞ்சுக்காரர் அல்லாத ஒரு ஆணின் குரல். தான்தான் அந்த பயணஏற்பாடுகளை செய்பவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு நகர மத்தியில் ஏதாவது ஒரு சிற்றுண்டிச்சாலையில் சந்திக்கலாமென ஒரு நேரமும் ஒதுக்கப்பட்டு ஒரு சிற்றுண்டிச்சாலையில் சந்தித்தனர்.

வந்தவரும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தென்அமெரிக்கா நாடுகளான வெனிசுலா, சிலி, பொலிவியா, பெரு, கொலம்பியா மற்றும்ஆஜென்ரீனா ஆகிய நாடுகளிற்கே தற்சமயம் ஒழுங்குகள் செய்யமுடியுமென்றும் அந்த நாடுகளின் விபரங்கள் சில படங்கள் என்று காட்டியபடியே கதைக்கவும்.சியலர் ஆஜென்ரீனாவை தெரிவு செய்தார்.

ஆனால் அந்த முகவரோ ஆஜென்ரினாவிற்கு செல்வதற்கு பிரேசில் விமான சேவையிலேயே இடம் இருக்கிறது ஆனால் பிரேசிலில் இருந்து ஆஜென்ரீனாவிற்கான விமானத்திற்காக நீண்ட நேரக் காத்திருப்பு எனவே கொலம்பியாவை தெரிவு செய்யலாம் இங்கிருந்தே நேரடிவிமானத்தில் இலகுவான பயணம்என்று கதைத்து சியலரை அந்த முகவர் சம்மதிக்க வைத்து விட்டார்.

பிறகென்ன சில நாட்களில் மீண்டும் சியலரை நேரில் அழைத்த அந்த நபர் அவரிற்கான விமானச் சீட்டும் தயார் என்று கூறி விமானச் சீட்டையும் அவரின் செலவுகளிற்காக ஒரு உறையில் 1000 யுரோ பணத்தையும் கொடுத்து கொலம்பியா போனோ விமான நிலையத்தில் உங்களை எங்கள் முகவர் ஒருவர் வரவேற்று மேலதிக உதவிகளை செய்வாரென்று வழியனுப்பிவைத்தார்.

சியலரும் கொலம்பியா போனோ விமான நிலையத்தில் இறங்கியதும் திட்டமிட்டிருந்த படியே அங்கு ஒரு முகவர் சியலரை அழைத்துப் போய் ஒரு விடுதியில் தங்க வைத்து சியலரிற்கு ஒருவாரகாலத்திற்கு அவர் சுற்றிப் பார்ப்பதற்காக உதவியாக ஒரு வழிகாட்டியையும் ஏற்பாடு பண்ணிவிட்டு போய் விட்டார்.

ஒரு வார காலம் சியலரின் பயணம் நன்றாக முடிந்தது. மீண்டும் பிரான்சிற்கு திரும்ப வேண்டிய நாள் வந்தது. கொலம்பியாவில் வரவேற்ற அதே நபரே வழியனுப்பி வைக்க வந்திருந்தார்.

ஒரு வாடைகைக்காரில் (taxi) சியலரையும் ஏற்றிக் கொண்டு விமான நிலையம் நோக்கிப் போய்க்கொண்டிருந்த பொழுது ஒரு இடத்தில் அவர்களது வாடைகைக் கார் நின்றுவிட அதில் ஏதோ கோளாறு எனவே வேறொரு வாடைகைக் காரில் போகலாமென இன்னொரு காரில் மாறி விமான நிலையம் வந்தடைந்தனர்.

விமான நிலையத்தின் உள்ளே இடப் பதிவு செய்யும்( boarding ) இடம்வரை சியலரின் பொதிகளை கொண்டுவந்து கொடுத்து விட்டு அந்த முகவர் நல்ல பயணமாக அமையட்டும் என்று கூறி விடைபெற்றார்.

**பொதியை திறந்ததும் செய்லரிற்கு அதிர்ச்சி. காரணம் உள்ளே இருந்தவை அவருடைய துணிகள் அல்ல. அதற்கடுத்த அதிர்ச்சி உள்ளே ஒரு பாசல் அதில் 14 கிலோ நிறையுள்ள கொக்கெயின் போதைமருந்து.**

சியலரும் தன்னுடைய பொதிகளை பதிவு செய்து விட்டு தன்னுடைய இருக்கைப் பதிவினை பெற்றுக்கொண்டு புறப்படும் பொழுது ஒரு விமான நிலைய அதிகாரி ஒருவர் வந்து சியலரை சில கேள்விகள் கேட்க வேண்டும் ஒரு நிமிடம் ஒத்துழைக்கமுடியுமா எனக் கேட்டுள்ளனர்.

சியலரும் இது ஏதோ சாதாரண விமான நிலைய சம்பிரதாய விசாரணை என நினைத்து தாராளமாக ஒத்துழைக்கிறேன் என்று கூறவும். அவர்கள் விமான நிலையத்தில் இருந்த ஒரு அறைக்கு அழைத்துசெல்ல அங்குகொலம்பிய விமான நிலைய காவல்துறையினரும் சியலரின் பயணப்பொதியும் இருந்தது.

அங்கிருந்த காவல்துறை அதிகாரி சியலரைப்பார்த்து இது உங்கள் பொதிதானே என்று கேட்கவும். சியலரும் சாதாரணமாக தன்னுடையதுதான் என ஒத்துக்கொள்ள அவரது பொதியினை காவல்த்துறையினர் திறந்தனர்.

பொதியை திறந்ததும் செய்லரிற்கு ஆச்சரியம் காரணம் உள்ளே இருந்தவை அவருடையதுணிகள் அல்ல. அதற்கடுத்ததாய் அதிர்ச்சி உள்ளே ஒரு பாசல் அதில் 14 கிலோ நிறையுள்ள கொக்கெயின் போதைமருந்து. சியலர் இப்பொழுது போனோ சிறையில் இருக்கிறார். பிரெஞ்சுத் தூதரகம் இவரின் நலன் மற்றும் வழக்குகளை கவனித்து வருகின்றது.

பிரான்சில் இது இரண்டாவது சம்பவம். சுமார் மூன்று ஆண்டுகளிற்கு முன்னரும் பாரிஸ் புற நகர்பகுதியில் வசிக்கும் ஒரு மாணவி இதே பாணியில் கொலம்பியாவிற்கு சென்று போதை மருந்துகளுடன் பிடிபட்டு அவர் நேரடிக் குற்றவாளி அல்ல ஏமாற்றப்பட்டிருக்கிறார் என்று தெரிந்திருந்தாலும் அவருடைய பயணப் பொதியில் போதை மருந்துகள் இருந்ததற்காக 5 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்.

எனவே எம்முடைய தமிழ் இளம் சமுதாயமும் காலையும் மாலையும் கணணியிலேயே கடலை போட்டுக் கொண்டு கவிண்டு கிடப்பதால் இதுபோன்ற கணணி விளம்பரம் மற்றும் விளையாட்டுக்களில் கவனமாக இருக்க வேண்டியே இந்தச் செய்தியை தமிழில் தருகின்றேன் இல்லா விட்டால் களி சாப்பிட்ட படி கம்பி எண்ணப்போறம் எண்டு அடம் பிடிச்சால் உடைனையே கொலம்பியாவிற்கு ஒரு றிக்கற் எடுங்கோ .........................

# சென்னை...

*(33ம் பக்கத் தொடர்ச்சி)*

நகரசபை குப்பை கொட்டுகிற இடத்தில் தார் சீட் போட்டு இருந்தது அவளது குடியிருப்பு. அண்ணா என்னைய போட்டோ பிடிப்பீங்களா என அப்பாவியாய்க் கேட்கிற அவளிடம் நீ பள்ளிக்கு போவியா எனக்கேட்டேன் மௌனமாயிருந்தாள். என்ன செய்வாய் பால்பாக்கெட் பொறுக்குவேன் என்கிறாள். குப்பைகளோடு குப்பைகளாய் வசிக்கிறார்கள்.

கடைசியில் அவளைப் போட்டோ எடுப்பதற்காக சரி எடுக்கிறன் நில்லு என்ற போது அவள் சொன்னாள் அண்ணா அந்த 'விஜய் பானர் பக்கத்தில வச்சி எடுங்க' அந்த குப்பை அள்ளும் மனிதர்கள் எல்லாருமாகச் சேர்ந்து விஜய்க்கு ஒரு வினைல் போர்ட்டு வைத்திருக்கிறார்கள். ரசிகர் மன்றமாம். அவள் வெள்ளந்தியாய்ச் சொன்னாள் இங்க பாருங்கண்ணா என்பேரும் இருக்கு.

எல்லாவற்றைக் கடந்தும் சென்னை வாசிகளிடம் நேசமிருக்கிறது எங்கெங்கிருந்தோ திசைகள் கடந்தும் வந்து அடைகிற கூடாயிருக்கிறது சென்னை.(ஹ் ஹ் ஹ் நானும் ஒரு குஞ்சில்லையா அதாங் ஆ). ஆனாலும் நடுத்தர வர்க்கத்தின் குரலாய் எப்போதும் சென்னையில் எதிரொலித்துக்கொண்டேயிருக்கிறது.

சென்னைப்பட்டணம் எல்லாம் கட்டணம். என்னதான் இருந்தாலும் பக்கத்துவீட்டு ஜன்னலுக்குள்ளால் பார்த்த சென்னையின் புன்னகையை நேரில் பார்க்க இன்னமும் அழகு கூடித்தானிருக்கிறது.

நான் இன்னமும் பார்த்துத்தீராத சென்னையின் பக்கங்கள் விரிந்து கொண்டேயிருக்கிறது. சென்னை தன் மாய இல்லை இல்லை நிஜ அழகால் எல்லாரையும் வளைத்துப்போட்டு விடுகிறது.



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS


எழுக தமிழ் பகை விரட்ட...
JULY
12
SATURDAY
3 P.M.
Our People are
Our Strength
எங்கள் நிலத்தில்
எங்கள் பலத்தில்
எங்கள் கால்களில்
தங்கி நிற்போம்
சொல்வோம் உறுதியாய்
வெல்க தமிழ்
Richardson Evans Playing Fields
Roehanpton Vale
London SW15 3PQ
பொங்கு தமிழ்
வெல்வோமாயின் வாழ்வோம்
ஒரு பேப்பர்

# இந்திய மதப் புரட்சி

அங்கம் 07

ஆற்றல் மிகுந்த ஓர் ஆசானையும் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஞானத்தையும் அவரிடம் அறிவுப் பயிற்சி பெற வந்த மாணவ குருமார்களையும் அவரைப் பின்பற்றிய ஆதரவாளர்களையும் கொண்ட ஒரு கல்விக் கலாசாலை அமைப்பிலேயே பௌத்த மும்மணிகளான - பௌத்தம் (ஆசான்), தர்மம் (போதனைகள்), சங்கம் (சமுதாயம்) என்ற பௌத்த மதக் கோட்பாடு உருவானது.

ஆசானின் போதனைகள் மக்கள் யாவரையும் சென்றடைந்து அவர்களின் வாழ்க்கையை, அவர்கள் வாழும் விதத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே அவரது மதத்தின் குறிக்கோளாக இருந்தது.

அவரது சமயக் கருத்துக்களில் முக்கியமான சில:

உலகில் வாழும் உயிரினங்களுக்கெல்லாம் இந்த உலகம் உரித்தானது. மனிதப் பிறப்பில் உயர்வு தாழ்வோ வர்ண பேதங்களோ இல்லை. மக்களை பிராமணர்கள், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பிரித்ததெல்லாம் பிராமணர்கள் மற்றைய மக்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட சூழ்ச்சியே.

மனித வாழ்வு நிலையற்றது. உலக உடமைகள் நிரந்தரமற்றவை. ஆகவே அவற்றின் மேல் கொள்ளும் ஆசைகள் துன்பத்திலேயே முடியும்.

பத்துத் தீவினைகளாவன:

கொலை, களவு, காமம், பொய் பேசுதல், கோள் சொல்லல், கடுஞ்சொற் பேசுதல், பிறரை ஏமாற்றுதல், குற்றச் செயல் புரிதல், பிறர் பொருளை அபகரித்தல், வெகுளுதல்

மேற்கூறப்பட்ட பத்துத் தீவினைத் தொகுதிகளினின்றும் விடுபட்டுத், தானங்கள் புரிந்து, சீல வாழ்க்கையை மேற் கொளவதே நல்வினைகள்.

இல்லற வாழ்வில் ஈடுபடுவோர் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய 'பஞ்ச சீலங்கள்' இவை.

ஒருயிரையுங் கொலை செய்யாது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல்.

பிறர் பொருளில் ஆசைப்படாமலும், களவு செய்யாமலும் இருத்தல்.

பிறர் மனைவிமேல் ஆசைப்படாமல் இல்லறத்தில் மட்டும் சிற்றின்பம் துய்த்தல்.

உண்மை பேசுதல், பொய் போசாதிருத்தல்.

மயக்கத்தை உண்டாக்கி மதியை கெடுக்கும் மது பானங்களை உட்கொள்ளாதிருத்தல்.

இல்லறத்தோரில் உயர்ந்த நிலையிலுள்ள, அறவாழ்வு வாழும் பௌத்த அபிமானிகள் மேற்குறிப்பட்ட ஐந்து ஒழுக்கங்களோடு, மேலும் மூன்று ஒழுக்க நெறிகளைச் சேர்த்து அஷ்டாங்க சீலத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இரவில் தூய்மையான புலாலற்ற உணவை சிறியளவில் உண்ணுதல்.

பூ, சந்தனம், வாசனைச் சுண்ணம், வாசனைத் தைலம் என்பவற்றை தவிர்த்தல்.

பஞ்சணை, மெத்தை ஆகியவற்றைத் தவிர்த்து தரையில் (பாய்மேல்) படுத்தல்.

**தமிழரும் அவர்கள் மதங்களும்**

எழுதுபவர்: **சிவ தியாகராஜா**

'தசசீலம்' என்பது பத்து ஒழுக்க நெறிகள், சிற்றின்பத்தை அறவே ஒழித்து, அடக்கமான பேச்சையும், அடக்கமான செயலையும் உடையவராய், உலகப் பற்றுக்களை நீக்கி, துறவறத்தை மேற்கொண்ட பௌத்த பிக்குகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் இவை. மேற் குறிப்பிட்ட எட்டு நெறிகளோடு பின்வரும் இரண்டும் சேர்ந்ததே புத்தபிரான் கூறியுள்ள தசசீலங்களாகும்.

இசைப்பாட்டு, கூத்து, நாடகம் போன்ற கேளிக்கைக் காட்சிகளைப் பாராதிருத்தல்.

பொன், வெள்ளி போன்ற பொக்கிஷங்கள் மீது ஆசைப்படாதிருத்தல்.

பிறப்பு, துன்பம், இறப்பு என்கிற துன்ப சாகரத்திலிருந்து விடுபட்டு 'பரிநிர்வாணம்' என்னும் வீடுபேற்று ஞானத்தைப் பெறுவதற்கு எட்டுவித ஒழுக்க வழிகளை - அஷ்டாங்க மார்க்கம் - புத்தபிரான் தருகிறார்:

* நேர்மையான நோக்கம்
* நேர்மையான விருப்புக்கள்
* வாய்மையான பேச்சு
* நேர்மையான நடத்தை, செய்கை
* ஒழுக்கமான வாழ்க்கை
* நேர்மையான முயற்சி
* நேர்மையான பண்பு
* அமைதியான தவம்

புத்தபிரான் தாம் வாழ்ந்த காலத்தில் வழக்கில் இருந்த இந்திய மொழிகளைக் கற்றறிந்து, இந்தியாவின் பல நாடு, நகரங்களுக்குப் பயணம் செய்த போது , அம் மக்களுக்கு அவர்களின் சுதேச மொழிகளிலேயே மதப் பிரச்சாரங்களை நிகழ்த்தினார்.

அவர் அறிந்திருந்த மொழிகளில் தமிழியும் (தமிழ்) ஒன்று என லலித விஸ்தார என்னும் பாளி நூல் குறிப்பிடுகிறது. (இதை ஆதாரமாகக் கொண்டே கி.மு. 5ம் நூற்றாண்டு முதல் வழங்கி வந்த தமிழ்ப்பிராமி எழுத்துக்களுக்கு தாமிழி என்ற பெயரை இரா. நாகஸ்வாமி கொடுத்திருக்கிறார்.)

கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் புத்தபிரான் காஞ்சிக்கு வருகை தந்ததாகவும், இதே சமயத்தில் அங்கே வந்திருந்த 'தீர்த்தங்கார்' என்ற பிராமணருடன் வாதம் செய்து, வெற்றி பெற்று, மக்களில் பலரை தமது மதத்தைத் தழுவச் செய்தார் எனவும் - மரபுச்செய்திகள் தமிழ் நாட்டில் இருந்ததாக சீன யாத்திரிகர் ஹூவன் த்ஸாங் தனது தமிழக யாத்திரைப் பதிவுகளில் குறிப்பிட்டிருக்கிறார்.

( Hiuen Tsang : Si -Yu-Ki :1984)

## மகாவீரரின் சமண மதம் [ ஜைனம் ]

கௌதம புத்தரின் காலத்திலே வாழ்ந்த வர்த்தமானர் உருவாக்கிய மதம் ஜைனம் எனப்படுகிறது. வர்த்தமானரை அவரது சீடர்கள் மகாவீரர் என அழைத்தார்கள்.

வடமொழியில் 'சிராமணம்' என அழைக்கப்பட்ட மதங்களில் ஒன்றான ஜைனத்தின் பெயர் மருவி சமணமானது.

ஜைனர்கள் தம்மை சமணர் என அழைக்காத போதும் தமிழகப் பிராமணர்களும், தமிழ் இலக்கியர்களும், தமிழ் அறிஞர்களும் அவர்களைச் சமணர் என்றே அழைத்தனர், தமிழ் இலக்கியத்தில் இப் பெயர் நிலை பெற்றுவிட்டதால் அப்பதத்தைக் கொண்டே அவர்களை அழைக்கவேண்டியிருக்கிறது.

கடந்த 2500 ஆண்டுகளில் பௌத்த மதச் சிந்தனைகள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்திருக்கின்றன. அம் மதம் பிற நாடுகளுக்குச் சென்றவிடத்து, அந் நாடுகளின் சுதேச கலாச்சாரத்தையும் உள்வாங்கிக் கொண்டது. உதாரணமாக இலங்கையின் பௌத்த விகாரைகளில் விநாயகர், முருகன், சிவலிங்கம் ஆகிய இந்துமதச் சின்னங்களையும் காணலாம். அவ்வாறே சீனாவிலும், ஜப்பானிலும் உள்ள பௌத்த தலங்களில் சுதேச வழிபாட்டுச் சின்னங்களையும் பௌத்த உருவங்களோடு பார்க்க முடியும்.

இதோடு ஒப்பிடும் போது சமண மதத்தில் அது ஆரம்பமான நாள் முதல் இன்று வரை எந்த விதமான மாற்றமும் இல்லாமல் அதன் கோட்பாடுகளும் கொள்கைகளும் கடுமையாக, கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

வர்த்தமானரின் தந்தையின் பெயர் சித்தார்த்தர். இவர் ஜனதிரிகர் எனப்படும் இனக் குழுவுக்குத் தலைவராக இருந்தார். தாயார் வைசாலி, செல்வக் செழிப்பான குடும்பத்திலிருந்து வந்தவர். ஒரு அரசகுமாரனைப் போல வாழ்ந்து, கல்வி பயின்று முடித்தபின் மணம் முடித்து, ஒரு மகளையும் பெற்றுக் கொண்ட வர்த்தமானர் உள்ளத்தில் உலக வாழ்க்கையின் துன்பங்களுக்கு ஒரு விமோசனம் காணவேண்டும் என்னும் உந்துதல் குடி கொண்டிருந்தது.

முப்பதாவது வயதில் அவரது பெற்றோர் இறந்ததும், தன்னலம் மறந்து உலக இன்பங்களைத் துறந்து துறவியாக வீட்டை விட்டு வெளியேறினார் வர்த்தமானர்.

ஆரம்பத்தில் 'நிர்கிரந்தர்' (உலக பந்தங்களைத் துறந்தோர்) என்றொரு துறவிக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார். பின்னால் அவரே ஒரு மத ஆசான் ஆனதும் அவரது சீடர்கள் நிர்கிரந்தர் என அழைக்கப்பட்டனர்.

பன்னிரண்டு ஆண்டுகள் வர்த்தமானர் நாட்டுக்கு நாடு சென்று, உணவை இரந்து உட்கொண்டு, தவத்திலும் சமய வாதங்களிலும் நாட்களைக் கழித்து, சுய தேவைகளை வெகுவாகக் குறைத்து, மிக மிக எளிமையாக வாழ்ந்தார்.

13 மாதங்கள் ஒரே ஒரு உடையை உடுத்திய வண்ணம் உலாவிய வர்த்தமானர் இறுதியில் அதையும் களைந்துவிட்டு, உடையேது மின்றி முழு நிர்வாணமாகவே வாழ்ந்தார்.

ஆறு ஆண்டுகள் அவரது நண்பராக அவரோடு வாழ்ந்த கோசல மஸ்கலிபுத்திரர் என்பார் வர்த்தமானரோடு சச்சரவு செய்து கொண்டு அவரது கூட்டத்தை விட்டு விலகிச் சென்று - அஜீவகர் என்னும் மதக்குழுவை ஸ்தாபித்தார்.

தனது போட்டியாளர்களான கௌதம புத்தரையும், கோசல மஸ்கலி புத்திரரையும் விட நீண்ட நாள் உயிர்வாழ்ந்த வர்த்தமர்னர் தனது 72 வயதில் மகத நாட்டிலிருந்த பாவா என்னும் சிறிய நகரத்தில் உண்ணா விரதமிருந்து கி.மு. 468 ஆம் ஆண்டில் காலமானார்.

அடுத்த இரு நூற்றாண்டுகளுக்கு சமணர்கள் குருமாரும் சீடர்களும் கொண்ட சிறிய கூட்டமாக மகத நாட்டின் தலைநகரான ராஜகிரகத்திலிருந்து செயற்பட்டார்கள். கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தனது அரசபதவியைத் துறந்த மௌரிய மன்னர் சந்திரகுப்தன் இச் சமணர்கள் கூட்டத்தில் சேர்ந்து கொண்டான். அக்காலத்தில் கங்கைப் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தினால் இச் சமணர்களின் ஒரு பகுதியினர் தென்னகத்திற்கு இடம் பெயர்ந்தார்கள்.

சமணர் கூட்டத்தின் ஒரு பகுதியினரின் இந்த இடப்பெயர்வு - சமணத்தில் இரு பெரும் பிரிவுகள் ஏற்படக் காரணமாயிற்று.

குடிபெயர்ந்த சமணர்களின் தலைவரான பத்ரபாகு மகாவீரர் ஆரம்பித்துவைத்த நிர்வாண வாழ்க்கையை சமண குருமார் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என விதித்தார். இவ்வாறு நிர்வாணமாக வாழ்ந்த சமணர்கள் 'திகம்பரர்கள்' என அழைக்கப்பட்டனர். தமிழகத்தில் இவர்கள் 'திகம்பர சாமியார்' என்னும் பெயரைப் பெற்றனர்.

*தொடரும்)*

*தொடரும்)*

**பொறாமை அமர்ந்த பூக்கள்**

உனக்கு ப்ரியமானவர்கள்
உன்னை சந்திக்க வரும்பொழுதெல்லாம்
எனது பூக்களில்
பொறாமை முளைத்து விடுகின்றது

விடைபெற்று செல்லும்பொழுது
மீண்டும்
பொறாமை பூக்களாகிறது

உன் பூக்களையெல்லாம்
எனக்கே தந்துவிடு
நீ பொறாமையை வைத்துக்கொள்

*- ரசிகவ் ஞானியார்*


HERBA NATURELLE
வழமையான உணவே நோய் தருமா?
தலையிடியுடன் கூடிய வயிற்று நோ. ஒற்றைத் தலைவலி மலச்சிக்கல் வயிற்றுப் போக்கு
வாயுறுதல் தோல் அழற்ச்சி சொறிவு உடல் சோர்வு களைப்பு அசதி தும்மல் ஆஸ்த்மா
நித்திரையின்மை மனவருத்தம் அங்கலாய்ப்பு கவனக்குறைவு தொடர்பான நிலைகள்....
இந் நோய்களுக்கும் உணவுக்கும் ஏதாவது தொடர்புண்டா?
Food Intolerance Test மூலம் கண்டு கொள்ளலாம்.

Tel: +44 (0) 20 8765 9015
Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com
மருத்துவ ஆலோசனைகளுக்கு. மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015
HERBA NATURELLE
Natural Health Centre
NORBURY 1410, London Road, Norbury SW17 4BZ
CROYDON 351a Whitehorse Road Croydon CRO 2HS

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 5'7" உயரமுடையவரும் 29 வயதுடையவரும் தன் முயற்சியில் நன்நிலையில் வளர்ச்சிகண்ட படித்த மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. *Ref: 1317*

2. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

3. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years, 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

4. British citizen, here since 1995, City Uni. Graduate and well employed, 28 years, 5' 5" tall, seeking a matching bride who could speak Tamil. *Ref: 1314*

5. இந்தியாவில் தொழில் புரியும் படித்த 28 வயது 5'7" உயரமுள்ள மணமகனுக்கு Europe Canada நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை தேடுகின்றார். *Ref: 1313*

6. Software Engineer, working in India, 30 years, 5' 7" inches tall seeking a suitable bride in Canada or EU countries with permananant residence status. Ref: 1312

7. Eelam Tamil, now a citizen of Singapore, computer engineer, 31 years, 5' 10" tall seeks a suitable educated bride. Ref: 1311

8. லண்டனில் வேலை செய்யும் அனுமதியுடன் 12 வருடங்களாக வசிக்கும A/L படித்த 31 வயது 5' 5" உயரமுள்ள மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1310

9. லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் இந்திய பட்டதாரி 33 வயது 5'10" உயரமுள்ள மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1309

10. Student in Australia, already a Colombo Uni. LLB Graduate, 34 years, 5' 10" seeking a uni-educated, matching bride in Canada. Ref: 1308

11. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

12. In the UK since 1998, a graduate from London Uni., 35 years, 5' 6" tall, seeking a suitable bride with permanent residence state. Ref: 1306

13. Canadian citizen, in Canada since 1989, 34 years, 5' 7" tall, self-employed, looking for a suitable bride. Ref: 1305

14. UK citizen, in the UK since 1991, a graduate, 34 years, 5' 6" tall, a divorcee, seeking a suitable bride. REF; 1304

15. British citizen, 39 years, 5' 7" tall, working as an IT consultant, seeking a suitable bride. Ref: 1303

16. French citizen, in the UK since 2001, 27 years, 5' 8", did higher studies in Australia looking for a match, Ref: 1302

17. UK citizen, since 15 years of age in England, Accountant well employed , 36 years, 5' 8", seeking a matching bride, a Graduate. Ref: 1301

18. Living in Colombo, 35 years, 5' 6", educated and well employed, looking for a matching bride. Ref: 1199

19. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

20. UK citizen, graduate in computer engineering, 44 years, 5' 10 ", looking for a suitable bride from Sri Lanka or abroad. Ref: 1197

21. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

22. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years, 5' 7", seeking a matching bride. Ref: 1195

23. French citizen, a graduate in computer communication, employed in England, 33 years, 6' tall, seeking a matching bride. Ref: 1194

24. Top professional in England, studied in Jaffna, originally, 46 years, 5' 7", a divorcee seeking a suitable bride. Ref: 1193

25. In the USA on work permit for the last 10 years, 29 years, 5' 6", a double degree holder, looking for a matching bride willing to move to California. Ref: 1190

26. In the USA since 2000, Green Card holder, Graduate, 42 years, 5'4" looking for a matching bride. Ref: 1189

27. Surrey Uni. Electrical Engineer, 32 years, 5' 7", on student visa, looking for a professional groom with permanency. Ref:1188

28. தற்போது வதிவிட உரிமை பெற்று சொந்த கடை வைத்து இருக்கும் 33 வயது 5'6" மணமகன் தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:1187

29. Business man in Colombo, 48 years, 5' 7", A/L qualified, looking for a bride in Sri Lanka or abroad. Ref: 1184

30. British citizen, 30 years, 5' 7", an electronic engineering, looking for a suitable bride in the U.K. Ref: 1183

31. British citizen, in the U.K since 1990, B.Sc qualified from South bank Uni. 36 years, 5' 5" looking for a matching bride from Europe. Ref: 1180

32. In the U.K since 2001, Computer Science graduate from Kingston Uni., 29 years, 6' 1" looking for an educated bride from Europe or Canada with permanency. Ref: 1179

33. Lecturer in a University in Sri Lanka, worked in the U.K for a 2 year- period, 32 years, 5' 5", seeking a bride, at least A/L, from abroad or Sri Lanka. *Ref: 1167*

34. Professional, U.K qualified, 29 years, 5' 11", looking for a suitable bride in the U.K. Ref: 1158..

35. An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride. Ref:1147

36. அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8",மணமகனுக்கு,தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

37. கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு. தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

## மணமகன் தேவை

38. யாழ்ப்பாணத்தில் படித்துக்கொண்டிருக்கும் 23 வயதும் 5' 1" உயரமும் கொண்ட மணப்பெண்ணுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமை கொண்ட மணமகன் தேவை. *Ref: 1661*

39. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

40. British citizen, MSc (Hon) from one of the top universities, 34 years, 5' 3" tall, seeks a professional groom from the UK. Ref: 1659

41. கொழும்பில் தொழில் புரியும் CIMA கணக்கியல் படித்த 29 வயது, 5' 3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. Ref: 1659

42. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

43. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

44. Educated and well employed in Colombo, and also a carnatic-music teacher, 32 years, 5' 1" tall, seeks a suitable vegetarian groom, preferably in Canada or Australia. *Ref: 1655*

45. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிட வுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

46. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

47. கனடா பிரஜையும் 37 வயது 5'6" தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1652*

48. கனடா பிரஜையும் 32 வயது 5'7" விவாகரத்து செய்த படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். *Ref: 1651*

49. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

50. பிரான்சில் தற்காலிக விசாவில் இருக்கும் A/L படித்த 35 வயது 5' 7" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனரRef: 1649

51. மன்னாரில் வசிக்கும் O/L படித்த 20 வயது 5' 3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு வெளிநாட்டில் வதிவிட உரிமையுள்ள வரனைத் தேடுகின்றனர். Ref: 1649

52. Working in Colombo, ICMA Final, 24 years, 5' 1", looking for a well educated, matching groom in Sri Lanka or abroad. Ref: 1647

53. Living in Singapore, planning to migrate to USA, Diploma in Business Admin., 29 years, 5' 4" seeks a Groom, abroad with residence permanency. Ref: 1646

54. கனடாவிற்குப் 10 வயதில் வந்த 24 வயது 5'3" உயரமுள்ள பொறியியலாளராகப் பணிபுரியும் மணப்பெண்ணுக்கு கனடா அமெரிக்காவில் படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1645

55. Singaporean UK Citizen, a medical professional, 38 years, 5' 6" tall, seeking a matching groom. Ref: 1644

56. Medical professional, 8 years in the UK, a citizen, 37 years, 5' 7" tall, a divorcee seeks a suitable groom. Ref: 1643

57. In USA on HI Work visa since 2000, 31 years, 5' 2" tall, a Master's degree holder seeking a matching groom in USA. Ref: 1642

58. Qualified accountant working in Colombo, 30 years, 5' 3" tall, is seeking a matching groom in EU or Canada with permanency. Ref: 1641

59. கொழும்பில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழக பட்டதாரி 32 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் வெளிநாட்டில் தகுந்த வரனைத் தேடுகின்றனர. Ref: 1640

60. UKஇல் 8 வருடங்களாக வசிக்கும UK பட்டதாரி 23 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகின்றார் Ref: 1639

61. Jaffna Uni graduate, on student visa in the UK doing Masters, 33 years 5' 2" tall, seeks an educated groom with permanent residency. Ref: 1638

62. இந்தியாவில் 11 வருடங்களாக வசிக்கும் பட்டதாரி 27 வயது 5' 6" உயரமுள்ள மணமகளுக்கு UK இல் வதிவிட உரிமையுள்ள தகுந்த வரனைத் தேடுகின்றனர் Ref: 1637

63. In Sweden on student-visa, doing PHD, 34years, 5'5" tall, is seeking a matching professional groom. Ref: 1636

64. MBBS, Sri Lanka, working in Kandy hospital, 29 years, 5' 7", looking for a matching groom abroad. Ref: 1635

65. Netherlands citizen (there since 1991), Physiotherapist, 26 years, 5' 2", looking for suitable groom in Europe. Ref: 1632

66. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5' 3", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1631

67. British citizen, 23 years in UK, 37 years, 5' tall, a graduate, looking for an educated groom in UK. Ref: 1630

68. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5'3", மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref: 1629

69. Canadian citizen, in Canada since 1999, 39 years, 5' 6", a professional and well employed, looking for a matching groom. Ref:1627

70. UK born, accountancy degree holder, 25 years, 5' 4" tall, well employed, seeking a matching groom, those with no permanency, will also be considered. Ref: 1626

71. Canadian citizen, graduate in computer science, 25 years, 5' 51/2' tall, looking for a professional groom in Canada. Ref: 1625

72. UK born, a civil servant, 26 years, 5' 2" tall, seeking a matching groom, educated up to graduate level. Ref: 1624

73. Presently in Chennai, +2 studied, 28 years, 5' 0", also music & dance teacher, looking for a suitable groom from Europe. Ref: 1621

74. கொழும்பில் வசிக்கும் A/L படித்து தற்போது கம்பியுட்டர் படிக்கும் 27 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகிறார் Ref:1623

75. கொழும்பில் வசிக்கும் A/L படித்து தற்போது கம்பியுட்டர் படிக்கும் 23 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகிறார் Ref: 1622

76. திருமணம் செய்து 3 மாதங்களில் கணவனை இழந்த 30 வயது 5'4" A/L படித்த யாழில் வாழும் பெண் தகுந்த வரனை Canada EU நாடுகளில் தேடுகின்றார். Ref: 1620

77. இணுவிலில் வாழும் 31 வயது 5"2" விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. Ref: 1619

78. USA citizen, over there since childhood, science graduate and well employed, 31 years, 5' 6" tall, seeking a professional groom willing to move to United States.Ref: 1617

79. British citizen, 10 years in the U.K, a final medical student, 25 years, 5' 3" tall, seeking a matching professional groom. Ref: 1616

80. British citizen, 10 years in the U.K, LLB Graduate, doing further studies, 24 years, 5' 4" tall, seeking a matching professional groom. Ref: 1615

81. British citizen, 15 years in U.K, 29 years, 5' 4" AL qualified looking for a matching groom in England. Ref: 1610

82. Canadian citizen, in Canada since 2003, 28 years 5' 6", an accountant working in a bank, looking for a suitable groom in Canada or U.K. Ref: 1608

83. இந்திய பல்கலை பட்டதாரி தற்போது லண்டனில் MA படிக்கும் 32 வயது 5'1" தகுந்த மணமகனை தேடுகின்றார். *Ref: 1606*

84. கொழும்பில் வேலை பார்க்கும் 29 வயது 5', A/L படித்த தகுந்த நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை தேடுகின்றார். *Ref: 1605*

85. Accounting professional, working in USA, 30 years, 5' 3", looking for a professionally qualified groom. *Ref: 1603*

86. Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

87. Netherland citizen, and undergraduate, 23 years, 5'5', looking for a suitable groom. Ref: 1494

88. In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a gruate and well employed looking for a suitable groom. Ref: 1479

89. Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

# கோவில் கொம்பனிகளும் மக்களின் அறிவியல் பார்வைக்கான அவசியமும்

பொ. கருணாகரமூர்த்தி
*(ஒரு பேப்பருக்காக)*

ஒருகாலத்தில் சில நல்லவர்கள் வசதி படைத்தவர்கள் பிரபுக்கள் அரசர்கள் மடங்களையும் சத்திரங்களையும் கோவில்களையும் கட்டினார்கள். ஆனாலும் அவை எல்லாம் சமூகத்துக்கு சில திண்ணைப்பள்ளிகள் ஆற்றியவையை விட அதிகமாக சேவையாற்றின வென்று கொள்ளமுடியாது. அவற்றின் சேவைகள் எக்காலத்திலும் சமூகத்தின் எல்லாத் தட்டினருக்கும் சீராக எட்டியதுமில்லை. எல்லாக்காலத்திலும் பொருளாதார வசதி படைத்தவர்களும், நிலப்பிரபுக்களுமேதான் அக்கோயில்களின் தருமகர்த்தாக்களாகவும், பரிபாலகர்களாகவும் இருக்கமுடிந்திருக்கிறது. தவிரவும் திண்ணைப்பள்ளிகள் உட்பட்ட இவ்வகைச் சிற்றதிகார அமைப்புக்கள் அனைவற்றின் மூலமும் சமூகத்தில் ஜாதிய உணர்வுகள் ஏற்றத்தாழ்வுகள் நியாயப்படுத்தப்பட்டும் பரப்பப்படலுமாயின. ஒரு சமூக அமைப்பின் வர்க்க பேதங்களின் ஊற்றுக்கண் மதங்களே அன்றி வேறொன்றில்லை.

சரித்திரத்தில் மிகப் பின்னோக்கியெல்லாம் செல்லவேண்டாம், சிலுவை யுத்தங்களையும் விட்டுவிடுவோம். மனிதன் மிகவும் நாகரீகம் அடைந்துவிட்டான் என புழகாங்கிதமடையும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டு தசாப்தங்களுள்ளான நிகழ்வுகளை நோக்கினாலே போதும். அயோத்தியில் பாபர்மசூதி உடைப்பு, ஆப்கானத்தில் எத்தனையோ நாடுகள் மன்றாடிக்கோரியும் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த புத்தர் சிலைகள் தலீபான்களால் நொருக்கப்பட்டமை, இலங்கையில் திருகோணமலையில் இந்துக்கள் வாழ்பகுதியில் புத்தர்சிலை நாட்டுவிக்கப் பட்டமை, குஜராத்தின் இஸ்லாமிய மக்கள் மீதான படுகொலைகள், நவாலி தேவாலயப் படுகொலைகள் எல்லாம் எந்த மத அமைப்பாவது அதன் இளைஞர்களையோ சமூகத்தையோ நன்வழிப்படுத்துமென்பதையா எமக்கு நிரூபிக்கின்றன? மதங்களாலும் மத உணர்வுகளாலும் இளைஞர் மனங்களை நஞ்சூட்டவும் துவேஷப்படுத்தவும் தூண்டிவிடவுந்தான் இதுவரையில் முடிந்திருக்கிறது. பௌத்த தர்மத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ள இலங்கையில் மக்களின் ஜனத்தொகை எண்ணிக்கைக்கு அங்கு ஆண்டொன்றில் இடம்பெறும் கடத்தல், கொலை, களவு, வல்லுறவுகளின் விகிதமானது உலகின் ஏனைய சோஷலிச நாடுகளில் இடம்பெறுபவற்றைக் காட்டிலும் மிகஅதிகம்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்மை பயக்கவல்லதென எதிர்பார்க்கப்படும் இராமர் அணைவிவகாரம் அங்கே காவிக் கட்சியினிடமும் சுப்பிரமணிய சுவாமி, சோ. இராமசாமி, இராமகோபாலனன்ன சமயக் குரங்குகளிடம் அகப்பட்டுக்கொண்டு படுகின்றபாடுகளையும் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறோம்?

ஜாதி இந்துக்கள் பௌத்தர்களை - சமணர்களை நூற்றுக்கணக்கில் கழுவேற்றியும், சுண்ணாம்பறைகளுள் தள்ளியும் கொன்றதிலிருந்து சரித்திரமாகிய சிலுவையுத்தங்கள் அனைவற்றுக்கும் மதங்களே காரணமாக இருந்து மனுகுலத்துக்கு மாறாத வலியையும் வடுவையும் உண்டு பண்ணிவருகின்றன.

எந்தக்காலத்திலாவது எந்தக் கோவில்கள், மடாலயங்கள், பள்ளிகள், தேவாலயங்கள், மதரஸாக்கள் சமூகத்தை நல்வழிப்படுத்தி வழிகாட்டியிருந்திருக்கின்றனவா? இல்லவே இல்லை. ஸ்ரீரங்க நாதனினதும், திருப்பதியின் கஜானாவினதும் கையிருப்பிலுமிருந்து எத்தனை கல்விச் சாலைகளை நிறுவலாம். எத்தனை மரத்தடிப் பள்ளிக்கூடங்களுக்கு நிரந்தர வகுப்பறைகள் , ஆய்வறைகள், கழிப்பறைகள் கட்டித்தரலாம். அத்தகைய நற்காரியங்களுக்கு எந்த மதமோ மடமோ சமய அமைப்போ முன்வருவார்களா? இது வத்திக்கானுக்கும் மிகப்பொருந்தும்.

இத்தனை பவிசு காட்டும் கத்தோலிக்க திருச்சபை இருக்கிறதே. அடுத்தமுறையாவது போப்பாண்டகையாக ஒரு ஸ்திரீயைத்தெரிவு செய்யுங்களேனென்று கேட்டுத்தான் பாருங்களேன். அபச்சாரம்..... தேவனுக்கு அடுக்காது என்று சொல்லி அத்தனைபேரும் நாண்டு கொண்டு மாண்டாலும் தெரிவு செய்யவே மாட்டார்கள்.

மக்களின் அறியாமையை பகடைக்காய்களாக்கி காய்களை நகர்த்தி விளையாடிக் கொண்டிருக்கும் சாமியார்கள் சாஜிபாபா, ஜெயேந்திர சரஸ்வதிகள், பாபா ராம்தேவ், பிரேமானந்தா, அமிர்தானந்தமையி, நற்செய்திக்கூட்டங்களிலெல்லாம் குருடர்கள் பார்க்கிறார்கள். அந்தோ முடவர்கள் நடக்கிறார்களென்று பொய்ப்பிரசாரம் செய்துவரும் அருட்(?)தந்தை டி.ஜி.எஸ்.தினகரன்களுக்கெல்லாம் தாம் குப்பை கொட்டிக் கொண்டிருக்கும் சமூகத்தின் தேவைகள்பற்றிய பிரக்ஞைகள் கிஞ்சித்தாவது இருக்குமா? வேலூர் அருகே ஸ்ரீபுரத்தில் தங்கத்தால் கோவில் நிர்மாணித்திருக்கும் பேர்வழிகள் (ஆதாரம்:http://www.binscorner.com/pages/s/sripuram-golden-temple-vellore.html) ஒருபோதும் நாட்டில் கல்விச்சாலைகள் எதையும் நிறுவ முன்வரமாட்டார்கள். ஏனெனில் கல்வி மக்களின் அகவிழிகளைத் திறந்து அறிவியலோடான பார்வையை வழங்கிட வல்லதல்லவா? அப்புறம் அவர்கள் தம் பாமரத்தனங்களை, பித்தலாட்டங்களை, அடிமுட்டாள் சடங்குகளை எவரிடந்தான் விற்பனை செய்வதாம்?

தாயுமானவரும், திருமூலரும், வள்ளலாரும், சித்தரும், புத்தரும், சூர்பீக்களும் அவாவிய ஆன்மீகம் எங்கே? இந்தச் சமயசஞ்ஜீவிகள் தம்மை பாமரத்தனமாக நம்பி உலையும் மக்களை இட்டுச் செல்வதெங்கே?

எனது கணிப்புக்கு எட்டியவரையில் ஐரோப்பா முழுவதும் இந்திய, ஈழத்தமிழர்களால் போட்டிபோட்டுகொண்டு ஸ்தாபிக்கப்பட்ட கோவில்கள் மட்டும் 50 வரையில் உள்ளன. அநேகமாக ஒவ்வொருகோவிலும் ஒவ்வொரு தனியுடமைக் கொம்பனிகள்போல எட்டு அல்லது பத்துப்பேரால் நிர்வகிக்கப்படுகின்றன. அதன் வரவு செலவு ஆதாயங்கள் என்பனபிறிதெவரும் அறியவொண்ணாதொரு மூடுண்ட முகாமிலேயே முடக்கி வைக்கப்படுகின்றன.

ஜெர்மனியில் அரசு நன்கொடையாகக் கொடுத்த நிலத்தில் தனியொருவரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கோவிலொன்றில் கிடைக்கும் அர்ச்சனைகள் பூஜைகள் நன்கொடைகள் நேர்த்திக் கடன்களில் பத்து ஆண்டுகளின் முன்பதாக சமூக உதவிப்பணத்தில் பிழைத்திருந்த அதன் ஸ்தாபகர் புதிய மோஸ்தரிலான இரண்டு பென்ஸ்கார்களில் மஹாராஜா பாணியில் வலம்வருவதும் திவ்யதரிசனங்கள். தினசரிபூஜைக்கு அறுகம்புல்லும் இளநீரும் வாழை இலையும் முக்கனிகளும் பன்னீரும் பசு நெய்யும் விமானத்தில் வந்திறங்கும் அழகை என்னசொல்ல? சாதா அர்ச்சனை பண்ணுவிக்க கவுண்டரில் 15 இயூரோ செலுத்திவிட்டு (1000 இயூரோவரை அர்ச்சனைகள் உண்டென்பதறிக) அர்ச்சனைத் தட்டுக்களுடன் மக்கள் பக்தி ஒழுக நிற்கும் பரவசக்காட்சிகள்தான் என்னே?

ஒருமுறை ஏதோ நேர்த்திக்கடனென்று ஒருபெண்மணி தனது பத்துச்சவரன் சங்கிலியை கோவில் உண்டியலில் கழற்றிப் போட்டிருக்கிறார். ஒரு மாசம் கழித்து கோவில் பிரதம பூஷகரின் மனைவியின் கழுத்தில் அது கொலுவீற்று மின்னியதை அவரே கண்டு பிடித்து பூஷகரிடம் விளக்கம் கேட்டபோது முதலில் இல்லவே இல்லையென்று மறுத்தவர் அப்பெண் சத்தம்போடவும் அச்சங்கிலியின் நிறைக்கு சமனான தங்கத்தை யாம் உண்டியலில் சேர்த்துவிட்டுத்தான் அதை எடுத்தோமம்மா. இறைசொத்தைத் தீண்டலாமாம்மா?' என்று அவர் கொடுத்த தெளிவுரையில் இவரும் சமாதானமாகிப் போய்விட்டார். இவ்வரிய காட்சியை 'கலைவிளக்கு' பத்திரிகையின் ஆசிரியர் வீடியோப்பதிவாக்கி வைத்திருக்கிறார், காணக்கண்கோடிவேண்டும்.

அதேகோவிலில் வசந்தமண்டபம் கட்டுவதற்கு ஒவ்வொரு செங்கல்லையும் 50 இயூரோ வீதம் (அவர்களிடமிருந்தேதான்) வாங்கி 'உபயம்' செய்யுங்கள். உங்கள் பெயரை இயந்திரத்தகட்டில் பதித்து அக்கல்லோடு சேர்த்துக் கட்டி உங்களுக்குப் 'புண்ணியம்' சேர்க்கின்றோம் என்றொரு விளையாட்டும் நடைபெற்று வருகின்றது. இப்பணிக்கு ஆயிரக்கணக்கில் குவித்துவைக்கப்பட்டிருந்த செங்கற்கள்தான் பத்துவருடங்களாக இடமிருந்து - வலமாகவும், பின் வலமிருந்து - இடமாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன.

அப்பதியில்தான் திருவிழா ஒன்றின்போது பக்தர் ஒருவர் பறவைக்காவடி எடுத்தார். காவடி இணைத்த டிராக்டர் கோவிலைச்சுற்றிவரும் போது, காவடியின் மேலே ஏறி நின்று அதை மிதித்து ஊஞ்சலைப்போல் ஆட்டப்போனவருக்கு உசார் அதிகமாகி ஆட்டம் உச்சமாகி விட காவடியின் சட்டங்கள் ஒரு சேர முறிந்து இருவரும் கீழே 'தொபுகடீர்' பலத்த காயமடைந்த இருவரும் உடன் ஆஸ்பத்தரிக்கு விரைந்ததால் உயிர்பிழைத்தனர். இப்போது ஜெர்மனியில் பறவைக்காவடி, தூக்குக்காவடி என்பன எடுப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது.

அம்மனின் கதை இப்படியென்றால் தில்லையம்பலத்தாடும் கூத்தபிரானின் பெயரால் நடைபெறுவதைக் கேளுங்கள். பத்து வருடங்களின் முன்னர் ஒருமுறை நான் தமிழகம் சென்றிருந்தபோது சிதம்பரத்துக்கும் சென்றிருந்தேன். அங்கே விடாமல் என்னைத்தொடர்ந்துவந்து கொண்டிருந்த தீக்ஷதர் ஒருவர் எனது விலாசத்தை விடாப்பிடியாக வாங்கி வைத்துக்கொண்டார். மூன்று மாதங்கள் கழித்து அத்தீக்ஷதரிடமிருந்து அவரதுமகனின் உபநயனத்துக்கான அழைப்பிதழ் ஒன்று ஏராளம் மஞ்சள் குங்குமம் நிறைத்து வந்தது இகூடவே வங்கி இலக்கமும். நான் கண்டு கொள்ளவில்லை. அடுத்தமாதம் என்னைப் பயமுறுத்தும் வகையில் இன்னொரு கடிதமும் வந்தது. ' எதிர்வரும் மஹாசிவராத்திரி அன்று சிற்சபையீசனுக்கு விஷேச இலக்ஷர்ச்சனைப் பூஜை நடைபெறவுள்ளது. அதற்கான செலவு ஒரு இலக்ஷம் ரூபாவையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக எமக்கு வாக்களித்தபடி சுணக்காது கீழ்க் கண்ட வங்கி இலக்கத்துக்கு அனுப்பிவைக்க வேண்டியது.' தீக்ஷ?தரின் தனிப்பட்ட விலாசமும் வங்கி இலக்கமும் தரப்பட்டிருந்தன. ஒரு யுபழெளவை உ ஆகிய எனக்கு இன்று இதை நினைத்தாலும் சிரிப்புத்தான் வருகிறது.

கோவில்களில் கியூவில் நின்று பணத்தைக் கொடுத்துவிட்டுப் பதிலாக இறை கடாட்சத்தை வாங்க கண்களை மேலே சொருகிக்கொண்டு காத்திருக்கும் மக்களது பேதமைதான் முதலில் ஒழிக்கப்படவேண்டும். மூடநம்பிக்கைகளையும், சனாதனச் சடங்குகளையும் மக்களிடம் பரப்பிப் பிழைக்கும் ஐயர்கள், குருக்கள்மார்கள், மந்திரவித்தைக் காரர்கள், சாஸ்த்திரிமார், அருள்வாக்குகூறும் நம்பிகளெல்லாம் ஐரோப்பிய தமிழ்வானொலிகளில் விளம்பரம் தருகின்ற காலத்தில் இவ்வாறான கோவில்கள் கொம்பனிகள், சாமியார்கள், பித்தலாட்ட நிறுவனங்களையிட்டு மக்கள் என்றுதான் விழிப்படைவார்களோ?

எமக்கூட்டப்பட்ட கல்விமுறைகள் பாடங்கள் எதுவும் எம் சமூகத்தின் இயங்கியலையோ, அறிவியலும் சோஷலிசமும் சேர்ந்த சமூகத்தின் அவசியத்தையோ எமக்குச் சொல்லித் தரவில்லை. இதை உணர்ந்ததால்தான் 75 வருடங்கள் தந்தை பெரியாரும், 60 வருடங்கள் ஆபிரஹாம் கோவூரும் சாமிகளையும் ஆசாமிகளையும் மந்தைகளாகத்தொடரும் மக்களுடன் கருத்துத்தளத்தில் ஒளியூட்டியும், செயல்தளத்தில் போராடியும் ஓய்ந்தார்கள்! இன்னும் ஆயிரம் பெரியார்களும் ஈராயிரம் கோவூர்களும் வானத்திலிருந்துதான் குதித்து வந்தாலும் எம்மவராவது திருந்துவதாவது?

ஆதிபராசக்தி ஆளானது
ஆடிப்பூரத்திலாம்
அம்மா ஆசிரியர்
அம்மன்கோவில் பூசாரி
அனைவருமே சொல்லுகின்றார்
ஆதியவள் அதிசயத்தை
ஆர்வத்துடன் கவனித்து
ஆவணமாக்கி வைத்த
ஆதி மானுஷந்தான் எவரோ ?

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY



15 - 17
Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 66 55
020 8381 3442
Fax: 020 8905 7546

# அறுவைப் பக்கம்

## 'எருமை' திரைக் கதை

எனக்கு உந்த த(ட)மிழ் சினிமா பார்க்கிறது எண்டா கொள்ளை பிரியம் முடிந்தவரை புதுசா வாற படம் எல்லாம் பார்த்திடுவன் சிலதுகள் உங்க சினிமா திரையரங்குகளில காண்பிக்கிறவை அதையும் தவற விடாம நேரம் கிடைத்தா பார்த்து போடுவன் பாருங்கோ..

மற்றது நாங்கள் சும்மா தென்னிந்திய திரைபடங்களை குறை சொல்லப்படாது. அவையள் நல்லாத் தான் எங்களுக்கு படம் காட்டுறவை பாருங்கோ. அத்தோட வயசு போன பெரியவையில இருந்து நடுதர ஆட்கள் வரைக்கும் நல்லா புதுசா வாற படங்களை பார்த்து போட்டு சொல்லுவீனம்' அந்த காலத்து படம் போல வருமா' எண்டு. இப்ப அடிக்கடி நான் கேட்கிற 'டயலக்கில' இதுவும் ஒண்டு பாருங்கோ...

ஓமோம்..அவையளுக்கு அந்த காலத்தில அந்த படங்கள் நல்லாத்தான் இருந்திருக்கும்..இன்றைய காலகட்டத்தில அப்படியான படங்களை எங்காளால பார்க்க ஏலுமோ?

அதுக்காக நான் பழைய மற்றும் நடுத்தர படங்களை குறை சொல்லவில்லை..நல்ல கதையம்சத்துடன் பல படங்கள் வெளி வந்திருக்கிறது என்பது ஏற்று கொள்ள வேண்டியதொரு உண்மை,ஆனாலும் அந்த குறிப்பிட்ட காலப் பகுதிக்கான ரசனையை மட்டும் தான் அந்த படங்கள் கவர்ந்தன..(ஒரு சில படங்கள் மட்டும் அதற்கு விதிவிலக்கு)..

அப்படி பார்க்கும் போது இத்தகைய காலத்திற்கு ஏற்ற மாதிரி 'தென்னிந்திய சினிமா கலைஞர்கள்'..படங்களை தாறீனம் ஒரு தரப்பு இப்படியான படங்களை கண்டு வெறுப்புற்றாலும் இன்னொரு தரப்பு அதன் இரசிகராக தான் இருக்கிறார்கள் என்பதனை நாங்கள் ஏற்று கொள்ள தான் வேண்டும்..

உப்ப வாற புதுப் படங்களை எல்லாம் பார்த்து பார்த்து எனக்கும் மனசில ஒரு ஆசை வந்திட்டு அது வேறொன்றுமில்லை நானும் ஒரு கதை எழுதி நானே அந்த படத்தில கதாநாயகனா நடித்தா எப்படி இருக்கும் எண்டு.. .

இப்ப நான் படத்தின்ட கதையை சொல்லுறன் கேளுங்கோ என்ன கவனமா.

முதலில படத்திற்கு என்ன பெயர் வைக்கலாம் எண்டு யோசித்து கொண்டிருந்தா..விஜய் அண்ணாவின்ட 'குருவி' படம் எனக்கு ஞாபகத்திற்கு வர அவர் பறவை ஒன்னை பெயரா எடுத்தபடியா பதிலிற்கு நான் ஒரு மிருகத்தின்ட பெயரை படதிற்கு வைத்தா தான் 'விஜய் அண்ணா' கூடவும் போட்டி போடலாம் எண்டு யோசித்தா..நல்லதொரு பெயர் கிடைத்தது பாருங்கோ அது தான்.. 'எருமை'...

படம் தொடங்கக்க 'இளைய இளவரசன் ஜம்மு பேபியின் அட்டகாசமானநடிப்பில் ஒவ்வொரு இளைஞனினதும் நாடிதுடிப்பு 'எருமை' எண்டு வசனம் வரும். இது எப்படி இருக்கு?

இது எல்லாம் முடிந்தா பிறகு 'திரையில' ஜம்முபேபி வர போது எண்டு எல்லாரும் பார்த்து கொண்டிருக்க உடனே நாங்கள் ஒரு எருமையை காட்டுறோம். கொஞ்ச நேரத்தில எங்கையோ இருந்து நான் தாவி வந்து அப்படியே அந்த எருமை மாட்டிற்கு மேல இருக்கிறன்..அப்ப உடனே ஒரு பாட்டு..

'எருமை மாட்டிற்கு மேலா நான் இருந்தா உன
கென்ன

எல்லா கொரங்கும் என் பேர் சொன்னா உனகென்ன'..

இப்படி ஒரு பாட்டை போட்டா தான் 'விஜய்' அண்ணாவோட போட்டி மாதிரி இருக்கும்..எப்படி இருக்குது பாட்டு எண்டு சொன்னா எங்கன்ட குரு இசை அமைக்க விகடகவி மாமா பாட்டு பாட அந்த மாதி இருக்கும்..

பாட்டு முடிந்தவுடன நான் ஒரு கருத்து சொல்லுவன் அதுவென்னவெண்டா..நான் யாருக்கும் போட்டியில்ல போட்டியில்லபோட்டியில்ல எண்டு..(அப்ப தான் பார்க்கிற ஆட்களுக்கு எல்லாருக்கும் நான் யாரோடையோ போட்டி போடுற மாதிரி இருக்கும் பாருங்கோ)..

இந்த பாட்டு முடிய ஒருத்தன் ஓடி வந்து..'அண்ணா கபாலியின்ட ஆட்கள் தொல்லை பண்ணுறாங்க எண்டு'.. சொல்ல எண்ட கண் எல்லாம் அப்படியே சிவக்கும்.. உடனே அப்படியே அந்த எருமை மாட்டிற்கு மேல பாய்ந்து எருமை மாட்டில அந்த இடத்திற்கு போறன்.. (இது எப்படி இருக்கு)..

அங்க கபாலி ஒருவனை குத்த வாறான் நான் அப்படியே எருமையில போய் நடுவில நிற்கிறன்..(அப்ப நான் கீழே பார்த்து கொண்டு சொல்லுறன் வேணாம் போயிடு.. வேணாம் போயிடு)..எண்டு..

உடனே கபாலியின்ட ஆட்கள் பத்து,பதினைஞ்சு பேர் வந்திட்டாங்க..வந்து என்னை அடிக்கிறாங்க நான் அடி விழக்க எல்லாம் வேண்டாம் போயிடு எண்டு மட்டும் தான் சொல்லுறன்..அப்ப ஒருத்தன் அடித்த அடியில எனக்கு வாயில இருந்து இரத்தம் வருது..

அதை தொட்டு பார்த்து விட்டு 'ஏய்' எண்டு கொண்டு நான் விட்ட ஒரு அடியில எல்லாரும் போய் விழுவீனம்.. உடனே நான் ..

'நான் எருமை எங்கிட்ட வேண்டாம் உங்க பெருமை'

அப்படியே சொல்லிட்டு அங்கால பார்த்தா..(அங்க ஒருவா பள்ளி சீருடையில என்னை அப்படியே வைத்த கண் வாங்காம பார்த்து கொண்டு இருக்கு)..

உடனே இன்னொரு பாட்டு..(பல எருமை மாடுகளுக்கு மத்தியில நாங்க இரண்டு பேரும் ஆடுற மாதிரி காச்சியமைப்பு பாருங்கோ)..கனவு பாட்டு இது..

'எருமை எருமை உன்னை தேடி அலைந்தேன்'

எண்ட பாடல் வரிகள் இதற்கு இசை எங்கன்ட குரு தான் பாடலை எங்கன்ட நிலா அக்கா பாடட்டும்...

அந்த பாட்டு முடிய..(அந்த பெட்டைக்கு பின்னால நான் போற மாதிரியும்)..அவாவிற்கும் என் மேல காதல் ஆனா சொல்லாம தடுமாறுற மாதிரியும் காச்சி அமைப்பு எப்படி இருக்கும் பாருங்கோ..

இப்படியே போய் கொண்டிருக்கும் படம் இருந்தா போல 'நமீதா அக்காவை' இறக்கி அவா கூட ஒரு பாட்டு.. (ஏன் இந்த பாட்டு அதில வருது எண்டு எல்லாம் கேட்க கூடாது)..பழைய பாட்ட ரீமிக்ஸ் பண்ணி விடுவோம்..

'நான் பாத்ததிலே இந்த எருமையத் தான்

நல்ல எருமை எண்டேன்' அப்படி பாட்டு போகும்...

இப்படி படம் போய் கொண்டிருக்கும் போது திரையில 'எருமை எனி எறிக்கும்' எண்டு வரும் அது என்னவெண்டா இடவேளை படத்தில பாருங்கோ...

இடைவேளைக்கு பிறகு படம் தொடங்கும் போதே 'குப்பை எறிக்கிறதை' காட்டுறோம்..(அப்ப தான் பார்க்கிற ஆட்களுகுள்ள ஒரு 'தீ' வரும் பாருங்கோ)..

படம் இப்படியே நகர்ந்து கொண்டிருக்கும் போது.. படநாயகி அது தான் அந்த பள்ளிகூட சீருடையில வந்தவா அவாவே தான் அவா 'சுடிதார்' போட்டு கொண்டு நடந்து வாறா..(அந்த நேரம் காற்று பலமா அடிக்குது).. அவாவின்ட 'துப்பட்டா' பறக்குது..அதை பிடிக்க அவா ஓடுறா..

அப்ப நான் வீட்ட படுத்து கொண்டிருக்கிறன்..(எனக்கு இது கனவில தெரியுது)..பயத்தில எழும்புறன்..எழும்பி ஓடுறன் நான் இங்க இருந்து ஓட அவா அங்க இருந்து ஓட அப்படியே அந்த ஓட்டத்தை கொஞ்ச நேரம் வடிவா காட்ட வேணும் அப்ப தான் நன்னா இருக்கும்..

அப்படியே அந்த 'துப்பட்டா' ஒரு எருமை மாட்டின்ட மேல போய் விழுது பாருங்கோ..அப்ப நானும் அங்க வாறன் உடனே என்னையும் அந்த எருமையையும் மாறி மாறி காட்டுறோம்..(ம்ம்..எது எருமை எது ஜம்முபேபி எண்டு தெரியாதளவிற்கு நாங்க காட்ட வேண்டும்)..

அப்ப நான் எருமையை பாத்து சொல்லுறன் 'நான் உன்ட வழியிலையும் வர மாட்டன் அதை போல நீ எண்ட வழியில வர வேண்டாம் எண்டு'..எருமை ஒண்டுமே சொல்லாம நிற்குது...

அப்ப மழை பெய்யுது..'எருமை மாட்டிற்கு மேலையும் தான்'..அப்ப நான் எருமையை பாத்து ஒரு கருத்து சொல்லுறன் அதுவென்னவெண்டா..

'அந்த வானம் கருமை நீயோ எருமை நானோ
பொறுமை'

எண்டு..சொல்லிட்டு கடசி முறையாக் கேக்கிறன் 'அந்த துப்பட்டாவை தா எண்டு'..அப்பவும் எருமை அப்படியே நிற்குது பாருங்கோ..அத பாத்து போட்டு நான் பின்னுக்கு ஓடுறன் ஓடி போட்டு மறுபடி எருமையை நோக்கி வாரன் அப்ப பார்த்தா கன எருமைகள் நிற்குது அப்ப நான் ஒரு 'பஞ்' சொல்லுறன் அது தான்..

'எருமைகளுக்கு முன்னால நடுநிலைமை என்பது இல்லை'...எண்டு போட்டு எனக்கும் எருமை மாடுகளிற்கும் இடையே சண்டை நடக்குது..

அந்த சண்டையில நான் வென்று அந்த துப்பட்டாவை காப்பாத்துறனா இல்லையா என்பது தான் மிச்ச கதை.. (எப்படி இருந்தது கதை)..

இது தான் நான் எடுக்க நினைத்த பட கதை..(எப்படி இருக்கு??)..ஒருத்தரும் ஏசாமா கதை நல்லா இருக்கா இல்லையா எண்டு சொன்னா தான் நானும் 'விஜய் அண்ணா' போல வருவன் பாருங்கோ..அதோட எனக்கு கதாநாயகியாக யாரும் நடிக்கப் போறியள் எண்டாலும் சொல்லலாம் பாருங்கோ.

*- ஜம்மு பேபி*

## இதெப்படி இருக்கு

ஒரு சவப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நால்வர் முன்னே செல்ல, பின்னால் வெகு நீளமான கியூவில் மக்கள் தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தனர்.

யார் இவர்? இவருடைய மரணத்துக்கு நகரமே அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறதே? என்று ஊர்வலத்தைப் பார்த்த ஒருவருக்கு ரொம்ப ஆச்சரியம். சவப்பெட்டியை ஒட்டி நடந்து சென்றுக் கொண்டிருந்தவரை அணுகி, இறந்தவர் யார்? என்று விசாரித்தார். அவர்,

என் மாமியார் என்று பதில் சொன்னதும், எப்படி இறந்தார்? என்று கேட்டார்.

நாய் கடித்து விட்டது என்று பதில் வந்தது.

கேட்டவருக்குப் பொறிதட்டியது. மெதுவான 'குரலில் மாமியாரைப் பறிகொடுத்தவரிடம் கேட்டார்'

தயவு செய்து அந்த நாயைக் கொஞ்சம் இரவல் தர முடியுமா?

ஆட்சேபணை இல்லை. வரிசையில் போய் நில்லுங்கள். வரிசைப்படிதான் இரவல் கிடைக்கும்

❖ ❖ ❖

நள்ளிரவில் அந்த நகரத்திற்கு வந்த ஒருவன் தங்குவதற்கு அறை தேடி அலைந்தான். எங்கும் கிடைக்கவில்லை. ஒரு விடுதியிலிருந்து அவன் ஏமாற்றத்துடன் திரும்பும்போது அங்கிருந்த பொறுப்பாளர்,

இரவு உங்களுக்காக இரு படுக்கைகள் கொண்ட அறை. அதில் ஒரு படுக்கையில் பெண்மணி ஒருத்தி தூங்கிக் கொண்டிருக்கிறாள். அவளை எக்காரணம் கொண்டும் எழுப்ப மாட்டேன் என்றால் இன்னொரு படுக்கையில் நீங்கள் இன்றிரவு அமைதியாகத் தூங்கலாம் என்றார்.

அவனும் அந்த அறையில் தங்க ஒப்புக் கொண்டான்.

20 நிமிடம் கழித்துக் கீழே ஒடி வந்தான் அவன்.

சார், அந்தப் படுக்கையில் படுத்திருந்த பெண் இறந்து கிடக்கிறாள் என்று அலறினான் அவன்.

அவள் இறந்துவிட்டது உங்களுக்கு எப்படி தெரியும் என்று கேட்டார் பொறுப்பாளர்.

❖ ❖ ❖

## சிரிப்பாச் சிரிக்க..

நபர் 1: எப்பாடுபட்டாவது டாக்டராகவோ அல்லது பைலட்டாவோ ஆகணும். அதுதான் என் லட்சியம்.

நபர் 2:எப்படியானாலும் ஜனங்களை மேலே கொண்டு போற முடிவோடதான் இருக்கிறாய்.

❖ ❖ ❖

நபர் 1 :எங்கள்வீட்டில்முடிவெடுக்கும் அதிகாரத்தை நானும் குஞ்சியாச்சியும் பகிர்ந்து கொள்வதால் எங்களுக்குள் சண்டையே வருவதில்லை

நபர்2:கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்கோவன். பிறகு எனக்கும் உதவும்

நபர் 1: அது வந்து தம்பி சின்னச் சின்ன விசயங்களிலை குஞ்சியாச்சி தான் முடிவெடுப்பா. அதுகளிலை நான் தலையிட மாட்டன். அது மாதிரி பெரிய பெரிய விசயங்களிலை நான் தான் முடிவெடுப்பன். குஞ்சியாச்சி தலையிட மாட்டா

நபர்2:அதென்ன சின்ன விசயம். பெரிய விசயம்

நபர்1:எட அதோடா இப்ப வீட்டுச் சாமான வாங்கிறது, யார் யார் வீட்டுக்குப் போறது, வீட்டு வரவு செலவு, என்ன சமைக்கிறது, ரிவியிலை என்ன நிகழ்ச்சி பாக்கிறது வங்கிக்கணக்கு வழக்கு இப்படியான சின்ன விசயங்களிலை எல்லாம் குஞ்சியாச்சி தான் முடிவெடுப்பா. ஈராக்கிலை அமெரிக்கா படையெடுத்தது சரியா, டேவிட் பெக்கம் அமெரிக்காவிற்கு விளையாடப் போனது சரியா இது மாதிரி பெரிய பெரிய விசயங்களிலை எல்லாம் நான் தான் முடிவெடுப்பன். அவ தலையிட மாட்டா.

❖ ❖ ❖

நபர் 1: கோடிக்கோடியா சம்பாதிக்க வழின்னு ஒரு புத்தகம் எழுதினீங்களே, அது என்னாச்சு?

நபர்2:அது என்னைத் தெருக் கோடிலே கொண்டு வந்து நிறுத்திடிச்சு.

❖ ❖ ❖

நபர் 1:நான் அந்தக்காலத்தில எட்டு மைல் தூரம் நடந்தே போய் பள்ளிக்கூடத்திலே படிச்சேன்

நபர்1:அப்ப படிப்புக்கும் உங்களுக்கும் ரொம்ப தூரம்ன்னு சொல்லுங்க.

❖ ❖ ❖

மனைவி: ஏங்க..உங்களோட நண்பருக்குப் பார்த்த பொண்ணு நல்லாயில்லன்னு நீங்க கொஞ்சம் எடுத்துச் சொல்லக்கூடாதா?

கணவன்: அவன் மட்டும் எனக்குச் சொன்னானா?

❖ ❖ ❖

ராமு : நண்பா....தினமும்காலையில எழுந்திருச்சி எனக்கு போன் பண்ணுடா..

வேணு : அடடா..என்னே ஒரு நட்பு.

ராமு : அதெல்லாம் ஒண்ணுமில்லடா. தினமும் காலையில நரி ஊளையிடறதக் கேட்டா நல்லதுன்னு சொன்னாங்க.

❖ ❖ ❖

நபர் : மருந்தை எதுக்கு ரோட்டுல கொட்டி தடவுறீங்க?

ஜோன்ஸ்:டாக்டர்தான் சொன்னார், அடிபட்ட எடத்துல மருந்தைத் தடவுங்கன்னு.

# காலம் சொல்லாத கணக்கு

இரவு முழுக்க கடலிலே தங்கிவிட்டு காலை ஆறுமணியளவில் கரைக்கு திரும்பிய அலோசியஸ் கொண்டுவந்த மீன்களையும் ஏலம்போட்டுவிற்றுவிட்டு, ஏழு மணிக்குள்ளாக வீடுவந்து சேர்ந்துவிட்டான்.

பிள்ளைகள் இருவரும் பள்ளிக்கூடம் போக ஆயத்தமாகிக் கொண்டிருப்பதைச் சற்றே பார்த்துக் கொண்டிருந்தவன் அவர்களின் தலையைத் தடவி விட்டபடி, லக்கி, லக்கி என்று உரத்துக் கத்தினான்.

அனுங்கியபடியே வாலை ஆட்டிக்கொண்டு வந்து நின்ற அந்த பெட்டை நாயைப் பார்த்து, இவர்களைப் பள்ளிக்கூடம் வரையில் கொண்டு போய் விட்டு விட்டு வா எனவும், பிள்ளைகளைத் தொடர்ந்து லக்கியும் வெளியேறியது.

மூன்றே வயது நிரம்பிய கடைசிக்குட்டி அலெக்ஸ் படுக்கையில் இருப்பதை ஒருதரம் பார்த்துவிட்டு, வெளியே வந்தவன் இருந்த வாளித் தண்ணீரில் முகம் கை, கால்களை கழுவிவிட்டு, உணவு உண்பதற்கு திண்ணைக்கட்டில் குந்திக் கொண்டான்.

மேரியின் நேற்றுச் சமைத்து வைத்த மீன்குழம்போடு, பொரியலும் அன்று காலையாக்கிய பிட்டும் வாய்க்கு இதமாக இருக்கவே, நன்றாக ஒரு பிடி பிடித்துவிட்டு, வெளியே போய் கையை கழுவிய பின், செம்பிலே இருந்த மிகுதித் தண்ணீரை மடக்கு மடக்கென்று குடித்தான்.

செம்பைக் கொண்டுபோய் குசினியில் வைத்து விட்டு, மீண்டும் வெளித் திண்ணையில் வந்து அமர்ந்து வெற்றிலை போட ஆயத்தமானான். அப்போது அவன் மனைவி மேரியும், திண்ணைக் கட்டின் ஒரு பகுதியில் அமர்ந்தபடியே

"அப்பா சொல்லுறன் எண்டு கோவிக்காதையுங்கோ எத்தனை நாளுக்கெண்டு அந்தப் பிள்ளையள் நடந்து போறது, சயிக்கிள் வாங்கித் தாங்கோப்பா, சயிக்கிள் வாங்கித் தாங்கோப்பா, எண்டு எத்தனை தரம் அதுகள் உங்களட்டைக் கேட்டுப் போட்டுதுகள். ஒரு சயிக்கிள் பழசோ, புதுசோ வாங்கிக் கொடுத்தால் இரண்டு பேருமே அதிலை போகலாம் தானே. என்னவெண்டாலும் அதுகளுக்கு ஒரு முடிவு சொல்லுங்கோவன்" என்று சொன்னவாறு அவனின் பதிலை எதிர்பார்த்து அமைதியாகிவிட்டாள்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அலோசியஸ்

"மேரி முழுக்கவுமே தெரிந்துகொண்டும் ஏன் இப்படிக் கதைக்கிறாய். இடம் பெயர்ந்து வந்து எட்டு வருடம் படாதபாடு பட்டுத்தான், இந்தக் கொட்டில் வீட்டையெண்டாலும் போட்டன். கடன் எடுத்துத்தான் வள்ளமும் எடுத்தது. இப்ப கொஞ்சம் கொஞ்சமாய்க் கட்டி முக்கால்வாசிக் கடன் முடிஞ்சுது. என்னும் கொஞ்சக்காலம் பொறு. கடன் கட்டிமுடிய நான் எடுத்துக் குடுப்பன்தானே" என்றவனின் முகத்தில் கவலையின் ரேகைகள் தெளிவாகவே தெரிந்தன.

கணவன் சொல்லக் கேட்டதும் "ஏதோ யோசித்துச் செய்யுங்கோப்பா. உங்கடை கடன் முடிவதற்கிடையிலை பிள்ளைகளும் வளர்ந்திடும்" என்று சொல்லி விட்டு குசினிக்குப் போய்விட்டாள்.

அலோசியஸ்சும் திண்ணையில் மெதுவாகச் சாய்ந்தவன் தன்னை மறந்து நித்திரை கொள்ளலானான்.

**சிறுகதை**

எழுதியவர்: **த.சு.மணியம்**

பிள்ளைகள் பள்ளியால் திரும்பிய சத்தத்தில் நித்திரை விட்டெழுந்த அலோசியஸ் எழும்பி, முகத்தைக் கழுவி துவாய் ஒன்றினால் துடைத்தபடி பிள்ளைகளுடன் சேர்ந்து சாப்பிட ஆயத்தமானான்.

மூத்தவள் பற்றிமா பதினொரு வயது நிரம்பியவள். அயல் கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். படிப்பில் கெட்டிக்காரி என்று அவளின் வகுப்பாசிரியர் பல தடவை அலோசியசைச் சந்தித்த போது சொன்ன வார்த்தைகள் அவனுக்கு உள்ளூர சந்தோசமாகவே இருந்தது. தான் படிக்காவிட்டாலும் தன் பிள்ளையாவது நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

மற்றவள் நீற்ரா ஒன்பது வயது நிரம்பியவள். நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளும் வகுப்பில் கெட்டிக்காரிதான்.

சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. அலோசியஸ்சே கதையைத் தொடங்கினான். "பற்றிமா, அப்பா இண்டைக்கு இரவு கடலுக்குப் போறன். உனக்கு அதிஸ்டம் இருந்தால், அப்பா வீசுகிற வலைக்குள் நிறைய மீன் விழ வேணும். அப்பிடி விழுந்தால் நாளைக்கு நீ பள்ளிக்கூடத்தில் இருந்து திரும்பி வரேக்கை உன்ரை சயிக்கிள் முற்றத்து மரத்திலை சாத்தி நிக்கும்" என்று பிள்ளைகளையும் உற்சாகப்படுத்தி விட்டு, சாப்பாடு முடிந்ததும் எழும்பி வெளியே போனவன், வீட்டு வேலைகளில் தன் நேரத்தைப் போக்கினான். பிள்ளைகளுக்கோ ஒரே சந்தோசம், நாளை கிடைக்கவிருக்கும் சைக்கிளுக்காக.

இரவு ஏழு மணியிருக்கும், கடலுக்குப் போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தான். ஒரு கட்டு பீடியோடு, நெருப்புப் பெட்டி ஒன்றையும் மடியில் கட்டிக் கொண்டான். தேவையான அளவிற்கு வெற்றிலை பாக்குகளையும் எடுத்தவன், ஒரு பிளாஸ்ரிக் பாத்திரத்தில் குடிப்பதற்கு தண்ணீரையும் நிரம்பி எடுத்துக்கொண்டான்.

மேரி அவன் இரவுச்சாப்பாட்டை, பழைய புதினத்தாளில், வாழையிலையின் உதவியுடன் பக்குவமாக மடித்துக்கட்டி கொண்டு வந்து கொடுத்தாள்.

எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கடலை நோக்கிப் புறப்பட்டான்

பூரண சந்திரனின் நிலவில், பிள்ளைகளின் நினைவோடு ஆங்காங்கே வலைகளை வீசத் தொடங்கினான். வழமைக்கு மாறாக மீன்களும் வலைகளில் சிக்கிக் கொண்டன. மிகுந்த உற்சாகத்துடன் மேலும் மேலும் வலைகளை வீசிக் கொண்டான். போதும் என்ற மனத் திருப்தியோடு காலை ஆறுமணிக்கு சற்று முன்பே கரைக்குத் திரும்பினான்.

எல்லா வள்ளங்களும் கரைக்கு வந்து சேராத நிலையிலும் கடற்கரை சற்று களைகட்டியிருந்தது. வந்த வள்ளங்களின் மீன்களை ஏலம் போடுவதில் சம்மட்டிமாரின் குரல்கள் ஓங்கி ஒலித்தபடியே இருந்தது. வழமையாகத் தன் மீன்களைக் கொடுக்கும் சம்மட்டி சாமுவேல் மீன்களைப் பொறுப்பேற்றார். தனக்குரிய பங்காக இரண்டு பெரிய விளை மீன்களை எடுத்து தன் பக்கம் போட்டு விட்டு ஏலத்தைக் தொடங்கினார்.

பெரிய கறுப்பு இறால் ஒரு பெரிய கூடையிலும், அத்தோடு விளைமீன், கட்டாப்பாரை, அறக்குளா போன்ற மீன்களின் குவியலும் ஏலத்துக்கு ஆயத்தமாகின. எலம் சூடுபிடிக்கத் தொடங்கியது. இறுதியில் மூவாயிரத்து இருநூறு ரூபாவுடன் ஏலம் முடிவடைந்தது. பணத்தினைப் பெற்ற சம்மட்டி சாமுவேல், அத் தொகையில் இருநூறு ரூபாவை தன்பங்காக எடுத்துக் கொண்டு மூவாயிரம் ரூபாவை அலோசியஸ்சிடம் கையளித்தான். பத்திரமாக வாங்கி பணத்தை மடியில் கட்டிக் கொண்டு, வீடு வந்து சேர ஏழு மணியாகிவிட்டது.

பற்றிமாவும் நீற்ராவும் அப்போதுதான் நித்திரை விட்டு எழும்பி பள்ளிக்கூடம் போவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மெதுவாக தன் பிள்ளைகளை அழைத்த அலோசியஸ் "நீங்கள் நன்றாகப் படிக்கவேண்டும் இண்டைக்கு நீங்கள் பள்ளிக்கூடத்திலையிருந்து திரும்பி வரயிக்க உங்களுக்கென ஒரு சயிக்கிள் முற்றத்து மரத்திலை சாத்தியிருக்கும். சந்தோசமாக போட்டு வாங்கோ." என்ற வார்த்தைகளைக் கேட்ட அந்த பிஞ்சு மனங்களின் சந்தோசத்தின் விளைவுகளை அவன் மட்டுமல்லாது மேரியும் கூட தன்னை மறந்தாள்.

பற்றிமாவும், நீற்ராவும் பாடசாலையில் வகுப்புக்குள் நுழைந்துவிட்டார்கள். முதல் பாடமும் ஆரம்பமானது. லக்கி மட்டும் இன்று வீடு திரும்ப விருப்பமின்றி பாடசாலை மதிலின் வெளிவாசலில் இருந்தபடியே தன் வாலை நிலத்தோடு அடித்துக் கொண்டே இருந்தது. இன்று பற்றிமாவுக்கும் பாடத்தில் கவனம் ஓடவில்லை. வரப்போகும் சயிக்கிள் பற்றிய சிந்தனையில் மூழ்கி இருந்தாள்.

குளித்து முடிந்த அலோசியஸ் குசினுக்குள் நுழைந்தான். "மேரி, இப்ப சாப்பிட்டுவிட்டு ரவுணுக்குப் போகவேணும், பிள்ளைகள் வரயிக்க சயிக்கிள் முற்றத்தில் நிக்கவேணும், என்ன சாப்பிடக் கிடக்கு, எடுத்து வையுங்கோ" என்றபடி விரும்பிச் சாப்பிடுபவன் என்பதை மேரி அறிவாள்.

இறால் பொரியல், மீன் குளம்பு சகிதம் உடன் அவித்த பிட்டையும் போட்டுக் கொடுத்து, பக்கத்திலேயே ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டாள். சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், விக்கல் எடுக்கவே 'மேரி தண்ணீர் தாங்கோம்மா' என்று கேட்டதும் தன் தவறையும் உணர்ந்தபடி செம்பையும் எடுத்துக் கொண்டு வெளியே இருந்த குடத்தை நோக்கி அவசரமாகப் போனவள் வெளியே நின்றபடியே

"அப்பா கடற்கரையைத் தெரியேல்லை ஏதோ இரைச்சல் கேட்டுக் கொண்டிருக்கிறது" என்றபடி தண்ணீர் எடுக்காமலே உள் நுழைந்தவள், தன் மகன் அலெக்சைத் தூக்கிக் கட்டிப்பிடித்தபடி ஒரு கற்தூணுடன் ஒண்டிக் கொண்டாள். ஒன்றும் அறியாத அலோசியஸ், இவள் ஏன் இப்படிப் பயப்படுகிறாள்? வெளியே போய்ப் பார்ப்பம் என்றவாறு, எச்சில் கையோடு வீட்டுக்கு வெளியே வந்தவன் தான், உருண்டு, திரண்டு பிரண்டு வந்த அந்த அலை அவனைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு சென்றது.

அந்தக் கடற்கரைப் பிரதேசமே சுடுகாடாக, சூனியப்பிரதேசமாக ஒரு சிறு நிமிடங்களுக்குள் காட்சியளித்தது. இந்தச் செய்தி குறுகிய நேரப் பகுதிக்குள் பள்ளிக்கூடத்துக்கும் எட்டிவிட்டது. ஆசிரியர்கள் பிள்ளைகளை பாதுகாப்பான பகுதிக்குள் சேர்த்துக் கொண்டார்கள். நேரம் செல்லச் செல்ல பிள்ளைகளோடு ஆசிரியர்களும், பள்ளிக்கூடத்தைச் சுற்றவுள்ள கிராம மக்களுமாக கடற்கரையை நோக்கி மெது மெதுவாக நடக்கத் தொடங்கினார்கள். லக்கி பள்ளிக்கூட வாசலில் நிற்பதைக் கண்ட பற்றிமா "நீ இண்டைக்கு வீட்டை போகவில்லையோ ஏன்" என்று கேட்டதும், அது தன் உணர்வுகளைக் கூற முடியாமல், ஊளையிட்ட சத்தம் அங்கு நின்றவர்களால் எதுவுமே புரிய முடியாமல் இருந்தது.

கரையை அண்மிக்க அண்மிக்க மணல் மேடுகளும், தூக்கி வீசப்பட்ட வீடுகளும், உடைந்த வள்ளங்களும், வேரோடு சாய்ந்து நிற்கும் மரங்களும், ஆங்காங்கே உயிரற்ற உடல்களுமாக அந்தக் கடற்கரைப் பிரதேசம் காட்சியளித்தது. பற்றிமாவும் நீற்ராவும் தங்கள் வீடு இருந்த இடத்தில், ஒரு மண் மேடு மட்டும் இருப்பதைக் கண்டார்கள். சிறு தொலைவில் சாய்ந்து விழுந்த பெரிய மரத்தின் இடையில் தம்பியை அணைத்தபடி தாயையும் உயிரற்ற நிலையில் கண்டவர்கள், ஐயோ, ஐயோ என்று கத்திய காட்சி, அந்த ஊர் மக்களின் மனங்களைக் கலங்க வைத்தன. லக்கி மட்டும் வெறிபிடித்தது போன்று, அந்தக் கடற்கரைப் பிரதேசமெங்கும் மண்ணை மணந்து முனகியபடி அலைந்து கொண்டே திரிந்தது.

ஆமாம், அது தன் எசமானன் எங்கிருக்கிறான், அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியோ யாருக்கும் புரியவில்லை. அழுது கொண்டிருந்த பிள்ளைகள். அப்பா எங்கே போனார். ஆமாம் இன்று சயிக்கிள் வாங்க ரவுணுக்குப் போயிருக்கக் கூடும். ஏன் இன்னும் திரும்பவில்லை? ஏதாவது நடந்திருக்குமோ. பிள்ளைகள் கத்தத் தொடங்கினார்கள்.

"எங்களுக்கு சயிக்கிள் வேணாம், அப்பாவே வேணும் - எங்களுக்கு சயிக்கிள் வேணாம் அப்பாவே வேணும்" என்று கத்திய அவர்களின் அலறல் அந்தப் பரந்த வெளியெங்கும் எதிரொலித்தது.

காலம் எழுதிய கணக்கை இந்தப் பிஞ்சு மனங்கள் எப்படி அறிவார்கள். ஆனாலும் இந்தப் பிஞ்சு மனங்களுக்கு காலம் என்றொரு நாள் கணக்குச் சொல்லித்தானே ஆக வேண்டும்.



**Engine Tec Motors**

*We Offer Facilities For:*

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre-MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.

Ask for **Vel** or **Rajan**
Tel: 020 8640 8000 / 020 8640 1230
Mob: 07860 226 476 / 07860 770 945

**Engine Tec Motors**
Unit 5, 339 London Road,
Mitcham, Surrey CR4 4BE
Email: vel@etmluk.com
Web:www.etmluk.com

# சினிமா



விமர்சனம்

## உளியின் ஓசை

சரித்திரப் படங்களின் ஆயுள், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து ஈசலின் வயதை எட்டி வருகிற நிலையில், மற்றுமொரு சரித்திரப்படம்.

ஆனால், ஆயுளுக்கும் ரசிக்கிற மாதிரி கருத்தையும், எழுத்தையும் கலந்து கொடுத்திருக்கிறார்கள்

அதிலும், க்ளைமாக்சுக்கு முன்பு கதையில் வருகிற ட்விஸ்ட், மனசை உலுக்கும் ஆயிரம் வாட் ஷாக்!

சோழ மன்னன் ராஜராஜன், காலமெல்லாம் நிலைத்திருக்கும் விதமாக ஒரு கோவில் கட்ட நினைக்கிறான். புகழ்பெற்ற சிற்பியான வினித்திடம் சிலை வடிக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். ஆடற்கலையை வெளிப்படுத்தும் 100 சிலைகளை வடிக்க முடிவெடுக்கும் வினித், மாடலுக்கு ஒரு நடன மங்கையை தேடுகிறார்.

சோழ மண்டலத்தின் அரசவை நர்த்தகி கூட, வினித்தின் தேர்வில் ஃபெயில் மார்க் வாங்க, ஆட்டுக்காரியின் பேத்தி ஒருத்தி அசத்துகிறார் நாட்டியத்தில். பிறகென்ன, அவரையே மாடலாக வைத்து சிலைகள் உருவாகிறது.

இதற்கிடையில் அரசவை நர்த்தகி அட்சயாவுக்கு வினித் மேல் காதல். வினித்திற்கோ ஆட்டுக்காரியின் பேத்தியான கீர்த்திசாவ்லா மீது காதல். இந்த முக்கோண காதலின் முடிவு, பெருந்தச்சன் வினித்திற்கு மட்டுமா அதிர்ச்சியை கொடுக்கிறது? படம் பார்க்கிற நமக்கும்தான்!

சிற்பி கேரக்டருக்கு வினித்தை விட பொருத்தமாக வேறு நடிகர் கிடைக்கமாட்டார். அந்தளவுக்கு கச்சிதம். அரசவை நர்த்தகி அட்சயா முன், தானே நாட்டியம் ஆடி அரசவையை அசர வைப்பது அழகு.

தன்னை கொல்ல வருபவனுக்கு கூட, பாசத்தோடு பச்சிலை போட்டு அனுப்புவதும், அட்சயாவின் உயிரை காப்பாற்றிவிட்டு, அதை அவரிடம் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதும், மனிதாபிமானத்தின் அடையாளம்.

எக்குத் தப்பான அழகு அட்சயாவுக்கு. துவக்கத்தில் நீலாம்பரியாக தோன்றினாலும், முடிவில் கைதட்ட வைக்கிறார். இவர் ஆடும் அந்த பாம்பு டான்ஸ் பிரமிப்பு!

ஆட்டுக்காரியின் பேத்தியாக கீர்த்திசாவ்லா. நடிக்க அதிக சந்தர்ப்பம் இல்லை. அடிக்கடி உதடு சுழிப்பதும் மைனஸ்.

கஞ்சா கருப்பும், கோவை சரளாவும் அவ்வப்போது சிரிக்க வைத்தாலும் பெரும்பாலான காட்சிகளில் எரிச்சலூட்டுகிறார்கள். போதாததற்கு மனோரமா வேறு. இவர் ஆடுகிற ஆட்டத்தை கூசாமல் நறுக்கினால் நேரம் மிச்சம்.

இளையராஜாவின் இசையில் எல்லா பாடல்களும் தேன்! பாடல் வரிகளும் சிலை வடிப்பதை போல் அழகாக வடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மு.மேத்தா எழுதியிருக்கும் புலர்கின்ற பொழுது காட்டும் பாடல் அற்புதம். பல இடங்களில் உணர்ச்சி ததும்பும் வசனங்களை ராஜாவின் பின்னணி இசையே பேசிவிடுகிறது.

'சிறகிருக்கிறது என்பதற்காக சூரியனுக்குள் குதிப்பாயா?' என்று அனல் கக்கும் வசனங்கள். இடையிடையே வசனங்களில் நகைச்சுவையும் இழையோடியிருப்பது சிறப்பு.

கிழவியை பின் தொடரும் வினித், அவரை காதலி என்று நினைத்து அழைக்க, கிழவியோ 'நான் கல்யாணம் ஆனவங்க' என்று பதறி ஓடுவதை சொல்வதா? தனது பெயரை சொல்லும் முன் 'அதாவது' என்று ஆரம்பிக்கும் வினித்திடம், 'அதாவது என்று ஒரு பெயரா' என்று அட்சயா நக்கலடிப்பதை சொல்வதா?

படத்தை எந்த இடத்திலும் தொய்வு விழாதபடி நகர்த்தியிருக்கிறார் இயக்குனர் இளிவேனில்.

அடிதடியும் வில்லத் தனமுமே சினிமா என்று ஆகி விட்ட நிலையில் ஒரு நல்ல கலைப்படைப்பைத் துணிந்து தயாரித்தளித்ததற்காக உளியின் ஓசை கலைஞர்களுக்கு தாராளமாகப் பாராட்டுக்களைச் சொல்லலாம்.

- பரா

## சினித்துளி

### மீண்டும் ஹொலிவூட்டில்



ஹாலிவுட் படம் ஒன்றில் விபச்சார அழகி பாத்திரத்தில் நடிக்க ஐஸ்வர்யாராய் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஐஸ்வர்யாராய்க்கு திருமணத்திற்கு பிறகும் ஏராளமான பட வாய்ப்புகள் வருகின்றன. மணிரத்னம் இயக்கும் ஒரு படத்திலும், தமிழில் ரஜினிக்கு ஜோடியாக ரோபோ படத்திலும் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார். இதைத் தவிர இந்தியிலும் நிறைய படங்களில் நடிக்க உள்ளார்.

இந்நிலையில் சாஸ் என்ற ஹாலிவுட் படத்தில் நடிக்க ஐஸ்வர்யா ராயை அணுகியுள்ளனர். அதில் வித்தியாசமாக விபச்சார அழகி பாத்திரம் என்றதும் ஒப்புக் கொண்டுள்ளார். இதில் அவருக்கு ஜோடியாக பிரபல ஹாலிவுட் நடிகர் எரில் ஸ்ட்ரிப் நடிக்கிறார்

### ஆச்சிக்கு டாக்டர் பட்டம்



தமிழ்த் திரையுலகில் பல தசாப்தங்களாய் தன் திறமையால் நிலைத்திருப்பவர் மனோரமா. இவருக்கு திரையுலகம் வைத்த செல்லப் பெயர்தான் 'ஆச்சி'. இவர் வந்து 50 ஆண்டுகள் ஆகப்போகிறது.

இந்த நேரத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகம் மனோரமாவிற்கு டாக்டர் பட்டம் வழங்குவதாக அறிவித்துள்ளது.

1958-ல் கவியரசு கண்ணதாசனின் மாலையிட்ட மங்கை படத்தில் தொடங்கிய சினிமாப் பயணத்தில் பல மொழிகளிலும் 1300 இற்கு மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்

### திறமைகளை மதிக்காத சினிமா



திறமைகளை மதிக்கத் தெரியாத சினிமாவுலகம் என திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார் சிறந்த நடிப்புக்காக தேசிய விருது பெற்ற ப்ரியாமணி.

தேசிய விருது வாங்கிய பின்னர் யாரும் கண்டு கொள்ளவில்லையாம். அம்மணியின் கோபத்துக்குக் காரணம் அது தான்.

பருத்தி வீரன் படத்துக்கு தேசிய விருது கிடைக்கும்வரை முத்தழகி ப்ரியாமணிக்கு விதம் விதமாக கவர்ச்சி காஸ்ட்யூம் அணிவித்துப் பார்க்க ஆவலாக இருந்தனர் தமிழ்ப் படைப்பாளிகள். அதற்கு ஏற்ற மாதிரி அவரும் கவர்ச்சி உடை அணிந்து வலம் வந்தார்.

தேசிய விருதுக்கு அவர் பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு அவரைத் தேடி வரும் வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்து விட்டன. சமீபத்தில் தான் நடிக்கவிருக்கும் புதுப் படங்கள் குறித்து பேசுகையில் பொரிந்து தள்ளிவிட்டார் ப்ரியா.

நல்ல நடிகைன்னு பெயர் வாங்கினா இவ்வளவு கஷ்டமா... அவார்ட் வாங்கறதுக்கு முன்னாடி நிறையப் பேர் வந்தாங்க. வித்தியாசமா, கலர்புல் வேடம்னு சொல்லிட்டுப் போனாங்க. இப்போ அவங்க எங்க இருக்காங்கன்னே தெரியல. விருது வாங்கறது அவ்வளவு பாவமான விஷயமா. குறிப்பா முன்னணி ஹீரோக்கள் சிலர் என்னை மட்டும் தங்கள் படங்களில் ஒப்பந்தம் செய்யக் கூடாது என்கிறார்களாம். அப்படி என்ன செய்துவிட்டேன் நான், என்கிறார் ப்ரியா.


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from concept to design

'பொங்கு தமிழ்' வெற்றி பெற வாழ்த்துக்கள்

தாய்நிலம் தனியரசாகிட.... பொங்கு தமிழாய் பொங்கி எழுவோம். வாருங்கள்

Over 19 years of experience in the East London Property market.
Tilko states offers you a wealth of experience & insight

TILKO ESTATES

SALES
LETTINGS
MORTGAGES

Residential Sales/Residential Lettings arrangement / Construction & Development / Financial Services Investment Properties / Commercial and Business Transfers / Commercial mortgages Arranged

All types of commercial properties available
Finance arranged for purchase of business.

*Please call us for further information on* **07957 400 777**

**East Ham**
213 High Street North
London. E6 1 JG

T: 020 8472 0029
F: 020 8503 5996
*eastham@tilko.co.uk*

**Stratford**
1 Leytonstone Road
London. E15 1JA

T: 020 8503 1999
F: 020 8503 0999
*stratford@tilko.co.uk*

**Walthamstow**
252 Hoe Street
London. E17 3AX

T: 020 8520 9968
F: 020 8503 7661
*walthamstow@tilko.co.uk*

**2008 SUMMER & WINTER OFFERS**

மிகவும் குறைந்த கட்டணத்துடன் சிறந்த சேவைகளுடன்
உங்கள் பயணத் தேவைகளை நிறைவுடன்
செய்து தரக் கூடிய ஒரே ஸ்தாபனம்

sonatours

We do Specialise tours for charities, communities and organisations
Contact us now for 2008 brochure

**0208 951 0111** or www.sonatours.co.uk

## COACH HOLIDAYS

**PARIS & DISNEYLAND RESORT- 4 DAYS**
July-04,11,18,25, Aug-01,08,15,22,29, Sep- 26, Oct- 17,24 Dec- 19,23
Free: Boat ride on R.Seine, night parade & fireworks
Adult: £245 Child: £179

**PARIS & DISNEYLAND RESORT- 3 DAYS**
Jul-05,12,19,26, Aug-02,09,16,23,30, Sep- 06,27, Oct-18,25, Dec-24
Free: Boat ride on R.Seine, night parade & fireworks Adult: £170 Child: £135

**EUROPEAN TRIANGLE- 4 DAYS**
Jul-05,12,19,26, Aug - 02,09,16,23,30, Sep- 06,27, Oct-18, Dec-24
Free: Indian Dinner on R.Rhine Cruise Adult: £230 Child: £175

**SCOTLAND TOUR- 4 DAYS**
Jul- 10,17,24, Aug- 07,21, Sep- 18, Oct- 23, Dec-19
Free: Gondola ride on Nevis Range Adult: £299 Child: £190

**SWISS & DISNEY RESORT PARIS- 5 DAYS**
Jul-24,31, Aug-14,28, Sep- 18, Oct- 22, Dec-24
Free: Boat ride on R.Seine Adult: £320 Child: £250

**PANAROMIC TOUR- 5 DAYS**
Jul- 04,11,18,25, Aug-01,08,15,22,29, Sep-05,12,26, Oct-18,24, Dec- 22
Free: Mini Europe Adult: £330 Child: £250

**SWISS EXPRESS- 5 DAYS**
Jul- 03,10,17,24,31, Aug- 07,14,21,28, Sep- 04,11,25, Oct- 16,26, Dec- 23
Free: Boat ride on swiss lake Adult: £270 Child: £200

**AUSTRIAN EXPRESS- 6 DAYS**
Jul- 15,22,29, Aug- 05,12,19,26, Sep-16, Oct-21,Dec-23
Free: Zwolferhorn gondola cable car Adult: £340 Child: £260

**SIESTA IN SPAIN- 8 DAYS**
Jul- 09, 26, Aug- 09,23 Oct-18, Dec-20
Free: Unlimited rides in PortAventura Adult: £399 Child: £299

**MAGIC OF ITALY- 9 DAYS**
Jul-26, Aug-09,23, Sep- 20, Oct-18
Free: Time Elevator Show Adult: £569 Child: £469

**EUROPEAN MASTI- 15 DAYS**
Jul-26, Aug-09,23, Sep-20,Oct-18
Free: All excursions included Adult: £1,199 Child: £869

Adult price is based on twin sharing & Child is between 2-11 yrs



## FLIGHT HOLIDAYS

**SWISS WEEKEND BREAK- 3 DAYS**
Jul-26, Aug-09,23, Sep-13, Oct-18
Free: Trummelbach Falls Adult: £399 Child: £349

**EGYPT- 8 DAYS**
Dates- Sept- 1, Oct -21, Nov -10 and Dec-02
Free: Abu Simbel Adult: £749 Child: £649

**SWISS ALPINE TOUR- 6 DAYS**
Jul-10,24 Aug- 07,21, Sep-18, Oct 23
Free: Glacier Paradise matterhorn Adult: £659 Child: £499

**ITALY TOUR- 6 DAYS**
Jul-10 ,24 Aug- 07,21, Sep-18, Oct 23
Free: Time Elevator Show Adult: £599 Child: £499

**CLASSIC EASTERN EUROPE- 7 DAYS**
Jul-22, Aug-05,26, Sep- 16, Oct -21
Free: unlimited use of Spa Adult: £649 Child: £479

**TREASURES OF INDO CHINA- 15 DAYS**
Aug-06, Nov-05, Jan-14 Adult: £2,199 Child: £1,699

OTHER DESTINATIONS: EGYPT, KENYA, TANZANIA, INDIA, SRILANKA, MALDIVES, DUBAI, OMAN

All the tours include:
- All meals- indian, vegetarian and halal
- FREE pick points for all Coach Holidays from Birmingham, Coventry, Leceister, Milton Keynes, Luton and London
- Premium services of Bi-Lingual Tour Manager
- All Flight tours include taxes and surcharges

Sona Tours terms and conditions apply


OXYGEN
Chettinhad Cuisine
Homly food with a family taste
Chettinhad cuisine originates from the Chettinhad region of Tamil Nadu in South India. Chettinhad is one of the driest regions of South India. The Chettiar community, who are a majority in this region, are a very successful trading community. Chettinhad cuisine is one of the spiciest and the most aromatic in India. Chettinhad cuisine is famous for its use of a variety of spices used in preparing mainly non-vegetarian dishes. The dishes are hot and pungent with freshly ground masalas.
NOW OPEN
Restaurant ~ Take Away ~ Private Parties
Home Delivery ~ Outside Catering
Make your booking in advance for family function such as Birthday Parties
We accpet all major credir cards
Maestro
VISA
MasterCard
DELTA
ALL FOODS ARE PREPARED BY EXPERIENCED CHEFS FROM KARAIKUDI, SOUTH INDIA
10% DISCOUNT ON TAKE AWAY
436 Alexandra Avenue, Harrow, Middlesex, HA2 9TW
T. 020 8866 4960, 07771 788598